யாழ்ப்பாணம் - கரணவாய்

மூத்த விநாயகர் ஆலய

மஹாகும்பாபிஷேகத்தை முன்னிட்டு வெளியிடப்பட்ட

# "பிள்ளையார் பாமாலை"

21.01.2019



"மகான்களின் வழியில் மெய்ப்பொருள் காண்"


## சைவப்பிரகாசம்



Spirtual Journal of Saiva Pragasam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் - கரணவாய்
மூத்த விநாயகர் ஆலய
மஹாகும்பாபிஷேகத்தை முன்னிட்டு
வெளியிடப்பட்ட

# "பிள்ளையார் பாமாலை"

## 21.01.2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மகான்களின் வழியில் மெய்ப்பொருள் காண்"

# சைவப்பிரகாசப் பேரவை

Spirtual Journal of Saiva Pragasam

**ஸ்தாபகர்**
பண்டிதர்
தி.பொன்னம்பலவாணர்

**சைவப்பிரகாசப் பேரவை**
**நிறைவேற்றுப் பணிப்பாளர்**
திரு.இ.வசந்தசேனன்
(ஓய்வு நிலை நீதிபதி)

கலாநிதி
ம.பாலகைலாசநாதக் குருக்கள்
(சிரேஷ்ர விரிவுரையாளர்)

**தலைவர்**
ஆனந்தம் குமாரசாமி
தொ.பே: 0094773901877

**செயலாளர்**
வே.சிவகுருநாதன்
(நிர்வாக ஆசிரியர்)
தொ.பே: 0094773783316

**பொருளாளர்**
க.ரவிச்சந்திரன்



குருவே துணை

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம் பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

ஆலயத் தொண்டின் பால் இணைந்து எமது ஆலயம் எமது பிள்ளையார் என்ற வைராக்கியத்துடன் பங்களிப்புச் செய்த அனைத்து அடியார்களின் பாதம் பணிந்து ஆலயத்தின் திருப்பணி வேலைகளை முன்னின்று செய்வித்த வைத்திய கலாநிதி க.கேதீஸ்வரன் குடும்பத்தினர், சபாரத்தினம் கிருஷ்ணமூர்த்தி குடும்பத்தினரின் மன உறுதியையும் தலைமைத்துவப் பண்பையும் பாராட்டுகிறோம். பிள்ளையார் மீது எமக்கு இருக்கின்ற பற்றுறுதி காரணமாக இந்த பக்தி பாமாலை 21.01.2019 திங்கட்கிழமை தைப்பூச தினமான அன்று நடைபெற்ற கும்பாபிஷேக தினத்தில் வெளியிட்டு வைப்பதில் மனநிறைவை அடைகின்றோம்.

செயலாளர்.
சைவபிரகாசப் பேரவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (யாழ்ப்பாணம் கருணைவாய்)
## ஸ்ரீ மூத்தநாயனார் திருப்பதிகம்

இனிமைதரு மருமறைகள் இயைந்தபிர ணவனே
புனிதமழ விடையனருள் புகழ்விரவு புதல்வா
கனிதழுவு கரமுடைய கஜமுகனே காப்பாய்
முனிவர்புகழ் கருணைநகர் மூத்தநயி னாரே.

அத்தனுட னம்பிகையும் அணைத்தகண பதியே
புத்திசித்தி யுதவுகொடை பொலியங்குச பாசா
நித்தமுன தடிபரவும் நிறைதவத்தை யருள்வாய்
முத்தமிழின் கருணைநகர் மூத்தநயி னாரே.

ஆலமரு மரணிரத வச்சறுத்த பரனே
நீலவண்ணன் திகிரிதரு நெடுவிகட நிமலா
காலனெமை யணுகாத கதிகொடுக்கும் சிவமா
மூலமெனும் கருணைநகர் மூத்தநயி னாரே.

ஆர்த்துவருங் காவிரியை அளித்தபரம் பொருளே
கூர்த்தமருப் பாற்சுருதி குறித்தவிநா யகரே
கீர்த்திமலர் கலைமலையின் கிரணவதி கார
மூர்த்தியெனும் கருணைநகர் மூத்தநயி னாரே.

அதிபனென அகிலாண்ட மமர்ந்தருளு மரசே
மதியையவ மதித்துநலம் வழங்குகுண நிதியே
விதியையழித் துயர்வளிக்கும் வேதியனே கைலை
முதியவனே கருணைநகர் மூத்தநயி னாரே.

வழங்குமயி லழகன்குற மாதைமணம் புரிய
பழங்களிறு வடிவில்வரு பரமசிவ குருவே
விழங்குகனிக் குருணையடி விருந்துதவ வேண்டும்
முழங்குமறைக் கருணைநகர் மூத்தநயி னாரே.

மன்னுதிரு முறைதிகழ வரங்கிடந்த நம்பி
தன்னினைவு சரதமுறத் தந்தபெரு மானே
நின்னடிமைப் பணிபுரியும் நிலைத்தசுக மருளே
முன்னவனே கருணைநகர் மூத்தநயி னாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெக்கிநினை வார்க்கருளி நினையார்க்குத் துன்ப
விக்கினமும் விளைத்தளிக்கும் விதரணவி நோதா
எக்கணமும் நினதுபுகழ் இசைக்கவர மீவாய்
முக்கணனே கருணைநகர் மூத்தநயி னாரே.

நாவிலெழும் ஓசையென ஞானமென நவிலும்
காவியமு மெனவிந்து கலைநாத மெனவே
சீவருறு சுகங்காட்டும் சேவடியைத் தருவாய்
மூவர்தொழு கருணைநகர் மூத்தநயி னாரே.

சத்திமிக முடல் வலிமை சந்தானச் செல்வச்
சித்திமிகு மனவுறுதி சீரான கல்விப்
பத்திமிக பண்புசுகம் பாலிப்பாய் நீயே
முத்திநெறிக் கருணைநகர் மூத்தநயி னாரே.

## சமர்ப்பணம்

அன்புருகிப் பணிந்துதின மஞ்சலிக்கு மடியார்
முன்புவரும் தடங்கருணை மூத்தநயி னாரின்
இன்பமுயர் கவிமாலை ஏந்தலவன் கழற்கே
என்புருகி இதயமலர்ந் தேற்றியணிந் தேனே.

அருட்கவி சீ.விநாசித்தம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

கருணைவாய் வடக்கு

## மூத்தநயினார் பதிகம்

### காப்பு
### வெண்பா

மாவார் வடகருணை வாய்த்தந்தி மாமுகனாம்
நாவாரும் நன்மூதத் நாயனார்மேல் - பாவாருங்
காதற் பதிகங் கழறவவன் றாள்பணிவேன்
ஏதந் தவித்தருள் வெற்கு.

### நூல்
### ஆசிரிய விருத்தம்

பூமேவு தந்திமா முகமுநல் லன்பரிடர்
போழ்ந்திடும் விழிகண் மூன்றும்
பொன்னா லியற்றியொளிர் நவமணி பதித்திடும்
பொற்புறு கிரீடமதுவுங்
காமேவு தேன்சொரியு மாத்திமலர் மாலைசேர்
கவினோங்கு மகன்மார்பகமுங்
கசடர்மருள் போக்கிடும் பாசமுடன் மேன்மையார்
காட்சியங் குசமுமினிய
தேமேவு மோதகமு மேனிமிளிர் கைகளுஞ்
செய்யதா மரைநிகர்க்குந்
திருவடியு நன்கிவட் கண்டுகளி கூர்ந்துளந்
தெளிவுற வெனக்கருளுவாய்
மாமேவு மாளிகைகள் சாருமா வணமோங்கு
மகிமையார் கருணைவாயில்
வாழ்மூத்த நாயனா ரென வோது தேவனே
வரசித்தி விக்நேசனே. -1

கரைமருவு கண்டனடி பூசனை செய் துய்ந்திடக்
கருதியே யிந்திரன் சீ
காழிநகர் வைத்தபூஞ் சோலைநீ ரின்றியே
கருகியிட நினதுபாதம்
நறைமருவு மோதகா திகளுய்த் தருச்சிப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்ணியவன் வேண்டியாங்கே
நற்றவ மியற்றுகும் போற்பவன் பாற்பரம
னல்குகா விரியாற்றினை
உறைகருங் கொடியதாய்க் கமண்டலத் தினினின்று
முர்வியிற் செலக் கவிழ்த்தோய்
உனதுதாண் மலரிணைக ளெப்பொழுது மேத்தியே
யுய்ந்திட வெனக்கருளுவாய்
மணையவர்க் ளாதியோர் செல்வநெறி மேவியே
வதியுநற் கருணைவாயில்
வாழ்மூத்த நாயனா ரெனவோது தேவனே
வரசித்தி விக்நேகனே. -2

அருமறை வகுத்திடும் வியாதமுனி யன்பினோ
டடிமலர்கள் போற்றி யேத்தி
ஆறிரண் டாண்டுகா றுயர்நொன்ப தாற்றிடலு
மவ்விடைத் தோன்றியன்னோன்
கருதியிடு பதினெட்டு வகைசேர் புராணங்கள்
பழுகுதற் கருள்புரிந்தோய்
கழலிணை பணிந்தடியர் யாதுயா தெண்ணிலுங்
காட்சிதந் தருடன்மையால்
இருமையா மீசனே யென்றெவரு மேத்தியிடு
மெந்தையின் பாதயுகளம்
எப்பொழுதும் மெண்ணுவே னோய்வறுமை நீக்குதற்
கென்மே லிரங்கியருள்வாய்
மருமருவு சோலைசேண் செல்கதிர் விலக்கியிட
வளருநற் கருணைவாயில்
வாழ்மூத்த நாயனாரெனவோது தேவனே
வரசித்தி விக்நேசனே. -3

பாபநிறை மதுகைட பப்பெயர்கொ ளசுரரொடு
பற்பகற் சமரியற்றிப்
பாசம் தெய்தலான் மணைந்துவந் துன்னடிகள்
பணிந்துநன் கேத்துபத்ம
நாபனா மாயவன் பகைகொளத் தானவரை
நாடியே கொன்று வெற்றி
நண்ணுதற் கேற்றிடு முபாயமினி தோதியே
நல்லவர மீந்தவிறைவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபதூ பாதிபல கொண்டுநின் பாதமலர்
சேவித் திறைஞ்சுகின்றேன்
சிந்தைமகிழ் வுற்றிடத் தக்கபற் பலசுகச்
சீருதவி யருளுவாயே
மாபலா தென்னைகமுகு கிக்குமா துளையாதி
வளமேவு கருணைவாயில்
வாழ்மூத்த நானா ரெனவோது தேவனே
வரசித்தி விக்நேகனே. -4

ஆவியுடல் வாழ்வநித் தியமென்கை தேர்வுறீஇ
யம்புஜம தன்னநின்றாள்
ஆராத காதலாற் பற்பலுப சாரமோ
டரியபூ சனையியற்றி
நாவினிய தோத்திரம தெப்பொழுது மோதியிடு
நல்லநெறி யொழுகுவோரை
நயமான நின்னருட் குரியரா மறிவிலார்
நரகினிடை வீழ்ந்துழலுவார்
தாவிவரு மூஷிகத் தேறியரு ளீசனே
சாமியே மூடனேன்செய்
சாற்றருந் தீவினைக் கூட்டங்கள் பற்றறச்
சாடியே யருள்செய்குவர்
வாவிகுள மினியகூ பாதிநீர் நிலைபலவு
மன்னியுள கருணைவாயில்
வாழ்மூத்த நாயனா ரெனவோது தேவனே
வரசித்தி விக்நேசனே. -5

குறுகியுயர் கவர்மறலி வீதியத தினில்வந்து
கோதிலாவுயிர் கடம்மைக்
கொன்றவன லாசுரனை மிளிர்துதிக்கையினாற்
குட்சியி லடக்கவுடனே
உறுமுதர மன்றியுல குயிரெலா மங்கிபட்
டொப்பவுலை வுற்றகாலை
உற்றமுனி வோரறுகு திரளாக வேந்திவந்
தோதிமனு வர்ச்சித்தலும்
பெறுபேறு பெற்றெலா வுயிருந் தழைத்தலாற்
பெருகருள்செ யிறைவநீயே
பேதையே னின்பாத மலர்கடூ யேத்துவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமநன் றரள்செய்குவாய்
மறுவிலா விருநிதிக் கிழவரே யனையநன்
மக்கள்சேர் கருணைவாயில்
வாழ்மூத்த நாயனா ரெனவோது தேவனே
வரசித்தி விக்நேசனே. -6

செய்யமணி மாயனார் மரைமலர்க ளாயிரஞ்
செங்கையிற் கொண்டுபன்னாட்
செய்பூசை மகிழ்ந்துமுன் பரமசிவ னீந்துள்ள
திகிரிதான் பெறவிரும்பித்
துய்யநின் முன்புநின் றழகுமிக விகடமாய்ச்
செப்புகூத் தாடிநிற்கச்
சீதரன் சேனைபதி பெறுமா றருள்செய்த
தேவனே கருணைமூர்த்தி
நொய்யதளி ரன்னநின் பாதமல ரேத்துவேன்
நுவலருந் திருவுமுடியில்
நூல்வலோர் மேலாக வோதியிரு முத்தியும்
நுதல்விழிப் பரமவருள்வாய்
மையலது நீங்கியே முத்திநெறி யொழுகிவரு
மக்கள்மிகு கருணைவாயில்
வாழ்மூத்த நாயனா ரெனவோது தேவனே
வரசித்தி விக்நேசனே. -7

உன்னுநால் வேதமுட னைந்தாவ தென்றுலகி
லுள்ளவர்க ளோதுமாறிங்
குயர்ச்சியுறு வியாதமா முனிவரன் பாதங்க
ளுவந்துபல் காலிறைஞ்சிச்
சொன்னமா பாரதச் சரிதமே யோங்கி வளர்
சொன்னமா மலையேடதாய்த்
தொல்லைநாட் கயமுகன் போரிடத் தூண்டியிடு
தூயநற் கோடதாகும்
பன்னவரு நல்லெழுத் தாணியா யெழுதுவோய்
பாவலர் மதிக்கவருள்வாய்
பஞ்சவர் ணக்கிளிக ளோடுகுயி லாதியன
பக்தியுட னோதுகின்ற
வன்னவே தாகமப் பொருளினி துணர்ந்துமன
மகிழ்ந்துலவு கருணைவாயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்மூத்த நாயனா ரெனவோது தேவனே
வரசித்தி விக்நேசனே. -8

தன்னிகரில் நம்பியாண் டார்நம்பி மூலமாய்ச்
சாற்றுதே வாரமுறைகள்
தாரணியி லெல்லவரு மோதியுய்ந் திடவருள்
சாமியே சம்புமைந்த
உன்னவரு மிராவணன் கைலைசார் சிவனிடத்
துவந்துவாங் குற்றலிங்கம்
ஓதுமவ னகர்கொண்டு செல்குறா வகைதடுத்
துயர்தகோ கரண்நாமம்
பன்னவே புவிமீது தாபித்த நாதனே
பக்தவத்ஸல சின்மய
பசிப்பிணி தவித்துயர் தூசுவகை யன்பினாற்
பற்பலர்க் குதவுகின்ற
மன்னுமா மாளிகைக ளொடுதர்ம சத்திரம்
வதியுநற் கருணைவாயில்
வாழ்மூத்த நாயனா ரெனவோது தேவனே
வரசித்தி விக்நேசனே. -9

சந்ததமு நன்மைமிகு பத்மபத மேத்தியே
தக்கவா றரியமந்த்ரஞ்
சாற்றுமடி யார்களோடு கூடிடச் சர்வகலை
சதமகன் செல்வபோகஞ்
சிந்தைமகிழ் வோடுநனி பெற்றிடத் தாவரந்
தீராத குன்மமையம்
தேடிவரு பிரமஹத் யாதிநோய் வாதமிகு
சிலேட்டுமம் பித்தகாசம்
முந்துபுரி வினைத்தொடர் பொலாக்கிரக தோடங்கண்
முன்னுமெம வாதையாவும்
முட்டிவந் தென்னையட ராதவகை யருளுவாய்
மூஷிகத்திவர்ந்து வந்தே
மர்தரம தன்னநாற் றிசையினும் புரிசைசூழ்
வாயில்சார் கருணைவாயில்
வாழ்மூத்த நாயனா ரெனவோதும் தேவனே
வரசித்தி விக்நேசனே. -10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வாழி

ஆதிநல் வேதம் வாழி யாகம மாதி வாழி
வேதியர் முதலோர் வாழி வேந்தர்செங் கோலும் வாழி
பூதிகண் டிகையும் வாழி புகல்கருணை வாயும் வாழி
மேதினி யெங்கும் மூத்த விநாயக னருளும் வாழி.

## மூத்தநாயனார் திருவூஞ்சல்

### காப்பு

சீர்மேவு யாழ்ப்பாண நகரின் பாங்காச்
சிறந்துமிளிர் வடகருணை வாயா மூரிற்
பேர்மேவு மாலயத்தில் வாழுந் தெய்வப்
பெருமையுள நன்மூத்த நாயனாராம்
ஏர்மேவு சித்திவிநா யகர்த மீதில்
இசையூஞ்சல் செந்தமிழா லினிது பாடக்
கார்மேவு கரடதட விகட முக்கட்
கணபதியா மவன்பாதங் காப்பதாமே.

### நூல்

பூவுமேவு நாதவிந்து கால்க ளாகப்
புகழ்மேவு சக்தியொளிர் விட்டமாக
ஏமேவு சிவாகமங்க ளிழையதாக
எழின்மேவு சதுர்வேதம் கயிறதாகச்
சீமேவு முபநிடதம் பலகை யாகத்
திருமேவு பிரணவப்பொற் பீட மேவி
மாமேவு வடகருணைப் பதிசார் கோயில்
வாழ்மூத்த நாயனா ராடீ ரூஞ்சல். -1

சென்னியணி பிறையுமணி திகழுந் தூய
சிந்துரமா முகமுமரு ணோக்க மூன்றும்
பன்னுறுபா சாங்குசமோ தகமோர் தந்தம்
பற்றியிடு நாற்கரமுந் துதிக்கை யொன்றும்
கன்னமெனுஞ் சூர்ப்பமுந்தூங் ககடு மாகிக்
கால்பணியு மடியார்க்கிங் கருளே காட்டி
மன்னுதிரு வடகருணைப் பதிசார் கோயில்
வாழ்மூத்த நாயனா ராடீ ரூஞ்சல். -2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரோங்கு கூவிளமா துளையே யாத்தி
செண்பகநற் புளியிருப்பை வகுளம் புன்கு
பாரோங்கு தெங்குபனை மாவே யத்தி
பனசங்செங் கதலிகர வீரங் கோங்கு
நேரோங்கு தடமலிதா மரைநல் லாம்பல்
நீள்கொன்றை செறிந்தமர ருகை மேய்க்கும்
வாரோங்கு வடகருணைப் பதிசார் கோயில்
வாழ்மூத்த நாயனா ராடீ ரூஞ்சல். -3

நயமருவு சிவன்வரத்தால் வானின் மேவு
நாகர்முத லெவர்களையுஞ் சமரில் வென்ற
கயமுகனா மவுணன்போர்க் களத்தின் மாயக்
கருதியொரு கோடொடித்துக் கடுகியுய்ப்பச்
சுயவுருநீத் தாகுருவா யண்கண் மேவத் (மூர்த்தி)
தொன்முறைதேர்ந் தூர்த்தியாக்கொள் கருணை
வயமருவு வடகருணைப் பதிசார் கோயில்
வாழ்மூத்த நாயனா ராடீ ரூஞ்சல். -4

சந்திரா தித்தர்வெண் கவிகை தாங்கச்
சாற்றுறுகா லினர்வீசுங் கவரி தேங்கச்
சிந்துபதி சாந்தாற்றி யுவந்துவாங்கத்
தேவர்பதி வட்டமசைஇ மகிழ்வு தூங்கக்
கந்தருவர் யாழிசைகள் பெரிது மோங்கக்
கதிபெறுபே ரன்பர்புகழ் மொழிகள் வீங்க
மந்திரமார் வடகருணைப் பதிசார் கோயில்
வாழ்மூத்த நாயனா ராடீ ரூஞ்சல். -5

சீதமதி கூவிளமார் கடுக்கை தூர்வை
திகழ்கடிலச் சென்னிதனிற் கிரீடமின்ன
ஆதவனேகர் முகநுதலிற் பட்டமின்ன
அழகார்கோ டதனிற்பூ ணதிக மின்னப்
போதமலி நெஞ்சிலுப வீத மின்னப்
பொற்பதத்தா மரைமலரிற் சிலம்பு மின்ன
மாதவமார் வடகருணைப் பதிசார் கோயில்
வாழ்மூத்த நாயனா ராடீ ரூஞ்சல். -6

அன்னமிசை யூர்பிரம னரியே யாதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யண்டரெலா மறிவரிய தலைவ போற்றி
உன்னுலக காரணனே போற்றி மேலா
மோங்கார முதலுருவே போற்றி போற்றி
என்னவிவை யன்பர் குழாங் கண்ணீர் வார
வென்பெவையு நெக்குருக நினைந்து போற்ற
மன்னுதிரு வடகருணைப் பதிசார் கோயில்
வாழ்மூத்த நாயனா ராடீ ரூஞ்சல். -7

அங்குசபா சத்தினரே யாடீ ரூஞ்சல்
அன்பர்தமக் கருண்முதலே யாடீ ரூஞ்சல்
துங்கவல வைக்குரியீ ராடீ ரூஞ்சல்
தோன்றியவா கெனும் பரியீ ராடீ ரூஞ்சல்
பங்கயப்பொற் பதத்தினரே ராடீ ரூஞ்சல்
பாரிடர்சூ ளகத்தினரே யாடீ ரூஞ்சல்
மங்குறவள் வடகருணைப் பதிசார் கோயில்
வாழ்மூத்த நாயனா ராடீ ரூஞ்சல். -8

திங்களணி முடியாரே யாடீ ரூஞ்சல்
செம்பதும வாடியாரே யாடீ ரூஞ்சல்
துங்ககண பாலகரே யாடீ ரூஞ்சல்
தோய்திலக பாலகரே யாடீ ரூஞ்சல்
சங்குகர மான்மருகா வாடீ ரூஞ்சல்
சற்றெனக்கிங் கருள்வரதா வாடீ ரூஞ்சல்
மங்கலமார் வடகருணைப் பதிசார் கோயில்
வாழ்மூத்த நாயனா ராடீ ரூஞ்சல். -9

சகம்வாழ முகில்வேண்டு காலந் தோறும்
தவறாமற் பொழிந்துமழை யினிது வாழ
சுகம்வாழ நான்மறையா கமங்கள் நால்வர்
சொல்லுதமிழ் வாழவருட் புலவர் வாழ
புகழ்வரு நால்வருணம் புதீவாழப்
புனையிழையார் கற்புநெறி வாழ வாழ
மகம்வாழ வடகருணைப் பதிசார் கோயில்
வாழ்மூத்த நாயனா ராடீ ரூஞ்சல். -10

## எச்சரீச்கை

பந்தவினை தீர்த்தருளும் பரமா வெச்ச ரீக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தர்மனக் கோயிலுறை பண்பா வெச்ச ரீக்கை
பாதிமதி சூடுசிவ பாலா வெச்ச ரீக்கை
பாருலக மேத்தவருள் பழையோ யெச்ச ரீக்கை
நற்கருனணழ வாயுறையு நாதா வெச்ச ரீக்கை
நன்மையுள வல்லபைத னண்பா வெச்ச ரீக்கை
கொற்றமிகு மாகுவருற் கோவே யெச்ச ரீக்கை
மந்தன்புகல் துதிகேட்டருள் வரதா வெச்ச ரீக்கை
மாபாரத மெழுதும்பெரு மருப்பா வெச்ச ரீக்கை
மணியாயுற வரிவண்டியில் வைத்தா யெச்ச ரீக்கை.

## பறாக்கு

வடகருணை வாயுறையும் வரதா பராக்கு
வானவர்க டொழவருளு மணியே பராக்கு
மன்னுவல்ல பைக்குமண வாளா பராக்கு
மாதங்க மாமுகனை வதைத்தாய் பராக்கு
மங்கையுமை யீன்றருளு மைந்தா பராக்கு
மாதணி நிரை தூங்கிமிளிர் மார்பா பராக்கு
துங்கமுற வேற்கருளுந் தூயா பராக்கு
சூர்தடியும் வேலவன்முற் றுணைவா பராக்கு
கணநிரைகள் சூழவரு கர்த்தா பராக்கு
கண்களொரு மூன்றுடைய கண்ணே பராக்கு
குணமெனையுங் கடந்தவருட் குன்றே பராக்கு
கூரியநல் லங்குசாங்கைக் கொண்டாய் பராக்கு
உன்னுமொரு வாகுமிசை யூர்வாய் பராக்கு
ஓதவரு மோங்கார வுருவாய் பராக்கு
தன்னிகரி லாதமுதற் றலைவா பராக்கு
தாசரடி பரவவருட் பாதா பராக்கு.

## லாலி

சச்சிதா நந்தபர லாலி லாலி - உயர்
தந்திமுகத் துத்தமரே லாலி லாலி
நச்சரவ பூஷணரே லாலி லாலி - பொருள்
நன்னருளு நாயகரே லாலி லாலி
நற்கருணை வாயினரே லாலி லாலி - சிவன்
நல்குமுதற் பாலகரே லாலி லாலி
சுற்றுகண பாலகரே லாலி லாலி - வினைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பறுக்கு மேலவரே லாலி லாலி
முத்திநெறி யீபவரே லாலி லாலி - திரு
முறையுணர வைத்தவரே லாலி லாலி
நித்தியநி ராமயரே லாலி லாலி - கலா
நிதிமிளிர்செஞ் சடையினரே லாலி லாலி - லாலி

## மங்களம்

வாரணமா முகத்தருக்கு மங்களம் - சிவன்
மாதுமுதற் பாலருக்கு மங்களம்
நாரணனார் மருகருக்கு மங்களம் - புகல்
நாதமுடி வாளவர்க்கு மங்களம்
தொல்கருணை வாயருக்கு மங்களம் - நல்ல
தொண்டரிடர் தீர்ப்பவருக்கு மங்களம்
வல்லைபம ணாளருக்கு மங்களம் - பொருள்
மகிழவரு டேவருக்கு மங்களம்
தாமரைப்பொற் பாதருக்கு மங்களம் - புகழ்த்
தாமமிளிர் மார்பருக்கு மங்களம்
சாமரைநற் கர்ணருக்கு மங்களம் - துதி
சாற்றுமென்னை யாள்பவருக்கு மங்களம்.

இவை கருணைவாய் தெற்கு
பிரம்மஸ்ரீ த.காசிநாதக்குருக்கள் அவர்களால்
இயற்றப்பெற்றது.

சுபம்
ஓம் தத் ஸத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறைகளில் விநாயகர் தோத்திரங்கள்

முதலாந் திருமுறை

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

திருவிரமன தீச்சரம்
பண் - வியாழக்குறு

திருச்சிற்றம்பலம்

சந்தநன்மலரணி தாழ்சடையான்
தந்தமதத்தவன் றாதையோதான்
அந்த மில்பாடலோன ழகனல்ல
எந்த வனிராமன தீச்சரமே. 1

திருச்சிற்றம்பலம்

திருக்கழுமலம் - திருத்தானச்சதி
பண் - வியாழக்குறிஞ்சி

பாடல் - 6

திருச்சிற்றம்பலம்

செற்றிட்டே வெற்றிச் சேர்திகழ்ந்ததும்பி மொய்ம்புறுஞ்
சேரேவாரா நீள்கோதைத் தெரியிழைப் பிடியதுவாய்
ஒற்றைச் சேர்முற்றற் கொம்புடைத் தடக்கைமுக்கண்மிக்
கோவாதேவாய் மாதனத்தறு புகர் முகவிறையைப்
பெற்றிட்டேமற்றிப் பார்பெருந்துமிக்க துக்கமும்
பேராநோய்தாமேயாமைப் பிரிவுசெய்தவனதிடங்
கற்றிட்டேயெட்டெட்டுக்கலைத் துறைக்கரைச் செலக்
காணாதாரே சேராமெய்க் கழுமலவளநகரே. 2

திருச்சிற்றம்பலம்

திருவலிவலம் - திருவிராகம்
பண் - விழாக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே. 3

திருச்சிற்றம்பலம்

திருப்பிரமபுரம் மொழிமாற்று
பண் - வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருப்புறு வெண்விடை மேனியரேதுவர் நெற்றியின்கண்
மருப்புரு வன்கண்ணர் தாதையைக் காட்டுவர் மாமுருகன்
விருப்புறு பாம்புக்கு மெய்த்தந்தையார் விறன்மாதவர்வாழ்
பொருப்புறு மானிகைத் தென்புறவத்தணி புண்ணியரே. 4

திருச்சிற்றம்பலம்

இரண்டாம் திருமுறை

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பாடல்

சீர்காழி

பண் - பியந்தைக்காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

கரியின் மாமுகமுடைய கணபதிதாதைபல் பூதந்
திரிய வில்பலிக் கேகுஞ்செழுஞ் சுடர்சேர் தருமூதூர்
சரியின் முன்கை நன்மாதர் சதிர்பட மாநடமாடி
யுரிய நாமங்களேத்து மொலிபுனற் காழிநன்னகரே. 5

திருச்சிற்றம்பலம்

நான்காம் திருமுறை

திருநாவுக்கரசு நாயனார் பாடல் - 5

சீர்காழி

பண் - பியந்தைக்காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

பலபலகாமத்திராகிப் பதைத்தெழுவார் மனத்துள்ளே
கலமலக்கிட்டுத் திரியுங் கணபதி யென்னுங்களிறும்
பலமேந்திரண்டு சுடரும் வான்கயிலா யமலையும்
நலமார்கெடிலப் புனலுமுடை யாரோருவர்தமர் நாம்
அஞ்சுவதியா தொன்றுமில்லை யஞ்சவருவதுமில்லை. 6

திருச்சிற்றம்பலம்

ஐந்தாம் திருமுறை

திருநாவுக்கரசு நாயனார்

திருபேரெயில் - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

முன்னை யார்மயி லூர்தி முருகவேள்
தன்னை யாரெனின் தானோர் தலைமகன்
என்னை யாளு மிறையவ னெம்பிரான்
பின்னை யாரவர் பேரெயி லாளரே. 7

திருச்சிற்றம்பலம்

ஆறாம் திருமுறை

திருநாவுக்கரசு நாயனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்புறம்பயம் - திருத்தாண்டகம்

பாடல் - 11

திருச்சிற்றம்பலம்

கோவாயவிந்திரனுள் விட்டாராகக்
குமரனும் விக்கினவிநாயகன்னும்
பூவாய பீடத்து மேலயன்னும்
பூமியளந்தானும் போற்றிசைப்பப்
பாவாய வின்னிசைகள் பாடியாடிப்
பாரிடமுந்தாமும் பரந்துபற்றிப்
பூவார்ந்த கொன்றைபொறி வண்டார்க்கப்
புறம்பயநம் மூரென்று போயினாரே. 8

திருச்சிற்றம்பலம்

திருவாய்மூர் திருத்தாண்டகம்

பாடல் -8

திருச்சிற்றம்பலம்

பொருந்தாத செய்கைபொலியக் கண்டேன்
போற்றிசைத்து விண்ணோர் புகழக்கண்டேன்
பரிந்தார்க்கருளும் பரிசுங்கண்டேன்
பாராகிப் புனலாகி நிற்கை கண்டேன்
விருந்தாய்ப் பரந்த தொகுதி கண்டேன்
மெல்லியலும் விநாயகனும் தோன்றக் கண்டேன்
மருந்தாய்ப் பிணிதீர்க்குமாறு கண்டேன்
வாய்மூ ரடிகளைநான் கண்ட வாறே. 9

திருச்சிற்றம்பலம்

திருவீழிமிழலை - திருத்தாண்டகம்

பாடல் -4

திருச்சிற்றம்பலம்

கைவேழ முகத்தவனைப் படைத்தார் போலுங்
கயாசுரனை யவனாற் கொல்வித்தார் போலும்
செய்வேள் வித்தக் கனைமுன் சினதத்தார் போலும்
திசை முகன்றன் சிரமொன்று சிதைத்தார் போலும்
மெய்வேள்வி மூர்த்திதலை யறுத்தார் போலும்
வியன்வீழி மிழலையிடங் கொண்டார் போலும்
ஐவேள்வி யாறங்க மானார் போலு
மடியேனை யாளுடைய வடிகடாமே. 10

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கச்சியேகம்பம் திருத்தாண்டகம்

பாடல் -9

திருச்சிற்றம்பலம்

முந்தைகாண் மூவரினுமுதலானான் காண்
மூவிலைமேன் மூர்த்திகாண் முருகவேட்குத்
தந்தைகாண்டன் கடமாமுகத் தினாற்குத்
தாதைகாண் டாழ்ந்தபடியே வணங்குவார்க்கு
சிந்தைகாண் சிந்தாசித் தத்தார்க்குச்
சிவனவன்காண் செங்கண்மால் விடையொன்றேறும்
எந்தைகாணெ ழிலாரும் பொழிலார்க்கச்சி
கேகம்பன் காணவனென் ணெண்ணத்தானே. 11

திருச்சிற்றம்பலம்

ஏழாந் திருமுறை

சுந்தரமூர்த்தி நாயனார்

திருவோணகாந்தன்றளி

பண் -இந்தளம்

பாடல் -2

திருச்சிற்றம்பலம்

திங்கடங்கு சடையின் மேலோர் திரள்வந்து புரளவீசும்
கங்கையாளேல் வாய்திறவாள் கணபதியேல் வயிறுதாரி
அங்கைவேலோன் குமரன் பிள்ளை தேவியார் கோற்றட்டியாளார்
உங்களுக்காட் செய்யமாட்டோமோண காந்தன்றளியுளீரே. 12

திருச்சிற்றம்பலம்

ஒன்பதாம் திருமுறை (திருவிசைப்பா)

திருமாளிகைத் தேவர்

கோயில்

பண் -பஞ்சமம்

பாடல் -10

திருச்சிற்றம்பலம்

தனதனற் றோழா சங்கரா சூல
பாணியே தாணுவே சிவனே
கனகநற் றூணே கற்பகக் கொழுந்தே
கண்கள்மூன் றுடையதோர் கரும்பே
அனகனே குமர விநாயக சனக
அம்பலத் தமரர்சே கரனே
நுனகழ லிணையென் னெஞ்சினு ளினிதாத்
தொண்டனேன் நுகருமா நுகரே. 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

சேந்தனார் திருவிசைப்பா

திருவிடைக்கழி
பண் -பஞ்சமம்
பாடல் -5

திருச்சிற்றம்பலம்

குணமணிக் குருளைக் கொவ்வை வாய்மடந்தை
படுமிடர் குறிக்கொளா தழகோ
மணமணி மறையோர் வானவர் வையமுய்ய
மற்றடியனேன் வாழத்
திணமணி மாடத் திருவிடைக் கழியிற்
றிருக்கு ராநிழற் கீழ்நின்ற
கணமணி பொருநீர்க் கங்கை தன்
சிறுவன் கணபதி பின்னிளங் கிளையே. 14

திருச்சிற்றம்பலம்

பத்தாம் திருமுறை

திருமூலநாயனார் திருமந்திரம்

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை யானைமுத்தனை
இந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே. 15

திருச்சிற்றம்பலம்

பதினோராம் திருமுறை

கபிலதேவ நாயனார்

மூத்தநாயனார் திருவிரட்டைமணிமாலை

திருச்சிற்றம்பலம்

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செங்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கு - முருவாக்கு
மாதலால் வானோருமானை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை. 16

கைக்கும் பிணியொடுகாலன் றலைப்படுமேல் வையினி
லெய்க்குங் கவலைக்கிடைந் தடைந்தேன் வெம்மைநாவளைக்கும்
பைக்கு மரவரையான் றந்தபாய்மத யானைபத்துத்
திருக்கும்படிணி நுதற்கட்டிரு
வாளன்றிருவடியே. 17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியமர்ந்து கொள்வாயே நெஞ்சமேயப்ப
மிடியவலோ டெள்ளுண்டை கன்னல் - வடிசுவையிற்
றாழ்வனையாழ் வானைத் தன்னடியாருள்ளத்தே
வாழ்வானை வாழ்த்தியே வாழ். 18

வாழைக்கனி பலவின்கனி மாங்கனிதாஞ் சிறந்த
கூழைச்சுருள் குழையப்பமெள்ளுண்டை யெல்லாந்துறத்தும்
பேழைப்பெருவயிற் றோடும்புகுந் தென்னுளம்பிரியான்
வேழத்திரு முகத்துச்செக்கர் மேனிவிநாயகனே. 19

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கு மண்ணிற்குநாத னுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து. 20

கனியநினைவொடு நொடொறுங்காதற் படுமடியார்க்
கினியனினியொரு ருவின்னாங்கில மெவரும் வணங்கும்
பனிவெண் பிறைநறுங் கொன்றைச்சடைப் பலிதேரியற்கை
முனிவன் சிறுவன் பெருவெங்கொல்யானை முகத்தவனே. 21

யானை முகத்தான் பொருவிடையான் சேயழகார்
மானமணிவண்ணன் மாமருகன் - மேனிகழும்
வெள்ளக் குமிழிமதத்து விநாயகனென்
னுள்ளக் கருத்தினுளன். 22

உளதளவில்லதோர் காதலென்னெஞ்சில் வன்னஞ்சமுண்ட
வளரிளமாமணி கண்டன் வண்டாடுவண் கோதைபங்கத்
திளவளர்மா மதிக்கண்ணி யெம்மான் மகன்கைம்முகத்துக்
களகளமா மதஞ்சேர் களியானைக் கணபதியே. 23

கணங்கொண்ட வல்லிவினைகள் கண்கொண்ட நெற்றிப்
பணங்கொண்ட பாந்தட்சடைமேன் - மணங்கொண்ட
தாதகத்தேன் முரலுங்கொன்றையான் றந்தளித்த
போதகத்தின்றாள் பணியப்போம். 24

போகபந்தத்தந் தமின்றிநிற்பீர்புனை தார்முடிமே
னாகபந்தத்தந் தநாளம்பிறைபயிறையான் பயந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகபந்தத்தந்த மாமழை போன்மதத்துக்கதப்போ
ரேகதந்தத்தெந்தை செந்தாளிணை பணிந்தேத்துமினே. 25

ஏத்தியே யென்னுள்ளநிற்கு மாலெப்பொழுது
மாத்தனிவெண் கோட்டு மதமுகத்துத் தூத்தழல் போற்
செக்கர்திரு மேனிச் செம்பொற் கழலங்கை
முக்கட்கடா யானைமுன். 26

முன்னிளங்கா லத்திலேபற் றினேன்வெற்றி மீனுயர்த்த
மன்னிளங்கா மன்றன்மைத் துனனே மணிநீல கண்டத்
தென்னிளங்கா ய்களிறேயிமை யோர்சிங்க மேயுமையா
டன்னிளங்கா தலனே சரணாவுன் சரணங்களே. 27

சரணுடையே னென்றுத லைதொட்டிருக்க
முரணுடையே னல்லேனாள் முன்னந் - திரணெடுங்கோட்
டண்டத்தான்ப் புறத்தானானை முகத்தானமரர்
பண்டத்தான்றாள் பணியாப்பண்டு. 28

பண்டந்தமாதரைத் தாமென்றினியனவே பலவுங்
கொண்டந்ததாள் குறுகாமைக்குறுகுவர் கூருணர்விற்
கண்டந்த நீண்முடிக்கார் மதவார்சடைக் கற்றையொற்றை
வெண்டந்த வேழமுகத் தெம்பிரானடி வேட்கையரே. 29

வேட்கைவினைமுடித்து மெய்யடியார்க் கின்பஞ்செய்
தாட்கொண்டருளு மரன்சேயை - வாட்கதிர்கொள்
காந்தாரமார் பிற்கமழ்தார்க் கணபதியை
வேந்தாவுடைத் தமரர்விண். 30

விண்ணுதனுங்கிய விண்ணுமண்ணுஞ் செய்வினைப்பயனும்
பண்ணுதனுங்கட னென்பர்மெய்யன் பர்கள் பாய்மதமா
கண்ணுதனுங்கிய நஞ்சமுண்டார்கருமா மிடற்றுப்
பெண்ணுதனும் பிரியாவொரு பாகன் பெருமகனே. 31

பெருங்காதலென்னோடுபொன் னோடைநெற்றி
மருங்காரவார்செவிகள் வீசி - யொருங்கே
திருவார்ந்த செம்முகத்துக்கார் மதங்கள்சோர
வருவான் றனாமம்வரும். 32



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகோட்டருபெருந்தீமையுங்காலன் றமரவர்க
ளருகோட்டருமவராண்மையுங்காய்பவன் கூர்ந்த வன்பு
தருகோட்டருமரபிற்பத்தர் சித்தத்தறியணையு
மொருகோட்டிரு செவிமுக்கட் செம்மேனிய வொண்களிறே. 33

களியானைக் கன்றைக் கணபதியைச் செம்பொ
னொளியானைப் பாரோர்க்குதவு - மளியானைக்
கண்ணுவதுங் கைத்தலங்கள் கூப்புவதும் மற்றவன்றா
ணண்ணுவது நல்லார்கடன். 34

நல்லார்பழிப்பிலெழிற் சம்பவளத்தை நாணநின்ற
பொல்லாமுகத்தெங்கள் போதகமேபுர மூன்றெரித்த
வில்லானளித்த விநாயகனேயென்று மெய்ம்மகிழ
வல்லார்மனத் தன்றிமாட்டாளிருக்க மலர்த்திருவே. 35

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை

### அகவல்

ஒருநெடுங்கங்கையிருங்குறும்பைம்புகர்
மும்முகச் செந்நுதிநாலிணர் வெண்ணிணக்
குடற்புலவுகமழுமடற் கழுப்படையவன்
மதலைமா மதந்துவன் றியகதனுடைக்
கடதடக் கபோலத்தோரிட மருப்பிற்
கரண்டகவுதரத்து முரண்டரு குழவிதன்
சேவடியுகளமல்ல
தியாவையுமிலமினி யிருநிலத்திடையே. 36

### வெண்பா

நிலத்துளங்க மேருத்துளங்க நெடுவான்
றலந்துளங்கச் சப்பாணிகொட்டுங் - கலந்துளங்கொள்
காமாரியீன்றகருங் கைக்கடதடத்து
மாமாரியீன்றமணி. 37

### கட்டளைக் கலித்துறை

மணிசிந்துகங்கை தன்மானக் குருளையை வாளரக்க
ரணிசிந்தவென்றவெம்மையர்க் கிளங்கன்றையங்கருப்பின்
றுணிசிந்தவாய்ப்பெய்த போதகத்தை தொடர்ந்தோர்பிறவிப்
பிணிசிந்துகார்முளையைப்பிடித் தோர்க்கில்லைபே துறவே. 38

### அகவல்

பேதுறுதகையமல்லதுதீதுறச்
செக்கர்க்குஞ் சிக்கருநிறத் தொக்கனாப்பண்
புக்கவணிரும் பொறித்தடக்கையு
முரணிய பெருந்தோட்
கொட்டநா விதேவிதன்
மட்டுகு தெரியலடி மணந்தனமே. 39

### வெண்பா

மேயவுருமிடற்றர்வெள்ளெயிற்றர்திண்சேனை
யோயமணியூசலாடின்றே - பாய
மழைசெவிக்காற்றுந்தியவாள மர்க்கணெந்தை
தழைசெவிக்காற்றுந் தத்தளர்ந்து. 40



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கட்டளைக் கலித்துறை

உந்தத்தளரா வளைத்தனமுன்ன மின்னோடைநெற்றிச்
சந்தத்ரா வொருதனித்தெவ்வர் தந்தாளிரியூர்
விந்தத்தள ராமருங்கிற் இளிபெற்வேழக் கன்றின்
மந்தத்தள ராமலர்சரணங்கள் வழுத்துமின்னே. 41

### அகவல்

மின்னெடுங் கொண்டலந் நெடுமுழக்கத்
தோவறவிளங்கிய துளைக்கைக் கடவுளை
யாகமிக வழுத்துவ தெவனோவவனேற்
பிறந்த திவ்வுலகின் பெருமூதாதை
யுரந்தரு சிரமரிந்தவற்கே வரைந்தது
மேருச் சிமையத்து மீமிசை
வாரிச்செல்வன் மகண்மகன் மொழியே. 42

### வெண்பா

மொழியின் மறைமுதலே முன்னயனத்தேறே
கழியவருபொருளே கண்ணே - தெழிய
கலாலயனேயெங்கள் கணபதியே நின்னை
யலாதையனே சூழாதென்னன்பு. 43

### அதிராவடிகள்

### கட்டளைக் கலித்துறை

அன்புதவச் சுற்றகாரழல் கொண்டயின் மூன்றெரிய
வன்புதவந் துந்தைமாட்டுகின்றான் மதஞ்சூழ் மருப்பிற்
கன்புதவக் கரத்தாளமிட்டோடிக் கடுநடையிட்
டின்புதவச்சென்று நீயன்றுகாத்த தியம்புகவே. 44

கவவுமணிக் கேடகக்கங் கணக்கவைவனா
வறைகழல வுணரொடு பொருதஞான்று நீற்
புகழைக்கர முயிர்தவழற்பேரூதை விரைநனிகீறிமூரி
யஞ்சேறுபுலர்த்து மென்பர்
மஞ்சேறு கயிலை மலைக் கிழவோயே. 45

### வெண்பா

மலைசூழ்ந்திழிகின்ற மாசுணப்பொற்பாறை
தலைசூழ்ந்து தானினைப்ப தொக்குங் - கயிலைசூழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரண்டகங்கொள் பேரறிவன்றிண் வயிற்றினும்பர்க்
கரண்டகங்கொள் காலுயிர்க்குங்கை. 46

## கட்டளைக்கலித்துறை

காலதுகையது கண்ணதுதீயது கார்மதநீர்
மேலுதுகீழது நூலதுவெற்பது பொற்பமைதீம்
பாலதுதேனது தானதுமென்மொழிப் பாவைமுப்பூண்
வேலுதுவாள துநான்மறைக் கின்றவிடுசுடர்க்கே. 47

## அகவல்

சுடர்ப்பிழம்புதழைத் தவழுற்றனிநெடுவேற்
சேய்மூவுலகம் வலம்வரவேய
கொன்றையம் படலத்துன்று சடைக்கடந்த
வோங்கிருந்தாதையை வளாய்மாங்கனி
யள்ளற்றீஞ்சுவை யருந்திய
வள்ளற்கிங் கென்மனாங் கனிந்திடுமே. 48

## வெண்பா

இக்கயங் கொண்மூவலயஞ்சூழேழ் தடவரைக
டிக்கயங்கள் பேர்ந்தாடச் செங்கீரை - புக்கியங்கு
தேனாடவண்டாடச் செங்கீரையாடின்றே
வானாடன் பெற்றவரை. 49

## கட்டளைக்கலித்துறை

பெற்றமெல்லோதி சிலம்பின்மகள் பெறப்பிச்சுகந்த
மற்றவள் பிச்சன் மயங்கன் முன்னோன் பின்னிணைமைமிகக்
கற்றவனையன் புறங்காட்டிடை நடமாட்டுகந்தோ
செற்றவெண்டந் தத்தவனம்மையாட் கொண்டுசெய்தனவே. 50

## அகவல்

செய்தரு பொலம்படை மொய்தருபளூஉக்
குருளை, வெள்ளையிறு பொதிந்தவள்ளுகிர்த் திரள்வாய்ப்
பெருந்திரட் புழைக்கை
மண்முழைவழங்குந் திண்முரணேற்றின்
பனையடர்ப்பாகன்றன திணையடி
நெடும்பொற் சரணமேத்த
விடும்பைப்பௌ வமினி நீங்கலமே. 51



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வெண்பா

அலங்கன் மணிகனகமுந்தியருவி
விலங்கன்மிசை யிழிவதொக்கும் - பலன்கனிக
ளுண்டளைந்த கோன்மகுடத்தொண் கடுக்கைத் தாதளைத்து
வண்டணைந்து சோருமதம். 52

### கட்டளைக்கலித்துறை

மதந்தந்த மென்மொழி மாமலையாட்டி மடங்கல்கொன்ற
மதந்தந்த முக்கண்ணரற்கு முன்னீன்ற வம்மாமலைபோன்
மதந்தந்த கும்பக்குழவி மந்தாரப் பொன்னாட்டிருந்து
மதந்தந்த செம்மலன் றோவையமுய்ய வளர்கின்றதே. 53

### அகவல்

வளர்தருகவட்டின் கிளிரொளிக்கற்பகப்
பொதும்பர்த் தும்பியொழிகின்றோச்சும்
பாரிடைக்குகுறுநடைத் தோடிஞாங்க
ரிட்டமாங்கனி
முழுவதும் விழுங்கிய முளைப்பனைத் தடக்கை
யெந்தையல்லது மற்றியாவுள
சிந்தை செய்யும் தேவதைநமக்கே. 54

### வெண்பா

கேளுற்றியான்றளர வொட்டுமேகிம் புரிப்பூண்
வாளுற்றகே யூரவாளரக்கர் - தோளுற்
றறித்தெறிந்த கொன்றழித்த வங்கயங்கண் மீண்டே
யிறுத்தெறிந்து கொன்றழித்த வேறு. 55

### கட்டளைக்கலித்துறை

ஏறுதழீஇயவெம்புத் தேண்மருகவெங்குந்தவள
நீறுதழீஇயவெண்டோளவன்செல்வ வண்டுண்ணநெக்க
வாறுதழீஇயகரதலதிதையநின் றன்னை யல்லால்
வேறுதழீ இத்தொழுமோவணங்காத வியன்சிரமே. 55

### அகவல்

சிரமே, விசும்புபொதவுயரியிரண்டசும்பொழியும்மே
கரமே, வரைத்திரண்முரணியவிரைத்துவிழும்மே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புயமே, திசைவிளிம்புகிழியச்சென்றுசெறிக்கும்மே
படியே, யிடுந்தொறுமிவ்வுலகம்பெயரும்மே
யாயினு, மஞ்சுடர்ப்பிழம்பு தழீஇ
நெஞ்சகத்தொடுங்குமோ நெடும்பனைச்சூரே. 56

**வெண்பா**

சூர்தந்த பொற்குவட்டின் சூளிகையின் வானயிர்த்து
வார்தந்தெழுமதியமன்னுமே - சீர்தந்த
மாமதலைவான்மதியங்கொம்புவயிறுதித்த
கோமதலைவாண்மதியங்கொம்பு. 57

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பியாண்டார்நம்பி அருளிச்செய்த திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை

என்னை நினைந்தடிமைகொண்டென்னிடர் கெடுத்துத்
தன்னை நினையத்தருகின்றான் - புன்னை
விரசுமகிழ்சோலை வியனாரையூர்முக்க
ணரசுமகிழத்திமுகத்தான். 58

முகத்தாற்கரிய னென்றாலுந்தனை யேமுயன்றவர்க்கு
மிகத்தான் வெளியனென் றேமெய்மையுன்னும் விரும்படியா
ரகத்தான்றிகழ் திருநாரையூரம்மான் பயந்தவெம்மா
னுகத்தானவன்றனுடலம் பிளந்தவொருகொம்பன். 59

கொம்பனை யவள்ளிகொழுநன்குறுகாமே
வம்பனையமாங்கனியை நாரையூர் - நம்பனையே
தன்னவலஞ்செய்து கொளுந்தாழ்தடக்கையாயென்னோய்
பின்னவலஞ் செய்வதெனோபேசு. 60

பேசத்தகாதெனப் பேயெருதும் பெருச்சாளியுமென்
றேசத்தகும்படி யேறுவதேயிமையாதமுக்கட்
கூசத்தகுந்தொழினுங்கையு நுந்தையுநீயுமிந்தத்
தேசத்தவர் தொழுநாரைப்பதியுட் சிவக்களிற்றே. 61

களிறுமுகத்தவனாய்க்காயஞ்செய்தீயி
னெளிறுமுருக்கொண்டதென்னே - யளறுதொறும்
பின்னாரையூராரலாரும் பெரும்படுகர்
மன்னாரையூரான்மகன். 62

மகத்தினின் வானவர்பற்கண்சிரந்தோணெரித்தருளுஞ்
சுகத்தினினீன்பொழினாரைப்பதியுட் சுரன்மகற்கு
முகத்ததுகையந்தவாயது மூக்கைந்தமூக்கதனி
னகத்ததுவாயந்தவாயது போலுமடுமருப்பே. 63

மருப்பையொருகைக் கொண்டு நாரையூர்மன்னும்
பொருப்பையடி போற்றத்துணிந்தா - னெருப்பை
யருந்தவெண்ணுகின்ற வெறும்பன் றேயவரை
வருந்தவெண்ணுகின்றமலம். 64



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலம்செய்த வல்வினைநோக்கியுலகைவலம் வருமப்
புலஞ்செய்த காட்சிக்கும்மரற்குமுன் னேபுரி சடைமேற்
சலஞ்செய்த நாரைப்பதியரன்றன்னைக் கனிதரவே
வலஞ்செய்து கொண்டமதக்களிறேயுன்னை வாழ்த்துவனே. 65

வனஞ்சாயவல்வினை நோய்நீக்கிவனசத்
தனஞ்சாயலைத் தவருவானன்றோ - வினஞ்சாயத்
தேரையூர்நம்பர்மகன்றிண்டோ ணெரித்தருளு
நாரையூர்நம்பர்மகனாம். 66

நாரணன் முன்பணிந்தேத்தநின் றெல்லைநடாவியவத்
தேரணவுந் திருநாரையூர்மன்னு சிவன்மகனே
காரணனேயெங்கணபதியே நற்கரிவதனா
வாரணநுண்பொருளே யென்பவர்க்கில்லை யல்லல்களே. 67

அல்லல்களைந் தான்றனம்பொனுலகத்தி
னெல்லைபுகுவிப் பானீண்டுழவர் - நெல்லல்களை
செங்கழுநீர்கட்குந் திருநாரையூர்ச்சிவன்சேய்
கொங்கெழுதாரைங்கரத்தகோ. 68

கோவிற்கொடியநமன் றமர்கூடாவகைவிடுவன்
காவிற்றிகழ் திருநாரைப்பதியிற் கரும்பனைக்கை
மேவற்கரிய விருமதத்தொற்றை மருப்பின்முக்க
ணேவிற்புருவத் திமையவன் றான்பெற்றயானையையே. 69

யானேத்திய வெண்பாவென்னை நினைந்தடிமை
தானேசனார்த்தனற்குநல்கினான் - றேனே
தொடுத்தபொழினாரையூர்ச்சூலம்வலனேந்தி
யெடுத்தமதமுகத்தவேறு. 70

ஏறியசீர்விரணக்குடி யேந்திழைக்கும்மிருந்தே
னாறியபூந்தார்க்குமரற்குமுன்னினை நண்ணலரைச்
சீறியவெம்பணைச்சிங்கத்தினுக்கிளை யானைவிண்ணோர்
வேறியல்வாற்றொழுநாரைப்பதியுள்விநாயகனே. 71

கனமதில்சூழ்நாரையூர்மேவிக்கசிந்தார்
மனமருவினான் பயந்தவாய்ந்த - சினமருவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூசாரம்பூண்டமுகக்குஞ்சரக்கன் றென்றார்க்கு
மாசாரமோசொல்லுவான். 72

வானிற்பிறந்தமதிதவழும்பொழின் மாட்டளிசூழ்
தேனிற்பிறந்தமலர்த்திருநாரைப்பதிதிகழுங்
கோனிற்பிறந்தகணபதிதன்னைக்குலமலையின்
மானிற்பிறந்தகளிறென் றுரைப்பரிவ்வையகத்தே. 73

வையகத்தாரேத்தம தினாரையூர்மகிழ்ந்து
பொய்யகத்தாருள் ளம்புகலொழிந்து - கையகத்தோர்
மாங்கனிதன் கொம்பண்டம்பாசமழுமல்குவித்தா
னாங்கனிநஞ்சிந்தையமர்வான். 74

அமராவமரர் தொழுஞ்சரணாரைப் பதியமர்ந்த
குமராகுமரற்கு முன்னவனேகொடித்தேரவுணர்
தமராசறுத்தவன்றன்னுழைத்தோன்றினனேயெனநின்
றமராமனத்தவராழ்நரகத்திலழுந்துவரே. 75

அவமதியா துள்ள மேயல்லலறநல்ல
தவமதியாலேத்திச் சதுர்த்தோ - நவமதியாங்
கொம்பன் விநாயகன் கொங்கார் பொழில்சூழ்நாரையூர்
கம்பன் சிறுவன் சீர்நாம். 76

நாந்தனமாமனமேத்துகண்டாயென்றுநாண்மலராற்
றாந்தனமாகவிருந்தனணாரைப்பதிதன்னுளே
சேர்ந்தனனேயைந்து செங்கையனே நின்றிரண்மருப்பை
யேந்தினனேயென்னை யாண்டவனேயெனக் கென்னையனே. 77

**பன்னிரண்டாம் திருமுறை**

**சேக்கிழார் நாயனார்**

திருச்சிற்றம்பலம்

எழுக்குமாக்கதையின் றமிழ்ச் செய்யுளாய்
நடக்குமேன்மை நமக்கருள் செய்திட
தடக்கையைந்துடைத்தாழ் செவிநீண் முடிக்
கடக்களிற்றைக் கருத்துளிருத்துவாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழில் விநாயகர் தோத்திரங்கள்

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
        கப்பிய கரிமுக        னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியில் லுறைபவ
        கற்பக மெனவினை        கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்
        மற்பொரு திரள்புய        மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
        மட்டவிள் மலர்கொடு        பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
        முற்பட எழுதிய        முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
        அச்சது பொடிசெய்த        அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
        அப்புன மதனிடை        இபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
        அக்கண மணமருள்        பெருமாளே.        1.

உம்பர்தருத் தேனுமணிக்        கசிவாகி
        ஒண்கடலிற் றேனமுதத்        துணர்வூறி
இன்பரசத் தேபருகிப்        பலகாலும்
        என்றனுயிர்க் காதரவுற்        றருள்வாயே
தம்பிதனக் காகவனத்        தணைவோனே
        தந்தைவலத் தாலருள்கைக்        கனியோனே
அன்பர்தமக் கானநிலைப்        பொருளோனே
        ஐந்துகரத் தானைமுகப்        பெருமாளே.        2

பக்கரைவி சித்ரமணி பொற்கலனை யிட்டநடை
        பக்ஷியெனு முக்ரதுர        கமுநீபப்
பக்குவம லர்தொடையும் அக்குவடு பட்டொழிய
        பட்டுருவ விட்டருள்கை        வடிவேலும்
திக்கதும திக்கவரு குக்குடமும் ரக்ஷைதரு
        சிற்றடியு முற்றியப        னிருதோளும்
செய்ப்பதியும் வைத்தயர்தி ருப்புகழ்விருப்பமொடு
        செப்பெனஎ னக்கருள்கை        மறவேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கவர நற்கனிகள் சர்க்கரைப ருப்புடனெய்
எட்பொரிய வற்றுவரை யிளநீர்வண்
டெச்சில்பய றப்பவகை பச்சரிசி பிட்டுவெள
ரிப்பழமி டிப்பல்வகை தனிமூலம்
மிக்கஅடி சிற்கடலை பக்ஷணமெ னக்கொளொரு
விக்கினருச மர்த்தனெனு மருளாழி
வெற்பகுடி லச்சடில விற்பரம ரப்பரருள்
வித்தகம ருப்புடைய பெருமாளே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புராணங்களில் விநாயகர் தோத்திரங்கள்

### 1. விநாயக புராணம்

அகரமென அறிவாகி யுலக மெங்கும்
அமர்ந்தகர வுகரமக ரங்கள் தம்மால்
பகருமொரு முதலாகி வேறு மாகிப்
பலவேறு திருமேனி தரித்துக் கொண்டு
புகரில்பொருள் நான்கினையும் இடர்தீர்ந் தெய்தப்
போற்றுநருக் கறக்கருணை புரிந்தல் லார்க்கு
நிகரின்மறக் கருணைபுரிந் தாண்டு கொள்ளும்
நிருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வாம். 1

### சித்திபுத்திகள் வணக்கம்

கருணைமதம் மொழிமுகத்துக் கணேசரவர்
தமக்கறிவுந் தொழிலு மான
அருளெனுமுண் மையையெவரு மறிபவவ
ருமையினவ தரித்த ஞான்றும்
ஒருமுனியோம் பியகழலி வைதரித்த
ஞான்றுமுட னாகித் தோன்றித்
திருவுளத்தின் வழிநிற்குஞ் சித்திபுத்தி
யெனுமிவர்தாள் சென்னி சேர்ப்பாம். 2

### விக்கினராசர் திருவவதாரப் படலம்

எண்ணிலா ருயிர்களி னிதய பங்கய
நண்ணுநா யகவுயிர் நவிற்று கன்மத்தி
னண்ணுசான் றாகிய வமல வெங்கள்பாற்
றண்ணிய விக்கினந் தீர்த்தல் வேண்டுமே. 3

### உருக்குமாங்கதன் சாபம் பெற்ற படலம்

அறிந்துநின் றொழும்பிற் சற்று
மடியனேன் பிழைத்த தில்லைச்
சிறந்தவன் புடையார் மாட்டுன்
றிருவரு ளவர் தில்லைச்
சிறந்தநின் னருளுண் டாயிற்
றீதெனை யடவர்வ திதில்லை
யறிந்திடாப் பிழையுண் டாயி
னதுபொறுத் தருளல் வேண்டும். 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்கள் வரம்பெறு படலம்

தத்துவா தீத போற்றி
தத்துவப் பொருளே போற்றி
தத்துவ முதலே போற்றி
தத்துவ சொரூப போற்றி
தத்துவத் தியன்ற தாத்து
விகங்களு மனாய் போற்றி
தத்துவ வறிவுக் கெட்டாத்
தயங்குபே ரறிவே போற்றி. 5

உடலினுக் குயிரே போல
வுயிர்க்குயி ரானாய் போற்றி
உடலுயிர்க் கறிவு நல்கி
யுடலினைக் கழிப்பாய் போற்றி
உடலுயி ரெனப்பி னீங்கா
வொற்றுமைப் பொருளே போற்றி
உடனுறை யுயிர்க்கு மெட்டா
வொளிப்பெருஞ் சோதி போற்றி. 6

பக்தர்கள் வணங்க நின்ற
பலவுங்கைக் கொள்வாய் போற்றி
புத்திகள் போகத் தார்க்குப்
புணர்ந்தருள் போகி போற்றி
முத்தியை யோகத் தார்க்கு
முடித்தருள் யோகி போற்றி
எத்தொழி லவர்க்கு மந்தப்
பயனரு ளிறைவ போற்றி. 7

வேண்டிய அடியார்க் கெல்லாம்
விக்கினங் கெடுப்பாய் போற்றி
வேண்டிவந் தனைசெ யார்க்கு
விக்கினங் கொடுப்பாய் போற்றி
வேண்டுவார் வேண்டிற் றெல்லாம்
விளைத்தருள் விமல போற்றி
மாண்டதுட் டர்களைக் கொல்லு
மறமிரு மள்ள போற்றி. 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசிபர் முதலியோர் அநுட்டித்த படலம்

உலக முழுது நீக்கமற
        வொன்றாய் நிற்கும் பொருளெவனவ்
வுலகிற் பிறங்கும் விகாரங்க
        ளுறாத மேலா மொளியாவ
னுலகம் புரியும் வினைப்பயனை
        யூட்டுங் களைக ணெவனந்த
வுலக முதலைக் கணபதியை
        யுவந்து சரண மடைகின்றோம். 9

பாச வறிவிற் பசுவறிவிற்
        பற்றற் கரிய பரன்யாவன்
பாச வறிவும் பசுவறிவும்
        பயிலப் பணிக்கு மரன்யாவன்
பாச வறிவும் பசுவறிவும்
        பாற்றி மேலா மறிவான
தேச னெவனக் கணபதியைத்
        திகழச் சரண மடைகின்றோம். 10

மூர்த்தி யாகித் தலமாகி
        முந்நீர்க் கங்கை முதலான
தீர்த்த மாகி யறிந்தறியாத்
        திறத்தி னானு முயிர்க்குநல
மார்த்தி நாளு மறியாமை
        யகற்றி யறிவிப் பானெவனப்
போர்த்த கருணைக் கணபதியைப்
        புகழ்ந்து சரண மடைகின்றோம். 11

**பிரமசிருட்டிப் படலம்**

தோற்றாமே யுலகனைத்துந் தோற்றி யாதளித்துப்
பாற்றாமே பாற்றியிடும் பண்ணவநின் பதம்போற்றி
தோற்றாமே யுயிரனைத்துந் தோற்றிமல மாயைகன்ம
நீற்றாமே நீற்றியரு ணின்மலநின் பதம்போற்றி. 12

நாரதர் சாபநிவாரணமுரைத்த படலம்

அடிகளே யோல மோலம்
        அமரர்கண் முனிவா வோலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடியிசை யமுதந் தேக்கு
மகதியாழ்த் தலைவ வோலம்
நெடியவன் முதலோர் துன்ப
நீக்குவா யோல மோலம்
படிமிசை யடியேன் றுன்பும்
பாற்றுவா யோல மோலம். 13

### இராவணன் பூசித்த படலம்

பொய்தவி ரடியார் செய்யும்
புன்மையும் பொறுப்பா யோலங்
கைதவ மனத்தார் செய்யும்
கடப்பாடும் வெறுப்பா யோலஞ்
செய்தவென் பிழையுங் காத்துத்
திருவருள் செறிப்பா யோலம்
வெய்தருள் புரியா யாகின்
விளிகுவே னோல மோலம். 14

திங்களணி சடைப் பெருமாள் பூசை யாற்றித்
திரிமதிலுங் கடந்திடமுன் னின்றான் யாவன்
றகங்குடற் புவிவரைப்பி னெடியோ னாதி
சகலருக்கு மூறுதவிர்க் கின்றான் யாவ
னங்கவன்மெய்ச் சரிதமொழி பெயர்ப்ப வேண்டி
யவனடியே சரணாக வகுத்து ளேற்கு
மங்கலகின் மயமதுரத் தமிழ்ச்செம் பாடல்
வாரிமட மடையுடைத்து வளரு மன்றே. 15

### 2. பிள்ளையார் புராணம்

நற்றவத்தி னம்பலத்து நம்பனிடத் தம்பிகைமுன்
பெற்றெடுத்த தந்திமுகப் பிள்ளையே - குற்றமலி
வன்மாலை தீர்க்க மருந்தென் றினிதியம்பு
நின்மாலைக் குக்காப்பு நீ. 16

### 3. விநாயகர் மான்மியம்

சீர்பொலி கமலப் பூவளர் திசைமுகன்
கார்மலி மேனிக் கண்ணனு மரனுஞ்
சீதரன் முதலிய தேவரு முனிவரும்
பூதல சராசர வகுப்புக ளெல்லாந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே யாகிய தனிமுதற் பெருமான்
மானோர் விழியுமை தருசிவ மைந்தன்
பிரணவ சொரூபன் பெருங்கதை சொல்லப்
பரவுது மன்னோன் பதமலர் துணையே. 17

### 4. கணேசபுராணம்

சீர்பூத்த கோகனத மலரயன்மா
லாதியரந் தேவாய் மிக்க
வேர்பூத்த சிருட்டிமுதற் றொழிலவைக்குக்
காரணமா யிலங்கா நின்ற
பேர்பூத்த மறைமுடியி னொளிர் குடிலை
தனிலுத்தித்த பெருமா னாகுங்
கார்பூத்த மதகளிற்று முகக்கடவுள்
அடிக்கமலங் கருத்துள் வைப்பாம். 18

### 5. சானந்தகணேசர் புராணம்

மறைமுடிக் கரிய வெங்கோன் வளர்சடைத் தரங்க நீரை
முறைமுறை புழைக்க ரத்தான் முகந்துவிண் ணவர்கண்மீது
நிறைமகிழ் பூப்பத் தூவு நெடுமதக் களிநல் யானை
நறைகமழ் கமலத் தாளை நாடொறு மிறைஞ்சல் செய்வாம். 19

### 6. கந்தபுராணம்

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பாதம் போற்றுவாம். 20

உச்சியின் மகுட மின்ன
வொளிர்தர நுதலி னோடை
வச்சிர மருப்பி னொற்றை
மணிகொள்கிம் புரிவ யங்க
மெய்செவிக் கவரி தூங்க
வேழமா முகங்கொண் டுற்ற
கச்சியின் விகட சக்ரக்
கணபதிக் கன்பு செய்வாம். 21

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிய பொருளெலா மெளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம். 22

## 7. திருச்செந்தூர்ப் புராணம்

ஊற்றெ டுத்துவண் டோலிடு மும்மதத்
தாற்றொ ழுக்கி னருவியஞ் சாரல்வா
யேற்று கைக்கு மிறைவற்கு முந்திய
மாற்றி லாக்களி யானையை வாழ்த்துவாம். 23

எழுத்துஞ் சொல்லும் பொருளு மிசைவுற
வழுத்துஞ் சீர்செயந் திப்பதி மான்மியம்
விழுத்த குந்தமி ழாற்சொல வேதமே
பழுத்த குஞ்சரன் பாதங்கள் போற்றுவாம். 24

## 8. திருத்தணிகைப் புராணம்

மும்ம தத்தனென் றொருபெயர் தனக்குமொய் கூந்தற்
கொம்மை வெம்முலைக் கொற்றொடிக் கொடிச்சியை யிலைவேற்
கைம்ம லர்த்தனி யிளவற்குங் கஃறெனுங் கானத்
தம்ம முந்துபுக் குறுத்தவ னடிமலர் பணிவாம். 25

உற்றிருக்கு மதக்கலுழி யுன்னுமடி
யாருளத்துக் கறையை மண்ணக்
கூற்றிருக்குங் கூர்நுதிவெண் கோடுவெளிற்
றறிவிரண்டுங் குமைப்ப மேனி
தோற்றிருக்கும் மளப்பரிய சுடர் நிறைப்பத்
தோரணக்கம் பத்தெஞ் ஞான்றும்
வீற்றிருக்கும் பெருமாளை விரைமலர்தூய்ப்
பணிந்தெழுந்தெம் மெலிவு தீர்வாம். 26

பண்ணிய மேந்துங் கரந்தனக் காக்கிப்
பானிலா மருப்பமர் திருக்கை
விண்ணவர்க் காக்கி யரதனக் கலச
வியன்கரந் தந்தைதாய்க் காக்கிக்
கண்ணிலா ணவவெங் கரிபிணித் தடக்கிக்
கரிசினேற் கிருகையு மாக்கும்
அண்ணலைத் தணிகை வரைவள ராபச்
சகாயனை யகந்தழீஇக் களிப்பாம். 27



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 9. திருவேரகப் புராணம்

பெற்றபரன் றாழ்சடைக்கா னகத்துலவி
வெள்ளநதிப் பெருநீ ராடிச்
சுற்றுமெழில் வல்லையின் றுணைமுலைக்கோ
டுழக்கிவினைத் துருமஞ் சாடிப்
பற்றுமறைக் கூடத்தி னணைந்தடியார்
மனத் தறியிற் பரிவிற் சாரும்
ஒற்றைமருப் பிருசெவிமும் மதநால்வாய்
மழகளிற்றை யுன்னி வாழ்வாம். 28

### 10. திருமயிலைப் புராணம்

கஞ்சார னநத்தவர் கதிர்பொங் காழிக
னஞ்சார னநத்தவர் நாளும் வாழ்த்திடுங்
குஞ்சார னநப்பெருங் கோவின் பொற்சரண்
வஞ்சார னநற்கவி வழாது போற்றுவாம். 29

### 11. கந்தபுராணச் சுருக்கம்

மாவேலை யாலமதை யடக்கித் தன்னுண்
மண்டுலக மண்டமெலாம் வளர்ந்து தானோர்
காவேயின் முன்னுதித்த அரசிற் றோன்றிக்
கடம்புபுனை குருந்தினுக்குத் துணை தாகித்
தூவேதந் தலைகாண்டற் கரிய தாகித்
துன்பமுறு பிறவியெனுந் துகள்சேர் வெய்யி
லாவேனைத் தன்னடியா நிழலிற் சேர்த்த
அத்தனைப் பத்திசெய்து முத்தி சேர்வாம். 30

### 12. காஞ்சிப்புராணம்

இருகவுட்டுளை வாக்கு கார்க் கடாங் களிங்குலிகக்
குருநிறத்திழி தோற்ற முன்குலாய்த் தவழ்ந்தேறிப்
பரிதிமார்பினிற் சமனொடு காளிந்தி பயிலும்
திருநிகர்த்த சீரைங்கரக் களிற்றைச் சேர்வாம். 31

விகடசக்கர வாரணந்தொடர் வரும் வித்தக முகில் வீற
வகிடசக்கர விந்தமன்னவன்றனக்கருளுமெய்த் தலைவாகு
விகடசக்கரவாகமென்முலையுமைகான் களையென்னாச்சே
விகடசக்கரரெந்திமெனச் சுழல்வெம்பவக்கடனெஞ்சே. 32



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிமலர்ப்பூ சனையுஞற்றித் திருநெடுமால்
பெறுமாழி மீள வாங்கி
வழியொழுகாச் சலந்தரன்மெய்க் குருதிபடி
முடைநாற்ற மாறு மாற்றால்
பொழிமதநீர் விரையேற்றி விகடநடப்
பூசைகொண்டு புதிதா நல்கிப்
பழிதபுதன் றாதையினும் புகழ்படைத்த
மதமாவைப் பணிதல் செய்வாம். 33

## 13. திருப்பரங்கிரிப் புராணம்

நலத்த ழைத்திடு கற்பக நீழலைக்
கலந்த வர்க்குக் கருணைய ரும்பிநின்
றலர்ந்த வானந்தத் தேனுக வானன
மலர்ந்த கற்பக வேழத்தை வாழ்த்துவாம். 34

வஞ்சகத்தி லொன்றனைத் துதிக்கைமிகத்
திரண்டானை வணங்கா ருள்ளே
அஞ்சரண மூன்றானை மறைசொலுநால்
வாயானை யத்த னாகித்
துஞ்சவுணர்க் கஞ்சானைச் சென்னியணி
யாறானைத் துகளெ ழானைச்
செஞ்சொன்மறைக் கெட்டானைப் பரங்கிரிவாழ்
கற்பகத்தைச் சிந்தை செய்வாம். 35

## 14. திருவிளையாடற் புராணம்

உள்ளமெனுங் கூடத்தி லூக்கமெனுந்
தறிநிறுவி யுறுதி யாகத்
தள்ளரிய வன்பென்னுந் தொடர்பூட்டி
யிடைபடுத்தித் தறுகட் பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்
களித்துண்டு கருணை யென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்துவரு வினைகள் தீர்ப்பாம். 36

## 15. சிதம்பர புராணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான நாடகர்கண் மாதவர் நாடரும்
மோன ஞான முழுதுமு ணர்த்திடத்
தான மேவுந் தடவிக டாசலத்
தானை மாமுகத் தண்ணலை யேத்துவாம். 37

நெடியவெழு பவக்கடலை யுழக்கிவினைக்
கிரிநூறி நீங்கா தோங்குங்
கொடிய குணம் புலன்கரண முதலான
பகைப்படையைக் குலைய மோதி
அடியவர்தங் கருத்தளிசூழ்ந் தாலிக்கக்
கருணைமத வாறு பாயும்
படிபுகழுந் தில்லைவனக் கற்பகக்குஞ்
சரத்திருதாள் பணிதல் செய்வாம். 38

**16. திருநாகைக்கரோணப் புராணம்**

மாமேவு தந்தையொரு மருப்பையென
விளித்திடத்தன் மௌலி யாய
தூமேவு பிறையொருபாற் சொருகாவத்
தந்தையெதிர் தோன்ற நின்று
பாமேவும் ஒருமருப்ப னியானோநீ
யோதெரிந்து பகரா யென்று
பூமேவு நகைகொளுநா காபரணக்
களிற்றிருதாள் போற்றி வாழ்வாம். 39

அலகோட்டு பெருங்கருணைத் தந்தையைச்சூழ்ந்
தேற்றதுமொன் றெமையா தென்றே
வலகோட்டு மிசைப்படுநீர்ப் பொன்னியிற்றேம்
படுபல்கனி வழங்க லோர்ந்து
நலகோட்டு மதிசடைநின் றாமுக்குவதால்
சடையனைத்து நனைவுற் றோங்கு
பலகோட்டு மாவடிவா மொருகோட்டு
மாவடியைப் பரவி வாழ்வாம். 40

கழகவிடங் கரையிலவா நாகநக
ரகமேல் கீழ்க் கண்ணுங் கோறல்
பழகவிடங் கரையாய்த்தான் மணிமார்பு
நறுமுறுப்பப் பன்னாள் சென்றுங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழகவிடங் கரையாது களத்தமைத்தா
யென்றமரர் கூற மேய
அழகவிடங் கரைமாயைப் படங்கரைய
மடங்கரைய வகுத்து வாழ்குவாம். 41

தண்ணியரம் வெய்யவரும் தன்னோக்காற்
பயனடையிற் சமமா வாரென்
றெண்ணியரு மறையுரைத்தன் மெய்ம்மையெனத்
தெரிந்தாங்கன் பில்லார் சாத்துங்
கண்ணியருஞ் சடைமுடிவிற் றண்மதியும்
வெவ்வரவுங் கலப்ப மேவி
நண்ணியருந் தவர்க்கருணா காபரண
மழகளிற்றை நயந்து வாழ்வாம். 42

## 17. திருவாரூர்ப்புராணம்

திருவாரூர்ப் பிரியாதே திகழ்வானை
உருவானை உமைபாகர் தருவானை யுணர்வாரை
இரவாம லருள்வானை யிருணேர வருமாறு
தருவானை யடிபேண வியலோசை தவிராதே. 43

தாதாவெமை யாளென வானவர்
தாமேதனை நாடொறு நாடலுமே
மேதாவிய தாமிடை யூறுகள்
வேறாயிட வேயருள் வேதனார்
ஆதாரமு மானவ னாருயி
ராசாணவ மாறிட வேயருள்
வாதாவிவி நாயக னீரடி
வாசார்மலர் போலணி வாமரோ. 44

திருமன்னு வேள்விமறை முனிவர்மனப்
புலத்தெழுந்து சிறப்பி னோங்கிக்
கருணைதழைத் தறமரும்பி ஞானம்பூத்
தகல்வினையைக் காய்த்துத் தொல்லை
இருளகற்ற முத்திபழுத் தின்பநறுஞ்
சுவையென்று மினிது நல்கு
மருமலிபூம் பொழிலாரூர் மாற்றுரைத்த
கற்பகத்தை வணங்கி வாழ்வாம். 45



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 18. இலிங்க புராணம்

நீர்கொண்ட செஞ்சடில நிமலனிடப்
பாகமெலா நிறைந்து வாழுங்
கார்கொண்ட மலர்க்கூர்ந்தற் கன்னன் மொழிக்
கவுரிதிரு வயிறு வாய்த்த
ஏர்கொண்ட வெள்ளைமதி யிளங்கொழுந்து
மருட்டுதனி யெழில்வெண் கோட்டுச்
சீர்கொண்ட மதகளிற்றின் சேவடிப்பூங்
கமலமலர் சென்னி சேர்ப்பாம். 46

### 19. செவ்வந்திப்புராணம்

அருளெனுங் கடன்முகந் தடியர் சிந்தையாம்
பொருள்பெறு நிலஞ்சிவ போக முற்றிட
வரமழை யுதவுசெவ் வந்தி யானையின்
திருவடி யிணைமலர் சென்றி சேர்த்துவாம். 47

### 20. மச்ச புராணம்

தழைத்தமலர்க் கொன்றைபுனை சடாமகுடத்
தெம்மானைத் தழுவிக் கொங்கை
குழைத்தமலை மகளீன்ற கழைசுளிக்குஞ்
சிறுபிறைவெண் கோட்டு நால்வாய்
மழைத்தடக்கார் மேகமென வூற்றிருந்தா
றுவட்டிமத தாரை சிந்தும்
புழைத்தடக்கை விகடதடக் கும்பமதக்
களிற்றிணைதாள் போற்றல் செய்வாம். 48

### 21. கூர்ம புராணம்

வெண்ணிலாக் கற்றை கான்று
விளங்குமோர் பிறைக்கோ டின்றி
எண்ணிலோர் பாகங் கூந்தற்
பிடியென விருந்த வாற்றாற்
பெண்ணொரு பாகம் வைத்த
பிஞ்ஞக னுருவு காட்டும்
அண்ணலங் களிநல் யானை
அடிமலர் சென்னி வைப்பாம். 49


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22. திருவையாற்றுப்புராணம்

ஞால மெல்லா நயந்து திறையிடுங்
கால னஞ்சுங் கடும்பிணி நீங்கிடும்
கோல நல்குங் குறையா நிதிரும்
ஓல மென்றே களிற்றினை யுள்குவாம். 50

## 23. கோயிற் புராணம்

தன்னோங்கு மலரடியுந்
தளிரோங்கு சாகைகளும்
மின்னோங்கு முகக்கொம்பும்
விரவியகண் மலர்களுமாய்
மன்னோங்க நடமாடு
மன்றோர்க்கு மதிற்கு பாற்
பொன்னோங்கள் முன்னோங்கும்
பொற்பமர்கற்பகம் போற்றி. 51

## 24. திருக்கூவப் புராணம்

குவவத் தந்தக் குளிர்விண் வளத்துறக்
கவளத் தந்தக் கரண மிருத்திய
பவளத் தந்தப் படிவ நிகர்த்தொளிர்
தவளத் தந்தத் தலைவனை வாழ்த்துவாம். 52

கற்றைநெடுஞ் சடாமவுலிப் பிறையுமொரு
தன்கோடுங் கரத்திற் சேர்த்தி
மற்றைநிறை மதியாக்கி மறுவிகந்து
வல்லபைதன் வடிவு பூத்த
நெற்றிநிகர்த் தமையன்றி யழகொழுகு
திருமுகத்தை நிகர்ப்ப நேயம்
பெற்றமழ களிற்றைமனச் சேவகத்தி
னிறுவியிடர்ப் பிறவி தீர்ப்பாம். 53

## 25. சேக்கிழார் நாயனார் புராணம்

வானுலகு மண்ணுலகு வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத வைந்துகர மூன்றுவிழி நால்வா
யானைமுக னைப்பரவி யஞ்சலிசெய் கிற்பாம். 54



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலரயனுந் திருமாலுங் காணாமை மதிமயங்கப்
புலிமுனியும் பதஞ்சலியுங் கண்டுதொழப் புரிசடையார்
குலவுநடந் தருந்தில்லைக் குடதிசைக்கோ புரவாயில்
நிலவியகற் பகக்கன்றி னிரைமலர்த்தா ளிணைபோற்றி. 55

## 26. சேது புராணம்

தொடர்கின்ற விடுக்கண் வெற்புத்துகள்
படத்துளைக்கு மேலோன்
அடர்கின்ற வதற்கு நாதனாகிய
வைங்கை முக்கட்
படர்வென்றிப் பகவன் முன்னைப்பவ
முதற்படியி னெல்லா
இடர்நின்றும் புரக்க வெம்மை
யெங்கணு மெந்தஞான்றும். 56

## 27. சீக்காளத்தி புராணம்

தருமஞ் சந்ததிகள் தாமரை யோன்பதங்
கருமஞ் சந்தி கடுப்பவர் வாழ்பதந்
துருமஞ் சந்திரற் றோய்திருக் காளத்தி
வருமஞ் சந்தி மழைமத யானையே. 57

தாய்குறங் கேறித் தந்தை சடையிடை
மதிகே துப்பேர்க்
காய்சின வரவென் றஞ்சிக் கடுக்கையுட்
புகக்கை நீட்டிப்
பாய்புனன் முகந்து நின்று பழிச்சுநர்
வாயி லீன்றோர்
வாய்நகை தழைப்ப வீசு மழைமதக்
களிற்றைத் தாழ்வாம். 58

## 28. திருக்காளத்தி புராணம்

செஞ்சந்தச் சேறளவிச் செழுந்திதலை
பொதிந்தமுலைப்
பஞ்சஞ்சு மெல்லடியின் பனிவரைமா
மகளுயிர்த்த
அஞ்சந்திப் பிள்ளையெனு மருவிமத
மழகளிற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சந்தங் கியவுவப்பான் முச்சந்தி
தொறுநினைவாம். 59

## 29. விருத்தாசல புராணம்

திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவுங்
கருணை பூக்கவுந் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம். 60.

ஒருமலையாற் புரமலையு மொருமைந்தன்
திருமைந்தன்
இருமலையுந் தும்மலையு மெதிர்மலையும்
வினைமலையும்
பொருமலையும் விம்மலையும் பொம்மலையும்
புடைத்தருளிக்
கருமலையும் பெருமலையிற் கைம்மலையைக்
கைதொழுவாம். 61

## 30. திருநெல்வேலிப் புராணம்

கல்லாத மூடனுக்குங் கல்விதரும் கற்றறிந்தோர்
எல்லாரு மனமகிழ விசைத்ததமிழி னியல்புதரும்
நல்லாரை யுறவாக்கும் நலந்தரு நன்னெறியுதவும்
பொல்லாத வினைதீர்க்கும் பொல்லாத குஞ்சரமே. 62

## 31. மயூராசல புராணம்

பத்திவினா ணசலமராப் படைத்தபர
னருண்முன்னோன் பனைக்கை வன்கோட்
டத்திவினா சம்பெறவே யொருகோட்டாற்
றடிந்துவள மமரர்க் கீந்து
முத்திவினா வியமுனிவர்க் கருள்புரிந்து
மயிலைமலை முகட்டில் வாழுஞ்
சித்திவினா யகனடியை நித்தியநாந்
தொழுதுபவஞ் சிதைத்தல் செய்வாம். 63

## 32. திருப்பெருந்துறைப் புராணம்

இலவுவந்த செவ்வாயெம் பெருமாட்டி
பார்வையொடு மிருக்க முன்னூல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொலவுவந்த நம்பெருமான் பார்வையுமேற்
றமர் சிறப்புத் தோற்றி யாங்குப்
பலவுவந்த பொழில்வளஞ்சால் குருந்துறையும்
பெருந்துறையிற் பண்பு கூரும்
நிலவுவந்த முடியினொடும் வெயிலுவந்த
மெய்க்களிற்றை நினைந்து வாழ்வாம். 64

### 33. திருவொற்றியூர்ப் புராணம்

விலகருமென் னெடுந்துயரம் வினைப்பயில்வு மென்மனத்தி
னிலகியெழு புன்றொடையு மெளிதின் முடிப் பதுகுறித்துப்
பலர்புகழு மொற்றியூர்ப் பருமணிப்பொற் கோபுரத்திற்
குலவியமுக் கட்களிற்றுக் குணாலயன்றாள் குறிக்கொள்வாம். 65

### 34. திருக்குற்றாலப் புராணம்

புயல்காட்டும் பனிவரையின் பிடிதழுவுஞ்
சிவவேழம் பொருப்பில் வானில்
இயல்காட்டு மிருபிடிசேர் முந்நாலு
துதிக்கையன்முன் னீன்ற ஞானச்
செயல்காட்டு மொருகோட்டி னிருகோட்டு
வெண்பிறைவாழ் செக்கர் வானை
மயல்காட்டுந் திருமேனி மழைமதச்சண்
பகக்களிற்றை மனத்துள் வைப்பாம். 66

### 35. திருச்சுழியற் புராணம்

காமனைப்போற் கரும்பெடுத்துத் தருமனைப்போற்
கயிறேந்திக் கமழ்பூங் கொன்றைத்
தாமனைப்போன் மதிசூடித் தம்பியைப்போன்
முகமாறந் தகைமை பூண்டு
மாமனைப்போற் கோடேந்திக் குறுமுனிபோற்
கடலையெலாம் வாரித் துய்த்துப்
பூமனைப்போ லெழிதிவைக்கும் புகழுடைவெ
லடிக்களிற்றைப் போற்றல் செய்வாம். 67

### 36. பவானிகூடற் புராணம்

நல்லவை நீடி மல்கத் தீயவை நலிய நாயேன்
சொல்லவை நல்லோர் சூழல் துலங்கிடத் திருந ணாவாழ்
வல்லபை யிடத்து வைத்த வாரண முகவன் றெய்வப்
பல்லவ மருட்டும் பைம்பொற் பதயுகம் பணிதல் செய்வாம். 68



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 37. திருக்கழுக்குன்றப் புராணம்

பூவேழும் போதிகளாம் புரவேழும்
பூவழியிற் பொழியும் பைந்தேன்
காவேழும் புதமென்னுங் கருவேழும்
பரத்தினொடுங் காக்குங் காவற்
கோவேழும் பயந்தமுத்தங் கொடுத்தகனிக்
கடுத்தகனிக் குவையோ டப்ப
மாவேழும் படைத்தவண்டு வனவேழும்
புரக்கவென்று வணக்கஞ் செய்வாம். 69

### 38. திருவேற்காட்டுப் புராணம்

அண்டரிடர்க் கடல் சுருக்கி யசுரரிடர்க்
கடல் பெருக்கி யவனி வாரி
உண்டவனைக் கழுங்கெனவே யோடியெடுத்
தெறிந்தாடி யுமையாள் கேள்வன்
தொண்டர்களன் பளிமுரன்று துதைந்திடவே
கருணை மதஞ் சொரியா நின்றே
கொண்டல்விளங் கெழில்காட்டுங் குஞ்சரன்தாள்
நிதமுடிமேற் கொள்ளு வாமே. 70

### 39. திருவாலங்காட்டுப் புராணம்

நீர்விளை யாட்டிற் றீம்பாற் கடலிடை நெடுங்கை நீட்டிக்
கார்நிறத் தவனை வெள்ளை யரவொடு கலந்து வாரிச்
சீர்தரு விசும்பின் வீசத் திங்களு மறுவு மென்னப்
பேர்தரு மாலங் காட்டுப் பிள்ளைதான் வணக்கஞ் செய்வாம். 71.

### 40. திருக்குடந்தைப் புராணம்

ஆணுருவும் பெண்ணுருவும் மாயவுல
கந்தோற்று மறிவ னென்றற்
காணுருவும் பெண்ணுருவும் மொருமருப்பு
முகத்தேயாய்ந் தமையா வண்ணம்
ஆணுருவும் பெண்ணுருவ முள்ளாரென்
றுணர்ந்தாற்கோ ரணாங்கோர் பாற்கொண்
டாணுருவும் பெண்ணுருவுந் தொழுதெழவீற்
றிருப்பாருக் கன்பு செய்வாம். 72



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 41. மாயூரப் புராணம்

உயர்திணை மஃறிணையு மாயவொரு
திருவுருவ முற்று மேயும்
பெயர்வில்கரு ணைக்கிணங்க வவ்விரண்டு
திணையுயிரும் பேணித் தாங்கல்
அயர்வுலகத் தெரிப்பவிள மதியுமுது
வரவுமுடி யலங்கத் தாங்கி
மயர்வுதப வீற்றிருக்கு மகத்தியவா
ரணத்தடிகள் வணக்கஞ் செய்வாம். 73

## 42. உபதேச காண்டம்

குழவி வெண்பிறை மிலைச்சியோற் குணித்தமா தவத்தின்
இழைத டம்புன லருவிதா ழிமயமீன் றனித்த
மழைம தர்த்தகண் மரகதப் பசும்பிடி பயந்த
தழைம டற்செவித் தந்திபொற் சரணமே சரணம். 74

## 43. பிரமோத்தர காண்டம்

பிஞ்சுமததிச் சடாமகுடப் பெருமானைப் பிரியாத
வஞ்சியிம வான்றவத்தின் வருபேடை மயிலுதவு
மஞ்சிறைவண் டிரைத்துவிழு மருவிமத மொழுகுகவுட்
குஞ்சர்வெம் புகர்முகத்துக் குரிசிலடி யிணைதொழுவாம். 75

## 44. காசி காண்டம்

மாற்றரிய தொல்பிறவி மறிகடலி னிடைப்பட்டுப்
போற்றுறுதன் குரைகழற்றாட் புணைபற்றிக் கிடந்தோரைச்
சாற்றரிய தனிமுத்தித் தடங்கரையின் மிசையுய்ப்பக்
காற்றெறியுந் தழைசெவிய கடாக்களிற்றை வணங்குவாம். 76

கரைபொரு கங்கை யாற்றிற்
காளிந்தி மடுப்ப தென்னச்
சொரிமதக் கலுழி வெள்ளஞ்
சுழித்துவார்ந்த தொழுகக் காசித்
திருநக ரினிது வைகுந்
திங்களங் குழவிக் கோட்டு
வரைபுரை களிநல் யானை
மலரடி வணங்குவாமே. 77



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45. சரப புராணம்

சிந்தையிடர்க் கடனீந்திச் சிவானந்த
முணர்ந்திடவுஞ் சிவானு பூதிப்
பந்தமுறச் சிவானந்தப் பரவையிடைப்
படிந்திடவும் பற்று நல்கும்
இந்திரியப் பகைதடிந்தி யானெது
நீங்குமவ ரிதய மேவும்
ஐந்துகரத் தந்திமுகத் தெந்தையிரு
பதாம்புயங்க ளகத்துள் வைப்பாம். 78

## 46. வாயுசங்கிதை

கார்தவழ் கயிலை வலியுடை யரக்கன்
கையினா லலைவுறா வண்ணம்
ஏர்பெறத் திணிபூண் கட்டிய தேய்ப்ப
விருப்பெரும் பணைநெடுங் கரத்தால்
ஆர்வுறத் தழுவி முகிலென முழங்கி
யடியவர்க் காரருள் புரியுந்
தாரணி மவுலி யைங்கரக் கடவுள்
தாளிணை தலையினாற் பணிவாம். 79

## 47. சூத சங்கிதை

பொருள்படு பிரண வத்தின்
பொருளொரு தானே யென்று
மருள்செறி மனத்தி னாரும்
வயங்குற வுணர்பாக் கம்பொற்
சுருள்விரி கடுக்கை வாசத்
தொங்கல்செஞ் சடையிற் சூடும்
அருள்பொழி முக்க ணால்வா
யைங்கரக் களிற்றை யுள்வாம். 80

ஆரணமா கமம்பரவு மமலனா னந்தனருள்
பூரணமாம் பரம்பொருளைப் புண்ணியர்கள் பெருவாழ்வை
காரணமா வெத்தொழிற்குங் கதிக்குமொரு செழுஞ்சுடரை
வாரணமா முகத்தேவை வணங்கிவளம் பெற்றிடுவாம். 81

## 48. திருவாளொளிபுற்றூர்ப் புராணம்

படைப்பவன் படைக்கும் போதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிப்பவன் பரிக்கும் போதும்
துடைப்பவன் றுடைக்கும் போதும்
துதிகமழ் பூசை யாற்ற
வுடைப்பவ னுடைக்கு மூற்றை
யுற்றவெஞ் சன்ம வாயில்
அடைப்பவன் சித்தி நாமத்
தண்ணலை யெண்ணு வாமே. 82

## 49. கோயிலூர்ப் புராணம்

அடைபவர்க டவிர்கோசங் கரங்காட்ட
வதற்கமைசா தனந்தோள் காட்ட
வுடைதருகீ ழுவத்தைவிழி காட்டமே
லவத்தைமத வூற்றங் காட்ட
நடைகெழுமற் றவர்புரியும் பாவனையை
மருப்பெடுத்து நன்கு காட்டத்
தடைதவிர்பே ரருள்கொழிக்கும் வன்னிவிநா
யகர்மலர்த்தாள் சார்ந்து வாழ்வாம். 83

## 50. திருநாவலூர்ப் புராணம்

அற்பகலு நினைக்குமடி யவர்பிறவி
யெனுமிருளை யகற்று ஞான
நற்பகலோ னெனுமொருவி நாயகனை
யைங்கரனை நகுபொன் மேரு
விற்பகவ னுமைமகனை வேலவற்கு
முன்னனை விண்ணோர் போற்றுங்
கற்பகவி நாயகனைக் கைதொழுவார்
வினைக்கடலைக் கடந்துய் வாரால். 84

## 51. திருப்பனந்தாட் புராணம்

மருவிவரும் பிறவியெனும் வேலைதனைக்
கலக்கிவினை வனத்தைச் சாடிக்
கருதரிய தமியன் மனத் திருந்துதமிழ்
மதம்பொழியுங் கருணை யாளன்
அருமறையுந் தொழுவரிய னைந்துகரன்
றொந்திவயிற் றண்ண லான
பெருகுவளத் திருப்பனந்தா ளாண்டபிள்ளை
யருட்பாதம் பேணி வாழ்வாம். 85



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 52. கடம்பவன புராணம்

கதத்தானை நீண்டகுர கதத்தானை
யிராவணனைக் கடிந்தோன் காணாப்
பதத்தானை முதலினர்முற் பதத்தானை
வெள்ளையிபப் பாகன் போற்றும்
இதத்தானைப் பொறியிலர்கட் கிதத்தானைக்
கடம்பவனத் திருக்குந் தேவை
மதத்தானை முகனைவென்ற மதத்தானை
முகத்தானை வணக்கஞ் செய்வாம். 86

## 53. புள்ளிருக்குவேளூர்ப் புராணம்

முத்திவிநா யகன்மகிழ மன்பனுக்கிவ்
வுலகினிருண் முழுது நீக்கும்
அத்திவிநாயகனெனவே யகத்திருளை
நீக்குவர மளித்த மன்னும்
எத்திவிநா யகன்மேலாஞ் சிவஞானச்
செல்வனிவ னெனவே செய்யுஞ்
சித்திவிநா யகன் வேளூர்க் குடவறைவி
நாயகன்றாள் சிரமேற் கொள்வாம். 87

திங்களுட னெழில்கொழக்குங் கொன்றையந்தார்
திரிந்திலக சிவனெங் கோமான்
மங்களசின் மயமான வைத்தியலிங்கம்
விளங்குதல மகிமை யோங்கிப்
பொங்குசிறப் பினைமதுரம் பொழிந்திடு
செந்தமிழினாற் புகல வாய்ந்த
கங்கையணி மதஞ்சொரியுங் கற்பகக்
குஞ்சரத்திருத்தாள் கருத்துள் வைப்பாம். 88

ஏராரும் பிறைமருப்புஞ் சிந்துரச்சுந்
தரமுகமு மிலகச் செம்பொன்
வாராருங் களபமுலை மாதுதைய
லுமையளித்த மைந்த னாகிக்
காராரும் பொழில்புடைசூழ் புள்ளூரிற்
கருணைமதஞ் சொரிந்தெந் நாளும்
தீராத கொடும்பாச வினைதீர்த்த
பிள்ளைபதஞ் சிரமேற் கொள்வாம். 89



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 54. திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்

வானொழுகு முகின்மேனி வேந்தன் தேட
மதுரைநா யகனடியார் வினைகள் தீர்ப்பான்
ஊனொழுகு புரம்படைத்த மக்கள் போல்வந்
துலாவுதிரு விளையாடற் பனுவல் சொல்லக்
கூனொழுகு பிறைகேட்டுப் பனைக்கை நால்வாய்க்
குடவுதரச் செழும்பவளக் குன்றம் போலத்
தேனொழுகு மலர்க்கடம்ப வனத்து லாவு
சித்திவிநா யகனிருதாள் சென்னி சேர்ப்பாம். 90

### 55. திருவானைக்காப் புராணம்

நிலம்போற்றும் பனிக்கிரண நிலாவணிந்த
நாயகனார் நிருதர் வாழுஞ்
சலம்போற்று மதில்பொடித்த ஞான்றினிய
பூசனைகள் சால வாற்றிப்
புலம்போற்று மெய்யடியார் விநாயகனென்
றியம்புபதப் பொருளை நாட்டி
வலம்போற்று மணியிரத மூர்ந்தமழ
விளங்களிற்றை வணக்கஞ் செய்வாம். 91

### 56. விரவனப் புராணம்

சீர்பூத்த பொதுவடியர் சிறப்படியர்
பாற்பொதுவுஞ் சிறப்பு நாளுங்
கூர்பூத்த வவருயிரா மெய்ப்புணர்வு
மாய்ப் பொலிதல் குறிப்பிற் றோன்ற
நார்பூத்த பொதுச்சிறப்புப் புணரெழுத்தா
லாமழகு நாமம் பூண்டு
கார்பூத்த வீரவனத் மர்கடாக்
களிற்றினடி கருதி வாழ்வாம். 92

### 57. திருவாதவூரடிகள் புராணம்

பவளமால் வரையி னிலவெறிப் பதுபோல்
பரந்தநீற் றழுகுபச் சுடம்பில்
திவளமா துடனின்றாடி பரமன்
சிறுவனைப் பாரதப் பெரும்போர்
தவளமா மருப்பொன் றொடித்தொரு கரத்தில்
தரித்துயர் கிரிபுரத் தெழுதுங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவளமா களிழுற்றின் திருமுகம் படைத்த
கடவுளை நினைந்துகை தொழுவாம். 93

## 58. அருணாசல புராணம்

மிக்க வேத வியாசர் விளம்பிய
விக்க தைக்கியை பின்றருள் செய்திட
முக்கண் வெற்பினைமும்மத வாரியைக்
கைக்க ளிற்றினைக் கைதொழு தேத்துவாம். 94

மதமூன்று மாறா வருங்களிற்று
முகத்தானை மனத்தி லேதான்
பதமூன்ற மருந்தவர்க்குப் பதமூன்றுங்
கடந்தபதம் பாலிப் பானை
விதமூன்று புரங்கடிந்தா ரளித்தருளு
மொருமுதலை வேரோ டேசஞ்
சிதமூன்று பிறப்பொழிக்க மானைதிறை
கொண்டவனைச் சிந்தை சேர்ப்பாம். 95

## 59. திருத்திருத்திய புராணம்

பூமேவு பல்பசுக்கட் கொருதாமே
துணையாகிப் பொலித றேற்ற
மாமேவு கயிலாய வரைநின்று
பதியாகி வருமா தேவன்
றேமேவு துணைபுணர வரும்போது
துணைவந்த திறந்தா லான்றோர்
பரமேவு துணைவந்தா ரெனப் பொலிவார்
துணையடிகள் பழிச்சி வாழ்வாம். 96

பரவுபலர் வலம்புரித லானோமற்
றவர்க்குவலம் பண்ண லானோ
விரிவுசுவைக் கனிக்குவலஞ் செயலானோ
மால்வளைகை மேவ லானோ
கரவுதவி ருயிர்கலக்க வலந்தரலா
னோவலஞ்சூழ் கையி னானோ
பரவுவலம் புரியானை யெனும்பெயர்பூண்
டொளிர்கடவுப் போற்றி வாழ்வாய். 97



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமல மென்னுமொரு கிழங்கையொரு
கோடகழ்ந்து முனிந்து பேருஞ்
சாலவமை யிருவினையா மிருமாசு
மிருமதமுஞ் சரிய மண்ணுங்
கோலமுயன் மும்மாயை மூவனத்தை
முக்கணல் கொழுந்தித் தீக்கு
நாலமிளிர் வாய்க்கருணைத் துணைவந்த
குஞ்சரத்தை நண்ணு வாமே. 98

## 60. தனியூர்கப்புராணம்

புகழ்பூத்த சிவபெருமான் புண்டரிக
முரித்துடுத்துப் பொலிந்த ஞான்று
திகழ்பூத்த பல்லுகிரு மிணைத்துமழுப்
பணியாப்பொன் செறிந்திட்டென்ன
வகழ்பூத்த மதிற்றனியூ ரகம்பகன்றை
மலர்த்தொடைபூண் டமர்ந்துள் வாருக்
கிகழ்பூத்த மலந்துமிக்கும் யானைமுகப்
பெருமானை யிறைஞ்சி வாழ்வாம். 99

மண்ணவர்க் கிகமும் பரமுமத் துவித
முத்தியும் வயங்குகற் பகத்தார்
விண்ணவர்க் கமையும் பரமுமுத் தியுமேல்
விளம்பிய விரண்டுமெண் ணாத
பண்ணவர்க் கின்ப முத்தியு மாய
படர்புமு கீச்சரத் தமர்ந்து
கண்வர்க் கினிய புரிதரு வரதக்
களிமத யானைபொற் பாதமே. 100

## 61. மயூரகிரி புராணம்

பூமேவும் திருமணக்கும் பூவைமலர்
நிகர்மேனிப் புனிதப்புத்தேன்
நாமேவு செல்விபுணர் நான்முகனிந்
திரன் முதலோர் நயந்து போற்றுந்
தேமேவு கொன்றைபுனை தோகையடிக்
கணபதிதாள் சென்னிசேர்த்திப்
பாமேவு செந்தமிழான் மயூரகிரி
புராணமது பகர்தலுற்றாம். 101



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்கொண்ட தாதையைப்போன் மதன்றனுவைப்
பார்ப்பளவிற் சிதையநூறு
நீர்கொண்ட நால்வாயன் கரிமுகன்வெண்
கோட்டினன்செந் நிறத்தன்வாய்த்த
வேர்கொண்ட கொன்றைபுனை செஞ்சடையோ
னன்பர்மனத் திருக்குநீபத்
தார்கொண்ட திறன்முருகன் றன்முன்னோ
னிருசரணந் தலைமேற்கொள்வாம். 102

## 62. சீகாழித் தலபுராணம்

பொன்னாரிதழி மதுமாலைப் புனிதன் மருமமிசைமேவி
மின்னாருமையாணுதற் பிறையின்வேணிப் பிறையைச் சேர்த்திலங்கும்
பன்னாணிறைந்த மதியமெனப் பார்த்து மகிழ்ந்து முகமலரும்
தென்னார் காழியாண்ட பிள்ளைசெந்தாமரைத் தாளிணை பணிவாம்.
103

நீண்ட வடவரைமீது நிறை குணத்தோன் சொல்பனுவல்
பூண்டதனிமருப்பாரப் புனைந்தெழுதி நினைந்தவெலாம்
ஈண்டவரும் பழவடியார்க் கின்பமுடனருள்காழி
ஆண்ட கணபதி துணைத்தாளம் புயங்கள் வணங்குவாம். 104

பூத்த பிள்ளையனந்தன்புகழ் நிலாக்
கோத்த பிள்ளை மதியணிகோமகன்
மூத்தபிள்ளையை முன்னினராபத்துக்
காத்த பிள்ளையைக் கைதொழுதேத்துவாம். 105

## 63. கைலைப் புராணம்

முழங்கு மாமறை முதலென மொழியுங்
குழந்தை வெண்பிறை சூடிய குரிசில்
துளங்கு நுண்ணிடைத் தோகையோ டீன்ற
இளங்க ளிற்றின திணையடி போற்றி. 106

ஏகமெனு மொருபொருளை என்னுயிரி னுயிராகி
ஆகமதை யுருக்கவரு மன்புருவை அயன்மாலும்
சோகமுற மிகத்தேடிச் சொல்லரிய பரவடியை
யோகமுதற் பிரணவத்தை உள்ளத்தினுள் வைப்பாம். 107



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளம்பிறை சூடுஞ் சென்னி
யீசனோ டின்பம் மேவ
விளங்கிடு மமுத மன்று
விருப்பினோ டீன்ற செல்வம்
வளங்கெழு மருப்பும் ஞான
மதம்பொழி கையுந் தோன்றுங்
குழந்தை நற்களிற்றின் பாதங்
கூறுவோர் குறை விலாரே. 108

## 64. வேதாரணிய புராணம்

கார்மலிந்து கடாம்பொழியுங் கமழ்மதத்தின்
சுவைமாந்திக் களித்த வண்டின்
போர்மலிந்த கணஞ்செவியினிடை மருந்தாற்
பொம்மென மேற்பொங்கி நீலத்
தார்மலிந்த கும்பத்திற்பரந்து கருமணியிழைத்த
தடப்பொற் கும்பத்
தேர்மலிந்த வீரகத்தி யடர்ந்த நடக்
குஞ்சரத்தாளிறைஞ்சி வாழ்வாம். 109

தந்தைவலி மகனாற்றுமெனு முறையாற்
கூற்று வனிற்ற கட்பேழ்வாய்
வெந்திறல் சார் வீரகத்தியழித்தெழிற்றாடுக்கி
முகவேழவெய்யோன்
முந்துபுரம் பொடித்தாசைக்கரியின்
மதனழித்து ருவமுரணவேய்ந்த
சந்தமறை வனக்களிற்றை வெளிற்றைய
கன்றொளிற்றையுறச் சரணஞ் சார்வாம். 110

## 65. வில்வாரண்ய ஸ்தலபுராணம்

எழில் சிறந்த விருநிலங் கற்பகப்
பொழினெருங்கிய பொன்னுல காதிய
தழையவன்றரன் றந்தரு ளைங்கர
மழைமதம்பொழி மாமுகர்ப் போற்றுவாம். 111

மாலுநான் முகத் தொருவனு மற்றை வானவருந்
தாலமீதுறை வார்களுந்தமவினை நிரம்பக்
கோலநாண்மலர் கொண்டருச்சனைசெயுங் கோமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலை நாளுமை யவளருள் விநாயகற் றொழுவாம். 112

## 66. தணிகாசல புராணம்

தூவச்ச காயயில்வேற் சுந்தரனை வள்ளிபுனம்
மேவச்ச காயனென வேழவுரு முழுமையுங்கொள்
ஆவச்ச காயனெனு மைங்கரனை யவனருளாற்
பாவச்ச காயமலப் பற்றறயாம் பற்றுவாம். 113

வெம்பி வருபேய் நோயாதி
விலக்கி யடியார்க் கருள்புரியும்
நம்பி யயன்மா லிந்திரன்விண்
ணாடர் பகையைத் தவிர்த்தருள்வாள்
பம்பி யெழுந்தீப் பொறியுருவாய்ப்
பரம னுதற்கண் டனிலுதித்த
தம்பி தணிகைச் சரிதைசொலத்
தமையன் றும்பி முகன்றுணையே. 114

அங்கழுநீ ரமணரொடு மாலவா யரனேடும்
வெங்கழுநீ ரெதிரேற்று மெய்த்தமிழின் மணங்குலவும்
பைங்கழுநீர் நறுஞ்சுனைக்கட் பகன் மலருந் தணிகைவரைச்
செங்கழுநீ ரைங்கரன்றாள் சென்னிமிசைப் புனைந்திடுவாம். 115

## 67. திருப்பேரூர்ப் புராணம்

கங்கையும் பனிவெண் டிங்களும் விரைத்த
கடுக்கையந்தொங்கலு மரவுந்
தங்குபொற் சடையு மக்கணுந் தாதை
தாணுவென்றுணர்ந்தமென் மலர்க்கை
அங்குச பாச மணிந்துவெற் புயிர்த்த
வாரணாங் கன்னையென் றுணர்த்தி
வெங்கலி முழுதுந் துமித்தருள் பட்டி
விநாயகன் சேவடி பணிவாம். 116

கன்றை வெண்கதிர் மேருவி னொழுக்கிய
காட்சியின் மணிமார்பி
னுற்ற முப்புரி நூல்கரடத்தினின்
றுகுமதத் துருவேறாய்ப்
பெற்ற தாதைபோற் றெவர்தஞ்
சிகைகொலோ பூண்டன ரிவரென்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றி நித்தலும் விளைக்குமைங்
கரன்கழற் பிரசமா மலர்போற்றி. 117

## 68. திருநாரையூர்ப் புராணம்

உலக முய்ந்திடத் திருமுறை சேரிட முணர்த்தி
நலமி குந்திருத் தொண்டர்தஞ் சரிதமு நல்கிப்
புலரு லந்தரு நாரையூர்ப் புகர்முகப் பெருமான்
இலகு பொன்னடித் தாமரை யிறைஞ்சியேத் தெடுப்பாம். 118

தன்னைக் குறித்த திருப்பணியுஞ்
சாந்றோர் பிறர்க்குச் செயும் பணியும்
முன்னைத் தனது வழிபாடு
முடிப்போர்க் கினிதா முடிப்போனை
என்னை நினைத்துத் தனது பணி
யியற்றுப் பணித்த விபமுகனைப்
புன்னைத் தருச்சூழ் திருநாரைப்
பொல்லா முதல்வன் றனைப் பணிவாம். 119

## 69. மண்ணிப்படிக்கரைப் புராணம்

மாமேவு வலம்புரியி னருள்பெருக்க
வத்துவித மாண்பார் முத்தி
நாமேவு வகையளிப்போ முமக்குயிர்கா
ளெனத் தெரிக்கு நலமே மானத்
தூமேவு வழுந்தழுவ மதம்பெருக
நாசியொடாந் துதிக்கை கொண்ட
வோமேவு வலம்புரிக்குஞ் சரத்தினிரு
தாட்கமல முன்னி வாழ்வாம். 120

பொங்குபல் லுயிரு மீன்ற
புனிதையார் திருக்கண் சாத்தப்
பொங்குமா னந்தக் கூத்துப்
புரிதரு பிரானு முள்ளம்
பொங்குமா தரவி னோங்கப்
புவியெலாங் கரப்ப வோங்கி
பொங்குநீர் நடுக்கூத் தாடும்
புகர்முகக் களிற்றை யுள்வாம். 121


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 70. வில்லைப்புராணம்

மக்களுஞ் சுரரும் வேத
மாதவர் பிறரும் வாழ்த்த
ஒக்கலுந் திருவும் பண்பும்
மிம்மையி னுதவி யம்மைத்
தக்கமுத் தியினு முய்க்குந்
தனிமருப் பினிய நால்வாய்
முக்கணாங் களிமா லியானை
முகத்தானை யகத்துள் வைப்பாம். 122

நறுவ லம்புரி யான்பொரு ஞாட்பறத்
தெறுவ லம்புரி யான்சிலை மோதலும்
முறுவ லம்புரி யானை முக்கணான்
பெறுவ லம்புரி யானையைப் பேசுவாம். 123

## 71. விளத்தொட்டிப் புராணம்

பூமேவு முத்தொழில்செய மூவருக்கு
மொருமூல புருடன் றானென்
றாமேவு நிலமுணர விருசெவிக
ளொருதுதிக்கை யகத்தே யன்னார்
தாமேவு பொலிவின்வரும் படியுதவி
யருள்சுரந்து தழையு மூர்த்தி
நாமேவு மாவத்துக் காத்தபிரான்
றிருவடிக ணயந்து வாழ்வாம். 124

சோத்த நாயக னேயென்று தொல்புவி
பூத்த நாயகன் பொன்மகள் பூமகட்
காத்த நாயகன் னஞ்சிக்கு மாவத்துக்
காத்த நாயகன் கான்மலர் போற்றுவாம். 125

## 72. மஹாவே புராணம்

மணிவி ளக்கு மகதேவ மாமலை
அணிவி ளக்கு மரனார் அளித்திட
கணிவி ளக்கு கயமா முகத்தினை
பணிவி ளக்குக வென்றே பணிகுவாம். 126



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 73. துறைசைப் புராணம்

காவளிக்குத் தேன்கொடுத்து வளர்த்திடுதென்
தமிழ்ப்பொதியக் கவின்வெற் பீன்ற
மாவளிக்கன் றுலவுதுறை சைப்புரா
ணந்தமிழால் வகுப்ப நாளும்
பூவளிக்கு மிருவருக்குங் காண்பரிதாய்
நீண்டுகனற் பொருப்பாய் நின்ற
கோவளிக்குங் குஞ்சரத்தின் னிருமலத்தாள்
தொழுதுவரங் கொள்வா மன்றே. 127

கள்ளு லாவுங் கடிமலர்க் கூந்தலாள்
வள்ளை வார்குழை மாதுமை வாய்மலர்
கொள்ள முத்தங் கொடுக்கு மழகிய
பிள்ளை தாண்மலர் பேணிப் பணிகுவாம். 128

### 74. திருநெல்வாயிற்புராணம்

சீர்பூத்த சதுர்மறையில் றிகழுமுதற் பொருளாகிப்
பார்பூத்த வுமையம்மை பிடியென்னு முருக்கொள்ளக்
கார்பூத்த திருமிடற்றோன் கரியுருவங் கொண்டுபெற்ற
பேர்பூத்த புழைநெடுங்கைப் பெருந்தகையை வணங்கல் செய்வாம்.
129

நாடிய திருநெல்வாயி னலந்திகழ் புராணகாதை
பீடிய றமிழாற்பாடப் பேரருள் வழங்கு மென்ப
பாடிய லுச்சி யப்பர் பயந்தருள் புதல்வ னான
கூடிய வொருவெண் கோட்டுக் குஞ்சரமுகவன் றாளே. 130

பொருந்துபே ரிடையூ றெல்லாம் பொன்றிடப் புவன மீதே
திருந்திய கரும மெல்லாஞ் செல்விதி னடைபெற் றோங்கப்
பெருந்திரு மடந்தை வாழப் பெற்றிடு திருநெல் வாயி
லிருந்தரு ளிபமுகத்தோ னிணையடி யேத்தி வாழ்வாம். 131

### 75. வியாக்கிரபாத புராணம்

மாதங்க வரைவி லேந்தி மாலம்பாற் புரங்க ளெய்த
மாதங்க மொருபா லுற்ற வானவன் மைந்தன் வாழும்
மாதங்க மார்பி னான்றன் மருகனான் மங்கை முக்கண்
மாதங்க முகத்தி னான்றன் மலர்ப்பதம் வழுத்து வோமே. 132



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 76. சிதம்பர சபாநாத புராணம்

ஞானமிக வளரினஃ றிணைபுரவுயர்
திணையாகு நவிலஞ் ஞான
வீனமிக வளரினுடையர் திணையவஃ
றிணையாகு மென்று தேற்றன்
மானவஃ றிணைமேலு மாண்டவுயர்
திணைகீழும் வடிவிற் காட்டித்
தேனமரும் பொழிற்றில்லைச் சிகரிவாழ்
கற்பகத்தை வணக்கஞ் செய்வாம். 134

### 77. தக்கணகைலாசபுராணம்

ஓங்கு தாரகத் தோருரு வாகிய
தாங்கு மைங்கரத் தந்தி முகத்தனை
யீங்கு போற்றுது மிம் ருணர்ந்திடத்
தேங்கு தென்கயி லைத்திறஞ் செப்பவே. 135

### 78. திரிகோணாசல புராணம்

ஓங்கு மறைக்கு ஒருமுதலாம் பிரணவத்தின்
உட்பொருளை உலக நாதன்
பாங்கின் உறும் சிவை அளித்த ஆனந்தப்
பெருக்கை உயர் பரம வாழ்வை
நீங்கரிய பேரொளியை நிருமல
சின்மய வடிவை நிகரின் முத்தித்
தேங்கனியை உள்ளத்தில் தெவிட்டாத
கற்பகத்தைச் சிந்தை செய்வாம். 135

சீர்வளர் மேரு தன்னில்
சிகரமாகிய தென் கோணைப்
பேர்வளர் தலத்தின் மேய
பிஞ்ஞகன் அருளால் வந்த
பார்வளர் உயிரைக் காக்கும்
பரு உமதத் தடக்கை முக்கட்
கார்வளர் இபமுகத்துக் கடவுளை
கருத்துள் வைப்பாம். 136



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 79. திருக்கேதீச்சர புராணம்

பூமேவு திருமணக்கும் புயல்போலு
நெடுமேனில் புனித மாயோன்
நாமேவு மறையயனே புருகூதன்
முதலமரர் நயந்து போற்றும்
தூமேவு கயவதனத் தைங்கரனார்
பாதமலர் தொழுது வாழ்த்திப்
பாமேவு செந்தமிழாற் கேதீசப்
புராணமது பகர்த லுற்றாம். 137

திருநிறை யுலகினிற் சிறப்புற் றோங்கிய
மருநிறை காவுசூழ் மாந்தை நற்பதித்
தெருணிறை சிகீச்சரந் திகழ்த்து மன்னியே
அருள்பொழி கரிமுக னடிகள் போற்றுவாம். 138

வெண்ணிற வுடையி னானை
வியாபகப் பொருளா னோனை
வண்ணவிண் மதிமெய் யானை
வாகுநான் குடையான் றன்னை
யொண்ணுத லோடை மின்னு
மும்பன்மா வதனத் தானை
யுண்ணெகிழ்ந் துன்னல் செய்வா
மூறெலா நீங்கு மாறே. 139

### 80. கோணேச புராணம்

திருவளர் கோணையின் சீரை யோதிட
வொருபொரு ளென்னவிவ் வுலகம் யாவையுந்
தருமர னருள்புரி சாமி மும்மதம்
வருகரி முகனடி வழுத்தல் செய்குவாம். 140

### 81. திருக்கேதீச்சர மான்மியம்

முந்து மாமனு மூலஞ் சுழித்தெழீஇப்
பந்த மாற்றிப் பரமன்கயி லைக்குயிர்
உந்த மிக்குயர்ந் தோங்கு துதிக்கைநீள்
சிந்து ரானன் சேவடி போற்றுவாம். 141



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லார் திருக்கே திச்சரத்துத்
தொடரும் நித்ய நைமித்ய
மெல்லாங் கால்கொள் திருநிலையாய்
எழிலார் கோலத் தனியுருவின்
வல்லாள் வலபை யுள்ளுறுத்து
வணங்கார் தமையும் வணங்குவிக்கும்
எல்லார் வெண்கோட் டிபமுகன்றாட்
கொல்லா வுறுப்பு முற்பணிவாம். 142.

ஆதிக் கேதீச் சரத்த மர்ந்தஃ
தான கீர்த்திப் பிரபாவம்
மாதிக் கொல்லாங் கொளப் பரப்பி
மண்கீழ் வாசம் மகிழ்ந்து சைவ
நீதி மிதக்க மேன்மிதந்து
நிலவுபூசை மகிழுந்துறை வெண்
சோதித் தந்தக் களிற்றையன்
தூமாமலர்த்தா ளிணை போற்றி. 143

மத்துறு மதக்கொலைஞர் சூழ்ச்சிகடந் தேறி
இத்தல மெழுந்தவிற லோகைதமிழ் தேக்கி
மர்த்தள வயிற்றினொடு மாமுடி துளங்க
நர்த்தன மியற்றுகண நாதனடி போற்றி. 144

## 82. தக்ஷிணகைலாச புராணம்

செம்முளரி யுங்கதையுஞ் சக்கரமும்
வெண்கோடுஞ் சிலையும் பாம்பும்
விம்முமணிப் பொற்குடமுங் கழுநீரு
முத்தலையும் விளங்குந் தந்தித்
தம்முகமு மாதுளமுந் தரித்தொருபால்
வல்லையயுந் தரித்த சோதிக்
கைம்முகனை மறவாதென் னிதயமுமென்
புந்தியுமென் கருத்துந் தாமே. 145

## 83. ஈழத்துச் சிதம்பர புராணம்

திண்ண மாபுரச் செல்வனின் காதையை
வண்ண வண்டமிழ் செய்து வணங்கிட
நண்ணு மின்னலைப் போக்கும்வி நாயகன்
தண்ணந் தாமரைத் தாடலை சூடுவாம். 146



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 84. கோலாசல ஸ்தலபுராணம்

ஆனைமுத லானவனை யழைக்கவரு
பரம்பொருளுக் கடிமை யான
வானவர்கோ னயனரனும் வந்துநெருக்
குணும்வேலை மகுட கோடி
தானுரைந்து மேருவெனத் தனிப்பொடிக
நெதிரவொளிர் தங்க வேத்ர
சேனைமத லியர்கமலத் திருவடியே
தஞ்சமெனச் சிந்தை செய்வாம். 147

## 85. வல்லிபுரத்தான் தலபுராணம்

வல்லி புரத்துறை வாழ்வுடை நாயகன்
அல்லல் கெடுத்தமை ஆண்டருள் செய்பவன்
புல்லிவந் தித்தலம் பொருந்திய மாக்கதை
சொல்லிட வைங்கரன் தாளிணை போற்றுதும். 148

## 86. கைலாசநாத புராணம்

நல்லைக் கயிலாய நாதபுராணமே
செல்ல சர்வாபி சித்திவிநாயகர்
நல்ல ருட்கவி நானுற்றெண்பதே
சொல்ல அங்கவன் பாதந்துணைகளே. 149

## 87. விநாயக சட்டி புராணம்

தழை விநாயக சட்டிப் புராணமெய்
யழை ஓராயிரத் தாறுநூற் றெண்கவி
வழை சருக்க மூவேழினின் மாறனாங்
கழை மதம்புனை கற்பகம் போற்றுவாம். 150

## 88. தென்கோற்புராணம்

பன்னிய காண்டமைந்து படலமோர் முப்பதின்மே
லென்னும்பன் னீராயிரத்தி னறுநூறு விருத்தச் செய்யுள்
தன்னிற்சீ ரிலங்காமான்மியந் தழைதென் கோயிற் புராணாங்
கன்னிகை யருளுமங்கைக் கற்பகம் கருதிச் சொல்வாம். 151

## 89. கந்தசஷ்டிப் புராணம்

ஒரு மருப்பினனைங்கரனோமெனுங்
கரிமுகன் பொற்கழலிணை வாழ்த்தியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருவின் மாகந்த சட்டிப்புராண நூல்
விரவுமாயிரத் தெண்கவிவிள்ளுவாம். 152

## 90. ஏகாதசிப் புராணம்

தேனுலவு மலரிதழித் தொடையானை
மணந்துசந்தச் சினைப்பூஞ் சோலைக்
கானுலவு மிமயவரைக் கன்னியிளம்
பசும்பிடிமுன் களிப்பி னீன்ற
கூனுலவு தவளமதிக் குழவியெனத்
திகழுமொற்றைக் கோட்டு மோட்டு
வானுலவு மழைமதக்கைம் மாமுகக்கன்
றினைத்துதித்து வணங்கல் செய்வாம். 153

## 91. சிவராத்திரி புராணம்

ஓங்குமொரு மருப்பானை யுயிர்க்குயிரா
யிருப்பானை யுரக வேந்தன்
தாங்குநெடு நிலத்தானை முகத்தானை
வதைத்தானைச் சயில மானைப்
பாங்குவைத்து மழுத்தானை பரித்தான்றந்
தளித்தானைப் பசும்பொற் றோட்டுப்
பூங்கமல பதத்தானைப் பொருவிலைந்து
கரத்தனைப் போற்றல் செய்வாம். 154

சொற்பகர்நா வினுக்கடங்கா வளங்குலவு
தில்லைமன்றிற் றுலங்கு கோயிற்
பொற்பகலாக் கடபுலக்கோ புரத்தமர்
கணத்தலைவர் போற்ற மேவி
அற்பகனான் மலரிறைத்துத் தொழுமடியார்
கேட்டவர மளித்த லாலே
கற்பநா மம்பெறுமே ரம்பனையோர்
கொம்பனையுட் கருதி வாழ்வாம். 155

## 92. நகுலதிரிப்புராணம்

அலைதிகழுங்கடலுலகினாருயிர் களெண்ணமுறக்
கலைதிகழுமதி மவுலிக்கடவுளுமை கண்களிக்கத்
தலைதிகழும் பிரணவத்தின் முதலெழுத்து தனிநகுல
மலைதிகழும் வீரகத்தி விநாயகனை மனந்துதிப்பாம். 156



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீருற்றிலங்குமுயர் நிமலைமருங்காய்த்திகழுஞ் சிவனருளால்
மூறிக்கவட்டுக்கடாக்களிற்று முகத்தோடுதித்து மன்னியவை
நேருற்றுலகினுயிர்கள் பெறச்சிந்தை யிரங்கிநெடிதினருள்
கூருற்றமர்ந்தவைங்கரங்கள் குலவு மமலனடி பணிவாம். 157

### 94. கதிர்காம புராணம்

பூமேவு திசைமுகனும் பொறிமேவு திருமாலும்
புரந்தரனும் பொற்பு வாய்ந்த
தேமேவு மலர்மாலைத் தேவர்களு முனிவர்களுந்
திகழுமுயர் கணங்க டாமு
நாமேவு மினியதுதி யெடுத்தியம்ப நினைத்தவெலா
மவரவர்க்கு நன்று நல்குந்
தூமேவு மொருகோட்டு மழகனிற்றின் றுணைமலர்த்தாள்
சென்னிமிசை யணிந்து வாழ்வாம். 158

ஓங்கு தாரகத் தோருரு வாகிய
தாங்கு மைங்கரத் தந்திமு கத்தனை
யீங்கு போற்றுது மிம்ப ருணரந்திடத்
தேங்கு தென்கதி ரைக்கதை செப்பவே. 159

### 94. திருக்கழிப்பாலைப் புராணம்

புவனி போகிடப் பொற்பொது வுற்றருள்
சிவனு மம்மையுஞ் சேருபு நேர்பெறும்
உவமை தீர்கய வொண்முக வைங்கரன்
கவலை தீர்தரக் காத்தருள் செய்யவே. 160

திங்களங் கலைநதி திகழுஞ் செஞ்சடைச்
சங்கரன் மலைமக டனயன் யாவரும்
மங்கல வினையின்முன் வழுத்த வேயருள்
ஐங்கரன் மலரடி யகத்திற் கொள்ளுவாம். 161

திங்களை மிலைந்து பொங்கர வணிந்து
திருநட மருவிடா நெற்றி
அங்கணு மமைந்து சங்கரன் றானே
யாமெனு மொற்றுமை தெரித்தும்
அங்குச பாசம் வெங்கரி வதன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மமைதலின் வேறுபோல் விளங்கும்
எங்கடம் பெருமானைங்கரக் கடவு
ளிருபதஞ் சிரமிசைப் புனைவாம். 162

### 95. சிவராத்திரிப் புராணம் நெல்லை நாதர்

வேகமானெறிசேரும் வினைகளுந்
தாக சோகம் விடாததளர்ச்சியுஞ்
சோகவாரியினால் வருதுன்பமும்
போக யானை முகத்தானைப் போற்றுவாம். 163

ஆரணத்திடையூறடையாவகை
சீரணத்தருஞ் செய்யுடிருந்திடக்
காரணப் பொருளாகிக குணசெய்
வாரணத்தினை வாழ்த்தி வணங்குவாம். 164

### 96. புலியூர்ப்புராணம்

தனைத்தொழிற் படுக்கு மாண்மை தனக்கலாற் பிறர்க்கிலாமை
யனைத்துயிர்த் தொகையுங் காட்சி யமைதியிற் கண்டு தேற
முனைத்தகு கூர்வாய்த் தோட்டி முழுவலிப் பாச மேந்தி
வினைத்தொடர் பறுக்குஞ் செங்கை வேழநா யகன்றாள் போற்றி. 165

திருக்கோட்டுப் பிறைமேனிச் செக்கர்வான்
பொழிநிலவு திரண்டொ துங்க
மழுக்கோட்டு மிருட்பிழம்பு விளைந்ததென
நீலமணி மாலை யென்னப்
பெருக்கோட்டு முகமதம்பாய் வண்டினிசை
செவிப்புடைப்பாற் பெயர்ந்து சூழத்
தருக்கோட்டு சோலைவரத் தவத்துளமர்
சிவக்களிற்றின் சரணம் போற்றி. 166

வீங்கற் பகநாக மொருமூன்றின் விடாதி றைஞ்சி
பூங்கற் பகநாகம் புவிபாதலம் போற்றி செய்ய
வேங்கற் பகனாகம் புவிதாழ்தெழு மூருட் டோன்றி
யங்கற் பகநாக மகஞ் சேவக மாக வுய்ப்பாம். 167



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 97. ஸ்ரீ செல்வச்சந்நிதித் தலபுராணங்கள்

வளர்கலையின் மகுடமுடி மன்னுமொழி வீச
இளமதிய எழுலொழிகு கிம்புரியி லங்கை
உமாமகிழ வருமொருகை உன்னுகண பதியே
இளகுமண மிசையுதவி இங்கருள்செய் குவையே. 168

அடுத்திரம்ப வேண்டுவன தருமெனினுங்
கற்பதரு வடைந்து வேண்டின்
அடுத்திரம்ப வேண்டுவன தருமெனினுங்
கற்பதரு வடைந்து வேண்டின்
அடுத்திரம்ப வேண்டுவன தருமெனினுங்
கற்பதரு வடைந்து வேண்டின்
அடுத்திரம்ப வேண்டுவன தருமெனினுங்
கற்பதரு வடைந்து வேண்டின்
அடுத்திரம்ப வேண்டுவன தருமெனினுங்
கற்பதரு வடைந்து வேண்டின்
அடுத்திரம்ப வேண்டுவன தருமெனினுங்
கற்பதரு வடைந்து வேண்டின்
அடுத்திரம்ப வேண்டுவன தருமெனினுங்
கற்பதரு வடைந்து வேண்டின்
அடுத்திரம்ப வேண்டுவன தருமெனினுங்
கற்பதரு வடைந்து வேண்டின்
அடுத்திரம்ப வேண்டுவன தருமெனினுங்
கற்பதரு வடைந்து வேண்டின்
அடுத்திரம்ப வேண்டுவன தருமெனினுங்
கற்பதரு வடைந்து வேண்டின்
அடுத்திரம்ப வேண்டுவன தருமெனினுங்
கற்பதரு வடைந்து வேண்டின்
அடுத்திரம்ப வேண்டுவன தருமெனினுங்
கற்பதரு வடைந்து வேண்டின்
அடுத்திரம்ப வேண்டுவன தருமெனினுங்
கற்பதரு வடைந்து வேண்டின்
அடுத்திரம்ப வேண்டுவன தருமெனினுங்
கற்பதரு வடைந்து வேண்டின்
அடுத்திரம்ப வேண்டுவன தருமெனினுங்
கற்பதரு வடைந்து வேண்டின்
அடுத்திரம்ப வேண்டுவன தருமெனினுங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 100. திருக்கேதீச்சர புராணம்

செஞ்சரணம் வெண்மேனி கரிவதனம்
பசுங்குழவித் திங்கள் சீத
மஞ்சணிறப் பூங்கொன்றை மலர்மாலை
தாங்கியெமை மகிழ்வித் தெங்க
ணெஞ்சகமாங் கானினிரு ணீங்கவரு
ளானிலவு காலு மோர்வெண்
குஞ்சரமா முகத்தோனின் குரைகழலென்
னுரைபுரக்கக் கூடுங் காப்பே. 173

## 101. அரிச்சந்திர புராணம்

பெரும்புகழ் பெறும்படி யருந்துயர் கெடும்படி
பிரியம்பல வரும்ப டியுளம்
விரும்பிய தனம்பெற மிகும்பெறு
விளங்கிய தவஞ்செ யநெடுங்
கரும்பவல் பெரும்பய றருங்கனி ரசங்கொடு
கவர்ந்தெ னுவந்து ருள்புரிந்
திருங்கரி முகன்சிறு சதங்கையொடு கிண்கிணி
யிலங்கிய பதம்பை றுவனே. 174

பரிதி தம்மர பில்வரு பார்த்திவன்
விரிதி ரும்புகழ் மேவரிச் சந்திரன்
சரித மன்னுந் தமிழ்க்குத் துணைசெயக்
கரிமு கன்பதங் கைதொழு தேத்துவாம். 175

வையாம்பன் முகத்தானை மறலியையோ
டத்துரந்து வாழ்வ தொன்றும்
மெய்யாம்பன் முகத்தாலும் வேதத்து
மாகமத்தும் விரித்த தென்றே
மொய்யான்பன் முகத்தானைப் பொடியாகப்
பெருகதுவினை முடித்து நீண்ட
கைய்யாம்பன் முகத்தானைக் காலையினு
மாலையினுங் கருது வோர்க்கே. 176

## 102. திருக்கரைசைப்புராணம்

பொன்னிரவிரதனை வளைத்துப் புகுத்துலவும்
ஒரு நேமிப்பொற்றோர் மீது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னிரவி யெனவழங்கு சுதரிசன
மூவிலைமேல் வயங்குசங்க
மின்னிரவி யிருள் கடியும் பிறைகோடுங்
கரத்தேந்தி மேவாருள்ளக்
கல்நிரவி மதம் பொழியும் கரைசையில்
வாழ்கரிமுகனைக் கருத்துள் வைப்பாம். 177

அருஞ் செக்கர் வானிறமும் அதின் எழுந்த
பிறை மருப்பும் அகிலம் தாங்கும்
பெருங் கொற்றப் புயமலையும் அதின் இரங்கும்
அருவியெனப் பிறங்கு கையும்
மருங்குற்ற கரிமுகமும் அதன் மதம்போற்
கருணைபொழி மழையும் ஆற
விரிஞ்சற்கும் எட்டாத அருள் தீர்த்தக்
கணபதியை வேண்டிக்கொள்வாம். 178

## 103. இளைசைப்புராணம்

சிவமெனும் பொருட்டாய் மூன்று
திகழெழுத் துடைத்தாய் நின்ற
வுவமையில் பிரணவத்தையுல
கௌாந் தெளிய வாங்கே
கவளமா பூதந்தேவு கலந்
ததோ ருருவாங் கொண்டு
நவமுற வுதித்த முன்னோ
நற்பதம் பொற்றி வாழ்வாம். 179

சயசய வென்று போற்றுஞ் சால்புடை யன்பர் செய்யுஞ்
செயலுறு மூற்று வெற்புச் சிதைக்கும் வச்சதிரமா யன்னோர்க்
கியைதரு பொருளை யெல்லா மீந்தருள் கின்ற தொல்லைக்
கயமுகம் படைத்த மேலோன் கழலினை கருத்துள் வைப்பாம். 180

## 104. வல்வெட்டி வேவில் வீரகத்தி விநாயகர் ஆலய தலபுராணம்

வேவில் விநாயகனே வெவ்வினை தீர்ப்பவனே
தேவிலுயர் செல்வக் கணபதியே - தாவிலாத்
தண்ணளி சேர்நின் தலபுராணஞ் சீருற
இன்னருளை ஈவாய் இனிது. 181



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமுதல் மூர்த்தியாக மூவுலகத்துந் தேவை
மழுவொடு மானும் ஏத்தம் மாதொரு பாகன்தன்னை
அழுதிடும் பிள்ளைக்கன்று அமுதப்பால் அருத்தினானை
செழுநதி சென்னி சேர்த்த சீலனை வாழ்த்தி வணங்குவாம். 182

## 105. விசுவேசர் புராணம்

பொன்னானை மானும் புரிசடை வானவன்
மின்னை நேரனை பாகன் விடையவன்
என்னை சீர்விசு வேசன் கதை சொல
முன்னை யானை முகன் பதம் போற்றுவாம். 183

பிரணவத்தின் பொருளானைப் பிறங்கு மொளி வடிவானை
மரண பயந்தவிர்ப்பானை வல்லபை சேர் வாரணத்தை
அரணமென அடையு நருக் கணியானை அகநிறுவிச்
சரணமெனுங் கமலமலர் தலைக் கணியாய்க் கொடுவாழ்வாம். 184

பங்கயத் தயனும் மாலும்
பரவியே பாங்கர் நிற்ப
ஐங்கர நால்வாய் முக்கண்
அங்குச பாசங் கூடப்
பங்கமில் தொந்தியாடப்
பாதகிண் கிணிகள் கொஞ்சத்
துங்கமார் நடமியற்றுங்
கணபதி துணைத்தாள் போற்றி. 185

வீங்கிவரு கங்கை புனை வித்தகனும் மாதுமையும்
ஈங்கருளும் இறையோனை இடரனைத்துங் களைவானைத்
தாங்குவலம் சுழித்தடக்கை தபித்தருளும் வாரணத்தை
நீங்காத பேரன்பின் நினைந்துருகி வாழ்த்திடுவாம். 186.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் – சுன்னாகம்

அ.வரதபண்டிதர் அவர்கள் இயற்றிய

# பிள்ளையார் கதை

## காப்பு

கரும்பும் இளநீரும் காரெள்ளுந் தேனும்
விரும்பும் அவல்பலவும் மேன்மேல் – அருந்திக்
குணமுடைய னாய்வந்து குற்றங்கள் தீர்க்குங்
கணபதியே இக்கதைக்குக் காப்பு

திருவிளங்கு மான்மருகா சேவல்தனில் ஏறி
வரும் அரன்றாள் ஈன்றருளும் மைந்தா – முருகனுக்கு
முன்பிறந்த யானை முகவா உனைத்தொழுவேன்
என் கதைக்கு நீஎன்றுங் காப்பு

## விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமு கத்தானைக்
காதலாற் கூப்புவர் தம் கை.

ஒற்றையணி மருப்பும் ஒரிரண்டு கைத்தலமும்
வெற்றி புனைந்த விழிமூன்றும் – பெற்றதொரு
தண்டைக்கால் வாரணத்தைத் தன்மனதில் எப்பொழுதுங்
கொண்டக்கால் வாராது கூற்று.

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன் – கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீஎனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா.

## சப்பாணி

எள்ளுப் பொரிதேன் அவல்அப்பமிக்கும் பயறும் இளநீரும்
வள்ளிக் கிழங்கும் மாம்பழமும், வாழைப்பழமும், பலாப்பழமும்,
வெள்ளைப்பாலும், மோதகமும் விரும்பிப்படைத்தேன் சந்நிதியில்
கொள்ளைக் கருணைக் கணபதியே கொட்டி அருள்க சப்பாணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டப் பெருச்சாளி ஏறிச் சடைகொண்டு வையத் துலாவி.
அண்டத் தமரர் துதிக்க அடியார்க் கருளும் பிரானே.
எண்டிக்கும் அன்பர்கள் பார்க்க இணையற்ற பேரொளி வீசக்
குண்டைக் கணபதி நம்பி கொடுங்கையாற் சப்பாணி கொட்டே

## சரஸ்வதி துதி

புத்தகத் துள்ளுறை மாதே பூவில் அமர்ந்திடு வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளாய் நங்காய் வேதப் பொருளுக்கு இறைவீ
முத்தின் குடைஉடை யாளே மூவுல குந்தொழுது ஏத்துஞ்
செப்புக் கவித்த முலையாய் செவ்வரி ஓடிய கண்ணாய்
தக்கோலந் தின்னும் வாயாய் சரஸ்வதி என்னுந் திருவே எக்காலமும்
உனைத் தொழுவேன் இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழ்க்
கல்விகள் எல்லாம் முழுதும் எனக்கருள் செய்துஎன் சித்தந் தனில்நீ
இருந்து திருவருள் செய்திடு வாயே.

## அதிகாரம்

பொன்னிறங் கடுக்கும் புனற்செறி குடுமித்
தென்மலை இருந்த சீர்சால் முனிவன்
கந்த மும்மதக் கரிமுகன் கதைதனைச்
செந்தமிழ் வகையால் தெளிவுறச் செப்பினன்
அன்னதிற் பிறவில் அரிபறத் திரட்டித்
தொன்னெறி விளங்கச் சொல்லுவன் கதையே.

## கதை

மந்திர கிரியில் வடபால் ஆங்குஓர்
இந்துதவழ் சோலை இராசமா நகரியில்
அந்தணன் ஒருவனும் ஆயிழை ஒருத்தியுஞ்
சுந்தரப் புதல்வரைப் பெறுதல் வேண்டிக்
கடவுள் ஆலயமுங் கடிமலர்ப் பொய்கையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடநிழற் பள்ளியுந் தாம்பல சமைத்துப்
புதல்வரைத் தருகெனப் பொருப்பரசு ஈன்ற
மதர்விழி பாகனை வழிபடும் நாளில்
மற்றவர் புரியும் மாதவங் கண்டு
சிற்றிடை உமையாள் சிவன்அடி வணங்கிப்
பரனே சிவனே பல்லுயிர்க்கு உயிரே
அரனே மறையவர்க்கு அருள்புரிந்து அருளென
அந்தஅந் தணனுக்கு இந்தநற் பிறப்பில்
மைந்தரில் லைஎன்று மறுத்துஅரன் உரைப்ப
எப்பரிசு ஆயினும் எம்பொருட்டு ஒருசுதன்
தப்பிலா மறையோன் தனக்குஅருள் செய்கென
எமைஆ ளுடைய உமையாள் மொழிய
இமையா முக்கண் இறைவன் வெகுண்டு
பெண்சொற் கேட்டல் பேதமை என்று
பண்சொற் பயிலும் பாவையை நோக்கிப்
பேதாய் நீபோய்ப் பிறஎன மொழிய
மாதுமை அவளும் மனந்தளர்வு உற்றுப்
பொன்றிடும் மானிடப் புன்பிறப்பு எய்துதல்
நன்றல என்றே நடுக்கமுற்று உரைப்பக்
கறைமிடற்று அண்ணல் கருணை கூர்ந்து
பிறைநுதல் அவட்குநீ பிள்ளை யாகச்
சென்றுஅவண் வளர்ந்து சிலபகல் கழித்தால்
மன்றல் செய்து அருள்வோம் வருந்தலை என்று
விடைகொடுத்து அருள விலங்கன்மா மகளும்
பெடைமயிற் சாயற் பெண்மக வாகித்
தார்மலி மார்பன் சதுர்மறைக் கிழவன்
சீர்மலி மனைவி திருவயிற் றுதித்துப்
பாவையுஞ் சிற்றிலும் பந்தொடு கழங்கும்
யாவையும் பயின்ற இயல்பினள் ஆகி
ஐயாண்டு அடைந்தபின் அன்னையும் அத்தனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையார் கருங்குழல் வாணுதல் தன்னை
மானுட மறையோர்க்கு வதுவை செய்திடக்
கானமர் குழலியைக் கருதிக் கேட்பப்
பிறப்புஇறப்பு இல்லாப் பெரியோற்கு அன்றி
அறத்தகு வதுவைக்கு அமையேன் யான்என
மற்றவன் தன்னைஉன் மணமக னாகப்
பெற்றிடல் அரிதெனப் பெயர்த்துஅவர் பேச
அருந்தவ முயற்சியால் அணுகுவேன் யான்எனக்
கருந்தட நெடுங்கண் கவுரிஅங்கு உரைப்ப
மருமலி கமல மலர்த்தடத்து அருகில்
தருமலி நிழல்தவச் சாலையது அமைத்துப்
பணியணி பற்பல பாங்கியர் சூழ
அணிமலர்க் குழல்உமை அருந்தவம் புரிதலும்
அரிவை தன்அருந்தவம் அறிவோம் யாம் என
இருவரும் அறியா இமையவர் பெருமான்
மானிடம் ஏந்தும் வண்ணமது ஒழிந்து
மானிட யோக மறையவன் ஆகிக்
குடையொடு தண்டுநற் குண்டிகை கொண்டு
மடமயில் தவம்புரி வாவிக் கரையிற்
கண்ணுதல் வந்து கருணை காட்டித்
தண்நங் கூந்தல் தையலை நோக்கி
மின்பெறு நுண்இடை மெல்லிய லாய் நீ
என்பெறத் தவம்இங்கு இயற்றுவது என்றலுங்
கொன்றைவார் சடையனைக் கூடஎன்று உரைத்தலும்
நன்று எனச் சிரித்து நான்மறை யோனும்
மாட்டினில் ஏறி மான்மழுத்தரித்துக்
காட்டினிற் சுடலையிற் கணத்துடன் ஆடிப்
பாம்பும் எலும்பும் பஃறலை மாலையுஞ்
சாம்பரும் அணிந்து தலையோடு ஏந்திப்
பிச்சைகொண்டு உழலும் பித்தன் தன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நச்சிநீர் செய்தவம் நகைதரும் நுமக்கெனப்
பூங்கொடி அருந்தவம் பூசுரன் குலைத்தலும்
ஆங்குஅவள் நாணமுற்று அணிமனை புகுதச்
சேடியர் வந்து செழுமலர்க் குழலியை
வாடுதல் ஒழிகென மனம்மிகத் தேற்றிச்
சிந்துரவாள்நுதற் சேடியர் சிலர்போய்த்
தந்தைதாய் இருவர் தாளிணை வணங்கி
வாவிக் கரையில் வந்துஒரு மறையோன்
பாவைதன் செங்கையைப் பற்றினன் என்றலுந்
தோடுஅலர் கமலத் தொடைமறை முனியை
ஆடக மாடத்து அணிமனை கொணர்களன
மாடக யாழ்முரல் மங்கையர் ஒடி
நீடிய புகழாய் நீஎழுந்து அருள்என
மைமலர்க் குழலி வந்துஎனை அழைக்கில்
அம்மனைப் புகுவன்என்று அந்தணன் உரைத்தலும்
பொற்றொடி நீபோய்ப் பொய்கையில் நின்ற
நற்றவ முனியை நடாத்திக் கொணர்கென
சிவனை இகழ்ந்த சிற்றறிவு உடையோன்
அவனையான் சென்றுஇங்கு அழைத்திடேன் என்று
சிற்றிடை மடந்தையுஞ் சீறின ளாகி
மற்றைய மாதர் மதிமுகம் நோக்கி
நெற்றியிற் கண்ணுடை நிமலனுக்கு அல்லவென்
பொற்புஅமர் கொங்கை பொருந்துதற்கு அரிதால்
மானிட வேட மறையவன் தனக்கு
யான்வெளிப் படுவ தில்லைஎன்று இசைப்ப
மனையிடை வந்த மாமுனி தன்னை
இணைஅடி தொழுதல் இளையோர்க்கு இயல்பெனத்
தந்தையுந் தாயுந் தகைபெற மொழியச்
சிந்தை குளிர்ந்து சீறுதல் ஒழிந்து
தாய்சொல் மறுத்தல் பாவம்என்று அஞ்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிழை தானும் அவன்எதிர் சென்று
சுற்றிவந்து அவனடி சுந்தரி வணங்கி
மற்றவன் தன்னை மனையிற் கொணர்ந்து
ஆதியம் பகவற்கு அன்பன் ஆகும்
வேதியன் பழைய விருத்தன்என்று எண்ணி
ஆசனம் நல்கி அருக்கியம் முதலாப்
பாதபூ சனைகள் பண்ணிய பின்னர்ப்
போனகம் படைத்துப் பொரிக்கறி பருப்புநெய்
ஆன்பால் மாங்கனி அழகிய பலாச்சுளை
தேன்கத லிப்பழஞ் சீர்பெறப் படைத்து
அந்தணன் தன்னை அமுது செய்வித்துச்
சந்தனங் குங்குமச் சாந்திவை கொடுத்துத்
தக்கோ லத்தொடு சாதிக் காயும்
கற்பூரத் தொடு கவின்பெறக் கொண்டு
வெள்ளிலை அடைக்காய் விளங்கிய பொன்னின்
ஒள்ளிய தட்டில் உவந்துமுன் வைத்துச்
சிவன்எனப் பாவனை செய்து நினைந்து
தவமுறை முனிவனைத் தாளிணை வணங்கத்
தேன்அமர் குழலி திருமுகம் நோக்கி
மோனமா முனிபுன் முறுவல் காட்டிக்
கற்றைச் சடையுங் கரமொரு நான்கும்
நெற்றியில் நயனமும் நீல கண்டமும்
மானும் மழுவும் மலர்க்கரத்து இலங்கக்
கூன்மதி நிலவும் கொழித்திட முடிமேல்
வரந்தரு முதல்வன் மடமயில் காணக்
கரந்ததன் உருவங் காட்டிமுன் நிற்ப
மரகத மேனி மலைமகள் தானும்
விரைவொடுஅங் குஅவன்அடி வீழ்ந்துஇறைஞ் சினளே
அரிஅயன் இந்திரன் அமரர் விஞ்சையர்
கருடர் கின்னரர் காய வாசியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தறுகலன் ஒளிபொற் தாலி பூட்டிச்
சிறுமதி நுதலியைச் சிவன்கைப் பிடித்தபின்
அரிவலஞ் சூழ எரிவலம் வந்து
பரிவுடன் பரிமளப் பாயலில் வைகிப்
போதுஅணி கருங்குழற் பூவைதன் உடனே
ஓதநீர் வேலைசூழ் உஞ்சைஅம் பதிபுக
ஏரார் வழியின் எண்திசை தன்னைப்
பாரா தேவா பனிமொழி நீஎன
வரும்கருங் குழலாள் மற்றும்உண் டோஎனத்
திருந்திழை மடந்தை திரும்பினள் பார்க்கக்
களிறும் பிடியும் கலந்துவிளை யாடல்கண்டு
ஒளிர்மணிப் பூணாள் உரவோன் உடனே
இவ்வகை யாய்விளை யாடுவோம் ஈங்கென
அவ்வகை அரனும் அதற்குஉடன் பட்டு
மதகரி உரித்தோன் மதகரி யாக
மதர்விழி உமைபிடி வடிவம தாகிக்
கூடிய கலவியிற் குவலயம் விளங்க
நீடிய வானோர் நெறியுடன் வாழ
அந்தணர் சிறக்க ஆனினம் பெருகச்
செந்தழல் வேள்விவேத ஆகமஞ் சிறக்க
அறம்பல பெருக மறம்பல சுருங்கத்
திறம்பல அரசர் செகதலம் விளங்க
வெங்கரி முகமும் வியன்புழைக் கையோடு
ஐங்கர தலமும் மலர்ப்பதம் இரண்டும்
பவளத்து ஒளிசேர் பைந்துவர் வாயுந்
தவளக் கிம்புரித் தடமருப்பு இரண்டுங்
கோடிசூ ரியர்போற் குலவிடு மேனியும்
பேழைபோல் அகன்ற பெருங்குட வயிறும்
நெற்றியில் நயனமும் முப்புரி நூலுங்
கற்றைச் சடையுங் கனகநீள் முடியுந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதமில் முனிவர் அவுணர் இராக்கதர்
பூதர் இயக்கர்கிம் புருடர் அலகை
சித்தர் தாரகைகந் தருவர்கள் முதலாய்க்
கணிக்கரும் பதினெண் கணத்தில்உள் ளவரும்
மணிக்கருங் களத்தனை வந்தடைந்து அதன்பின்
மன்றல்அங் குழலிக்கு வதுவைநாள் குறித்துத்
தென்றல்வந்து இலங்கு முன்றில் அகத்துப்
பொன்திகழ் பவளப் பொற்கால் நாட்டி
மாணிக் கத்தால் வளைபல பரப்பி
ஆணிப்பொன் தகட்டால் அழகுற வேய்ந்து
நித்தில மாலை நிரைநிரை துாக்கிப்
பத்திகள் தோறும் பலமணி பதித்துத்
தோரணம் நாட்டித் துகில்விதா னித்துப்
பூரணப் பொற்குடம் பொலிவுற வைத்துத்
திக்குத் தோறுந் திருவிளக்கு ஏற்றிப்
பத்திப் படர்முளைப் பாலிகை பரப்பிக்
கன்னலுங் கமுகுங் கதலியும் நாட்டிப்
பன்மலர் நாற்றிப் பந்தர்சோ டித்து
நலமிகு கைவலோர் நஞ்சுஅணி மிடற்றனைக்
குலவிய திருமணக் கோலம் புனைந்தார்
வருசுரர் மகளிர் மலைமகள் தன்னைத்
திருமணக் கோலஞ் செய்தனர் ஆங்கே
எம்பிரா னையும் இளங்கொடி தன்னையும்
உம்பர் எல்லாம் ஒருங்குடன் கூடிக்
கடல்என விளங்குங் காவணந் தன்னிற்
சுடர்விடு பவளச் சுந்தரப் பலகையில்
மறைபுகழ்ந்து ஏத்த மகிழ்ந்துஉட னிருத்திப்
பறைஒலி யோடு பனிவளை ஆர்ப்ப
வதுவைக்கு ஏற்ற மறைவிதி நெறியே
சதுர்முகன் ஒமச் சடங்குகள் இயற்றத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கிய முறம்போல் தழைமடிச் செவியுமாய்
ஐங்கரத்து அண்ணல் வந்துஅவ தரித்தலும்
பொங்கரவு அணிந்த புண்ணிய மூர்த்தியும்
மங்கை மனமிக மகிழ்ந்துஉடன் நோக்கி
விண்ணு ளோர்களும் விரிந்தநான் முகனும்
மண்ணு ளோர்களும் வந்துஉனை வணங்க
ஆங்குஅவர் தங்கட்கு அருள்சுரந்து அருளித்
தீங்கது தீர்த்துச் செந்நெறி அளித்துப்
பாரண மாகப் பலகனி அருந்தி
ஏரணி ஆலின்கீழ் இனிதிரு என்று
பூதலந் தன்னிற் புதல்வனை இருத்திக்
காதல்கூர் மடநடைக் கன்னியுந் தானும்
மைவளர் சோலை மாநகர் புகுந்து
தெய்வ நாயகன் சிறந்துஇனிது இருந்தபின்
வானவ ராலும் மானுட ராலுங்
கான் அமர் கொடிய கடுவிலங் காலும்
கருவிக ளாலுங் கால னாலும்
ஒருவகை யாலும் உயிர்அழி யாமல்
திரம்பெற மாதவஞ் செய்துமுன் னாளில்
வரம்பெறு கின்ற வலிமையி னாலே
ஐமுகச் சீயமொத்து அடற்படை சூழக்
கைமுகம் படைத்த கயமுகத்து அவுணன்
பொன்னுலகு அழித்துப் புலவரை வருத்தி
இந்நிலத் தவரை இடுக்கண் படுத்திக்
கொடுந்தொழில் புரியுங் கொடுமைகண்டு ஏங்கி
அடுந்தொழிற் குலிசத்து அண்ணலும் அமரருங்
கறைபடு கண்டக் கடவுளைப் போற்றி
முறையிடக் கேட்டு முப்புரம் எரித்தோன்
அஞ்சலீர் என்றுஅவர்க்கு அபயங் கொடுத்தே
அஞ்சுகைக் கரிமுகத்து அண்ணலை நோக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனை மாமுகத்து அவுணனொடு அவன்தன்
சேனைகள் முழுவதுஞ் சிந்திடப் பொருது
குன்றுபோல் வளர்ந்த குறட்படை கூட்டி
வென்றுவா என்று விடைகொடுத்து அருள
ஆங்குஅவன் தன்னோடு அமர்பல உடற்றிப்
பாங்குறும் அவன்படை பற்றுஅறக் கொன்றபின்
தேர்மிசை ஏறிச் சினங்கொடு செருவிற்
கார்முகம் வளைத்த கயமுகா சுரன்மேல்
ஒற்றை வெண் மருப்பை ஒடித்துஅவன் உரத்திற்
குற்றிட எறிந்தான் குருதிசோரந் திடவே
சோர்ந்து அவன் வீழ்ந்து துண்ணென எழுந்து
வாய்ந்தமூ ஷிகமாய் வந்துஅவன் பொரவே
வந்த மூஷிகத்தை வாகனம் ஆக்கி
எந்தை விநாயகன் ஏறினன் இப்பால்
எறிந்தவெண் மருப்புஅங்கு இமைநொடி அளவிற்
செறிந்தது மற்றவன் திருக்கரத் தினிலே
வெல்லவைக் கதிர்வேல் விழிபடைத்து அருளும்
வல்லவை தனைத்தன் மனைஎன மணந்தே
ஓகையோடு எழுந்துஆங்கு உயர்படை சூழ
வாகையும் புனைந்து வரும்வழி தன்னிற்
கருச்சங் கோட்டிற் கயல்கமுகு ஏறுந்
திருச்செங் காட்டிற் சிவனைஅர்ச் சித்துக்
கணபதீச் சரம்எனுங் காரண நாமம்
பணபதி புகழ்தரு பதிக்குஉண் டாக்கிச்
சங்கரன் பார்ப்பதி தனிமனம் மகிழ
இங்குவந்து அன்புடன் எய்திய பின்னர்க்
கணங்களுக்கு அரசாய்க் கதிர்முடி சூட்டி
இணங்கிய பெருமைபெற்று இருந்திட ஆங்கே
தேவர்கள் முனிவர் சித்தர்கந் தருவர்
யாவரும் வந்துஇவன் ஏவல்செய் திடுநாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகமாய் உரைக்கும் ஆவணித் திங்களின்
மதிவளர் பக்கம் வந்திடு சதுர்த்தியில்
விநாயகர்க்கு உரிய விரதம் என்றுஎண்ணி
மனாதிகள் கழித்து மரபொடு நோற்றார்
இப்படி நோற்றிட்டு எண்ணிய பெருநாள்
ஒப்பரும் விரதத்து உறும்ஒரு சதுர்த்தியில்
நோற்றுநற் பூசை நுடங்காது ஆற்றிப்
போற்றிசெய் திட்டார் புலவர் ஐங்கரனை
மருமலர் தூவும் வானவர் முன்னே
நிருமலன் குமரன் நிருத்தம் புரிந்தான்
அனைவரும் கைதொழுது அடிஇணை போற்ற
வனைகழற் சந்திரன் மனச்செருக்கு அதனால்
பேழைபோல் வயிறும் பெருத்தகாத் திரமும்
தாழ்துளைக் கையுந் தழைமுறச் செவியுங்
கண்டனன் நகைத்தான் கரிமுகக் கடவுளுங்
கொண்டனன் சீற்றங் குபேரனை நோக்கி
என்னைக் கண்டுஇங்கு இகழ்ந்தனை சிரித்தாய்
உன்னைக் கண்டவர் உரைக்கும்இத் தினத்திற்
பழியொடு பாவமும் பலபல விதனமும்
அழிவும்எய் துவரென்று அசனிபோற் சபித்தான்
விண்ணவர் எல்லாம் மிகமனம் வெருவிக்
கண்ணருள் கூருங் கடவுள்இத் தினத்திற்
கோரவெஞ் சினமிகக் கொண்டனன் அந்நாள்
மார்கழித் திங்கள் மதிவளர் பக்கஞ்
சதயந் தொட்ட சட்டிநல் விரதமென்று
இதயத்து எண்ணி யாவரும் நோற்றார்
இப்புவி மாந்தர் இயம்பிய விரதம்
வைப்புடன் நோற்ற வகைஇனிச் சொல்வாம்
குருமணி முடிபுனை குருகுலத் துதித்த
தருமனும் இளைய தம்பியர் நால்வருந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவகி மைந்தன் திருமுகம் நோக்கி
எண்ணிய விரதம் இடையூறு இன்றிப்
பண்ணிய பொழுதே பலிப்பு உண்டாகவுஞ்
செருவினில் எதிர்த்த செறுநரை வென்று
மருமலர்ப் புயத்தில் வாகை சூடவும்
எந்தத் தெய்வம் எவ்விர தத்தை
வந்தனை செய்யில் வருநமக்கு உரையெனப்
பாட்டுஅளி துதையும் பசுந்துழாய் மார்பனுங்
கேட்டருள் வீர்எனக் கிளர்த்துதல் உற்றான்
அக்குநீ றணியும் அரன்முதல் அளித்தோன்
விக்கினந் தீர்க்கும் விநாயக மூர்த்தி
ஒடவைத் திடும்பொன் ஒத்துஒளி விளங்குங்
கோடி சூரியர்போற் குலவிய மேனியன்
கடகரி முகத்தோன் காத்திரம் பெருத்தோன்
தடவரை போலுஞ் சதுர்ப்புயம் உடையோன்
சர்வ ஆபரணமுந் தரிக்கப் பட்டவன்
உறுமதிக் குழவிபோல் ஒருமருப்பு உடையோன்
ஒருகையில் தந்தமும் ஒருகையிற் பாசமும்
ஒருகையில் மோதகம் ஒருகையிற் செபஞ்செய்
உத்தம மாலையோன் உறுநினை வின்படி
சித்திசெய் வதனாற் சித்திவி நாயகன்
என்றுஇமை யவரும் யாவருந் துதிப்ப
நன்றி தருந்திரு நாமம் படைத்தோன்
புரவலர் காணப் புறப்படும் போதுஞ்
செருவினில் யுத்தஞ் செய்திடும் போதும்
வித்தியா ரம்பம் விரும்பிடும் போதும்
உத்தியோ கங்கள் உளுற்றிடும் போதும்
ஆங்குஅவன் தன்னை அருச்சனை புரிந்தால்
தீங்குஉறாது எல்லாஞ் செயம்உண் டாகும்
கரதலம் ஐந்துடைக் கணபதிக்கு உரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரதம்ஒன் றுஉளதுஅதை விரும்பிநோற் றவர்க்குச்
சந்ததி தழைத்திடுஞ் சம்பத்து உண்டாம்
புந்தியில் நினைந்த பொருள்கை கூடும்
மேலவர் தம்மையும் வென்றிட லாம்எனத்
தேவகி மைந்தன் செப்பிடக் கேட்டு
நுவலரும் விரதம் நோற்றிடும் இயல்பும்
புகர்முகக் கடவுளைப் பூசைசெய் விதமும்
விரித்து எமக்கு உரைத்திட வேண்டும் என்று இரப்ப
வரைக்குடை கவித்தோன் வகுத்துஉரை செய்வான்
தேருநீர் ஆவணித் திங்களின் மதிவளர்
பூர்வ பக்கம் புணர்ந்திடு சதுர்த்தியின்
முந்தும் புலரியின் முறைநீர் படிந்து
சந்தி வந்தனந் தவறாது இயற்றி
அத்தினம் அதனில் ஐங்கரக் கடவுளைப்
பக்தியோடு அர்ச்சனை பண்ணுதல் வேண்டும்
வெள்ளியாற் பொன்னால் விளங்கும் அவன்றன்
ஒள்ளிய அருள்திரு உருஉண் டாக்கிப்
பூசனை புரியப் புகன்றனர் பெரியோர்
ஆசுஇலா மண்ணால் அமைத்தலும் தகுமால்
பூசைசெய் திடும்இடம் புனிதமது ஆக்கி
வாசமென மலரின் மஞ்சரி தூக்கிக்
கோடிகங் கோசிகங் கொடிவிதா னித்து
நீடிய நூல்வளை நிறைகுடத்து இருத்தி
விந்தைசேர் சித்தி விநாயகன் உருவைச்
சிந்தையின் நினைந்து தியானம் பண்ணி
ஆவா கனம்முதல் அர்க்கிய பாத்தியம்
வாகா ராச மனம்வரை கொடுத்து
ஐந்துஅமிர் தத்தால் அபிடே கித்துக்
கந்தஞ் சாத்திக் கணேசமந் திரத்தால்
ஈசுர புத்திரன் என்னும்மந் திரத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசுஅகல் இரண்டு வத்திரஞ் சாத்திப்
பொருந்துஉமை சுதனாப் புகலுமந் திரத்தால்
திருந்தும் பளிதத் தீபங் கொடுத்துப்
பச்சறுகு உடன்இரு பத்தொரு விதமாய்ப்
பத்திர புட்பம் பலபல கொணர்ந்தே
உமாசுதன் கணாதிபன் உயர்கரி முகத்தோன்
குமார குரவன் பாசஅங் குசகரன்
ஏக தந்தன் ஈசுரன் புத்திரன்
ஆகு வாகனன் அருள்தரு விநாயகன்
சர்வகா ரியமுந் தந்துஅருள் புரிவோன்
ஏரம்ப மூர்த்தி என்னும்நா மங்களால்
ஆரம் பத்துடன் அர்ச்சனை பண்ணி
மோதகம் அப்பம் முதற்பணி காரந்
தீதகல் மாங்கனி தீங்கத லிப்பழம்
வருக்கை கபித்த மாதுளங் கனியொடு
தரித்திடு நெட்டிலைத் தாழைமுப் புடைக்காய்
பருப்புநெய் பொரிக்கறி பாறயிடூ போனகம்
விருப்புள சுவைப்பொருள் மிகவும்முன் வைத்து
உருத்திரப் பிரியஎன்று உரைக்கும்மந் திரத்தால்
நிருத்தன் மகற்கு நிவேதனங் கொடுத்து
நற்றவர் புகன்றநா னான்குஉப சாரமும்
மற்றவன் திருவுளம் மகிழ்ந்திடச் செய்து
எண்ணுந் தகுதி இருபிறப் பாளர்க்கு
உண்அறு சுவைசேர் ஓதனம் நல்கிச்
சந்தனம் முத்துத் தானந் தக்கிணை
அந்தணர்க்கு ஈந்திட்டு அருச்சகன் தனக்குத்
திருத்தகு விநாயகத் திருவுரு வத்தைத்
தரித்தவத் திரத்துடன் தானமாய்க் கொடுத்து
நைமித் திகம்என நவில்தரு மரபால்
இம்முறை பூசனை யாவர்செய் தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிய கருமம் யாவையும் முடிப்பர்
திண்ணிய செருவிற் செயம்மிகப் பெறுவர்
அரன்இவன் தன்னைமுன் அர்ச்சனை பண்ணிப்
புரம்ஒரு மூன்றும் பொடிபட எரித்தான்
உருத்திரன் இவனை உபாசனை பண்ணி
விருத்திரா சுரனை வென்றுகொன் றிட்டான்
அகலிகை இவன் தாள் அர்ச்சனை பண்ணிப்
பகர்தருங் கணவனைப் பரிவுடன் அடைந்தாள்
தண்ஆர் மதிமுகத் தாள்தம யந்தி
அன்னாள் இவனை அர்ச்சனை பண்ணி
நண்ணார் பரவும் நளனை அடைந்தாள்
ஐங்கரக் கடவுளை அர்ச்சனை பண்ணி
வெங்கத நிருதரை வேர்அறக் களைந்து
தசரதன் மைந்தன் சீதையை அடைந்தான்
பகிரதன் என்னும் பார்த்திவன் இவனை
மகிதலந் தன்னில் மலர்கொடுஅர்ச் சித்து
வரநதி தன்னை வையகத்து அழைத்தான்
அட்டதே வதைகளும் அர்ச்சித்து இவனை
அட்ட போகத்துடன் அமிர்தமும் பெற்றார்
உருக்குமணி என்னும் ஒண்டொடி தன்னைச்
செருக்கொடு வவ்விச் சிசுபா லன்றான்
கொண்டுபோம் அளவிற் குஞ்சர முகவனை
வண்டுபாண் மிழற்றா மலர்கொடுஅர்ச் சித்துத்
தாரியின் மறித்தவன் தனைப்புறங் கண்டு
யாமும் அங்கு அவளை இன்புறப் பெற்றோம்
புகர்முகக் கடவுளைப் பூசனை புரிந்து
மிகமிக மனத்தில் விழைந்தன பெற்றார்
இப்புவி தன்னில் எண்ணுதற்கு அரிதால்
அப்படி நீவிரும் அவனைஅர்ச் சித்தால்
எப்பொருள் விரும்பினீர் அப்பொருள் பெறுவீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுகன்று எறிந்தோன் எடுத்திவை உரைப்ப
அன்றுமுதல் தருமனும் அனுசரும் இவனைப்
பூசனை புரிந்துகட் புலன் இலான் மைந்தரை
நாசனம் பண்ணி நராதிபர் ஆகிச்
சிந்தையில் நினைந்தவை செகத்தினிற் செயங்கொண்டு
அந்தமில் செல்வத்து அரசியல் பெற்றார்
ஈங்குஇது நிற்க இவ்விர தத்துஇயல்
ஓங்கிய காதைமற்று ஒன்றுஉரை செய்வாம்
கஞ்சநான் முகன்தருங் காசிபன் புணர்ந்த
வஞ்சக மனத்தாள் மாயைதன் வயிற்றிற்
சூரன் என்று ஒருவனுந் துணைவருந் தோன்றி
ஆர்கலி சூழ்புவி அனைத்தையும் அழித்தே
சீருடைச் சுவர்க்கத் திருவளங் கெடுத்தும்
புரந்தரன் முதலிய புலவரை வருத்தியும்
நிரந்தரந் தீய நெறிநடத் துதலால்
ஆயிரங் கண்ணனும் அமரரும் முனிவரும்
நீஇரங்கு எமக்குஎன நெடுங்கரங் கூப்பி
இரசத கிரிஉறை இறைவனை வணங்கி
வரமிகுஞ் சூரன் வலிமைகள் உரைக்கச்
சுடர்விடு மணிமுடிச் சூரனை வெல்லக்
கதிர்விடு வடிவேல் கரதலத்து ஏந்தும்
புதல்வனைத் தருவோம் போமின் நீர்என
அமரர் கோனுக்கு அரன்விடை கொடுத்துச்
சமர வேல்விழித் தையலுந் தானுங்
கூடிய கலவியிற் கூடாது ஊடலும்
ஓடிய வானோர் ஒருங்குஉடன் கூடிப்
பாவகன் தன்னைப் பரிவுடன் அழைத்துச்
சூரன் செய்யுந் துயரம் எல்லாம்
ஊர்அரவு அணிந்தோற்கு உரையென உரைப்பக்
காமனை எரித்த கடவுள்என்று அஞ்சிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவகன் பயமுறப் பயம்உனக்கு ஏதென
உற்றிடுங் கரதலத்து உன்னையே தரித்தான்
நெற்றியின் நயனமும் நீயே ஆதலிற்
குற்றம் அடாது கூறுநீ சென்றென
வானவர் மொழிய மற்றவன் தானுந்
தானும்அச் சபையில் தாரியாது ஏகி
எமைஆ ளுடைய உமையா ளுடனே
அமையா இன்பத்து அமர்ந்துஇனிது இருந்த
பள்ளி மண்டபம் பாவகன் குறுகலும்
ஒள்ளிய மடந்தை ஒதுங்கிநா ணுதலுந்
தெள்ளிதிற் பரமனுந் தேயுவைக் கண்டே
அறுமுகப் பிள்ளையை அவன்கையில் ஈதலும்
வறியவன் பெற்ற வான்பொருள் போலச்
சோதி நீண்முடிச் சுடரோன் கொணர்ந்து
வாத ராசன் மலர்கையிற் கொடுப்ப
நீதி யோடு நின்றுகை யேந்திப்
போதநீள் வாயுவும் பொறுக்கஓண் ணாமல்
தரும்புனற் கங்கை தன்கையிற் கொடுப்பத்
தரும்புனற் கங்கையும் தாங்க ஒண்ணாமற்
பொருந்திரைச் சரவணப் பொய்கையில் வைப்பத்
தண்ஆர் வதனத் தாமரை ஆறுங்
கண்ஆ றிரண்டுங் கரம்ஈ ராறும்
தூண்எனத் திரண்ட தோள் ஈராறும்
மாண்அயில் ஆதி வான்படை யுங்கொண்டு
அறுமுகக் கடவுள்அங்கு அவதரித் திடலும்
மறுகிய உம்பர் மகிழ்வுடன் கூடி
அறுமீன் களைப்பால் அளித்திர்என்று அனுப்ப
ஆங்கவர் முலைஉண்டு அறுமுகன் தானும்
ஓங்கிய வளர்ச்சி உற்றிடு நாளில்
விமலனும் உமையும் விடையு கைத்து ஆறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமகன் இருந்த சரவணத்து அடைந்து
முருகுஅலர் குழல்உமை முலைப்பால் ஊட்ட
இருவரும் இன்பால் எடுத்துஎடுத்து அணைத்துத்
தேவர்தம் படைக்குச் சேனா பதியெனக்
காவல் கொண்டு அளிக்கக் கதிர்முடி சூட்டி
அயில்வேல் முதற்பல ஆயுதங் கொடுத்துத்
திசைஎலாஞ் செல்லுந் தேரும்ஒன்று உதவிப்
பூதப் படைகள் புடைவரப் போய்நீ
ஓதுறும் அவுணரை ஒறுத்திடுஎன்று அனுப்ப
இருளைப் பருகும் இரவியைப் போலத்
தகுவரென்று அவரைச் சமரிடை முருக்கிக்
குருகுப் பேர்பெறுங் குன்றமுஞ் சூரன்
மருமமுந் துளைபட வடிவேல் விடுத்தே
யாவரும் வியப்புற இந்திரன் மகளாந்
தேவகுஞ் சரியைத் திருமணம் புணர்ந்திட்டு
அமரர் கோனுக்கு அமருலகு அளித்துக்
குமர வேளுங் குவலயம் விளங்க
அமரா வதியில் அமர்ந்துஇனிது இருந்தான்
சமர வேலுடைச் சண்முகன் வடிவுகண்டு
அமரர் மாதர் அனைவரும் மயங்கி
எண்டருங் கற்பினை இழந்தது கண்டே
அண்டர் எல்லாம் அடைவுடன் கூடி
மாதொரு பாகனை வந்துஅடி வணங்கி
மருமலர்க் கடம்பன்எம் மாநகர் புகாமல்
அருள்செய வேண்டும்நீ அம்பிகா பதியென
இமையவர் உரைப்ப இறையவன் தானுங்
குமரனைக் கோபங் கொண்டுமுன் முனியக்
காவல் கொண்டு எம்வினை கட்டறுத்து அருளுஞ்
சேவலங் கொடியோன் தேசம் போகத்
திருந்திழை உமையாள் அருந்துயர் எய்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருந்திமுன் நிற்க மங்கையைப் பார்த்து
மங்கை நீதான் வருந்துதல் ஒழிகுதி
அங்கையாற் சூதெறிந்து ஆடுவோம் வாவென
வென்றதுந் தோற்றதும் விளம்புவார் யாரெனக்
குன்றமென் முலையாள் கூறிய சமயம்
புற்றுஅரவு அணிந்த புனிதனைக் காணஅங்கு
உற்றனன் திருமால் ஊழ்வினை வலியாற்
சக்கிர பாணியைச் சான்றெனக் குறித்து
மிக்கதோர் சூது விருப்புடன் ஆடச்
சாயக நேருந் தடநெடுங் கருங்கண்
நாயகி வெல்ல நாயகன் தோற்ப
இன்பவாய் இதழ்உமை யான்வென் றேன்என
எம்பெரு மானும் யான்வென் றேன்என
ஒருவர்க் கொருவர் உத்தரம் பேசி
இருவரும் சாட்சி இவனைக் கேட்ப
மாமனை வதைத்த மால்முகம் நோக்கிக்
காமனை எரித்தோன் கண்கடை காட்ட
வென்ற நாயகி தோற்றாள் என்றுந்
தோற்ற நாயகன் வென்றான் என்றும்
ஒன்றிய பொய்க்கரி உடன்அங்கு உரைப்பக்
கன்றிய மனத்தொடு கவுரிஅங்கு உருத்து
நோக்கிநீ இருந்தும் நுவன்றிலை உண்மை
வாக்கினில் ஒன்றாய் மனத்தினில் ஒன்றாய்
மைக்கரி உரித்தோன் வதனம் நோக்கிப்
பொய்க்கரி உரைத்த புன்மையி னாலே
கனல்என வயிற்றிற் கடும்பசி கனற்ற
நிலமிசைக் குருட்டு நெட்டுடற் பாம்பாய்க்
கடகரி முகத்துக் கடவுள்வீற்று இருக்கும்
வடதரு நீழலிற் கிடவெனச் சபித்தாள்
முளரிகள் பூத்த முகில்நிறத்து உருப்போய்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துளவுஅணி மருமனுந் துணைவிழி இழந்தே
ஆண்டுஅரைக் கணத்தில் ஆயிரம் யோசனை
நீண்டபைப் பாந்தள் நெட்டுடல் எடுத்து
வளர்மருப்பு ஒன்றுடை வள்ளல்வீற்று இருக்குங்
கிளர்சினை ஆலின் கீழ்க்கிடந் தனனால்
திரிகடக் கரியின் திருமுகக் கடவுளும்
வழிபடும் அடியார் வல்வினை தீர்த்தே
எழில்பெறு வடமரத் தின்கீழ் இருந்தான்
கம்பமா முகத்துக் கடவுள்தன் பெருமையை
அம்புவி யோருக்கு அறிவிப் போம்என
உம்பர் உலகத்து ஓரெழு கன்னியர்
தம்பநூல் ஏணியில்தாரணி வந்து
கரிமுகக் கடவுளைக் கைதொழுது ஏத்திக்
கார்த்திகைக் கார்த்திகை கழிந்தபின் நாளில்
ஆர்த்த கலிங்கத்து அணியிழை வாங்கி
இருபத் தோர்இழை இன்புறக் கட்டி
ஒருபோது உண்டி உண்டுஒரு மனமாய்
வேதத்து ஆதியும் பூமியில் எழுத்தும்
ஆதிவி நாயகற்கு ஆன எழுத்தும்
மூன்றுஎழுத் ததனால் மொழிந்தமத் திரமும்
தேன்தருங் குழலியர் சிந்தையுட் செபித்தே
உரைதரு பதினாறு உபசா ரத்தால்
வரைமகள் மதலையை வழிபாடு ஆற்றி
இருபது நாளும் இப்படி நோற்று
மற்றநாள் ஐங்கர மாமுகன் பிறந்த
அற்றைநாட் சதயமும் ஆறாம் பக்கமுஞ்
சேரும்அத் தினத்தில் தெளிபுனல் ஆடி
வாரண முகத்தோன் வருபெருங் கோயில்
சீர்பெற மெழுகித் திருவிளக்கு ஏற்றிக்
குலவுபொற் கலைகள் கொடுவி தானித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்பல தொடுத்திடு மாலைகள் ஆற்றிக்
கொலைபுரி வடிவேற் குகற்குமுன் வருகை
மலைமுகக் கடவுளை மஞ்சனம் ஆட்டிப்
பொற்கலை நன்நூற் பூந்துகில் சாத்திச்
சொற்பெறு சந்தனச் சுகந்தம் பூசிச்
செருந்தி சண்பகஞ் செங்கழு நீரொடு
குருந்து மல்லிகை கோங்கொடு பிச்சி
கருமுகை புன்னை கடிகமழ் பாதிரி
மருவிரி ஞாழல் மகிழ்இரு வாட்சி
தாமரை முல்லை தளைஅவிழ் கொன்றை
பூமலர் நொச்சி பூத்தமைக் குவளை
காந்தள் ஆத்தி கடம்புசெவ் வந்தி
வாய்ந்தநல் எருக்கு மலர்க்கர வீரம்
பச்சிலை நொச்சி படர்கொடி அறுகு
முத்தளக் கூவிளம் முதலிய சாத்தித்
தூபதீ பங்கள் சுகம்பெறக் கொடுத்தே
அப்பம் மோதகம் அவல்எள் ளுருண்டை
முப்பழந் தேங்காய் முதிர்மொளிக் கரும்பு
சீனிதேன் சர்க்கரை செவ்விள நீருடன்
பால்நறு நெய்தயிர் பருப்புடன் போனகங்
கற்பகக் கடவுள் களித்திடத் திருமுன்
பொற்புறப் படைத்துப் பூசனை பண்ணி
நோற்பது கண்டு நோலாது இருந்த
பாப்புரு வாகிய பஞ்சா யுதனும்
யாப்புறு கொங்கையீர் யானும்நோற் பேனென
ஆங்குஅவன் தனக்கும் வேண்டுவது அளித்துப்
பாங்கொடுஇவ் விரதம் பரிந்துநோற் பித்தார்
அண்டர்நா யகனாம் ஐங்கரன் அருளால்
விண்டுவும் பண்டுஉள வேடம் பெற்றே
உஞ்ஞைமா நகர்புகுந்து உமையொடு விமலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஞ்சநாள் மலர்ப்பதங் கைதொழு திடலும்
பஞ்சிமென் சீறடிப் பார்ப்பதி நெஞ்சின்
வெஞ்சினம் மிகுந்து விமலனை நோக்கி
யான்இடுஞ் சாபம் நீங்கியது ஏனென
மானெடுங் கண்ணி மணிக்கதவு அடைப்ப
இறையவன் இதற்குக் காரணம் ஏதென
மறிகடல் துயிலும் மாயவன் உரைப்பான்
பிறைமருப்பு ஒன்றுடைப் பிள்ளைஅன்று எனக்குத்
தந்துஅருள் புரிந்த தவப்பயன் ஈதெனச்
சிந்தை மகிழ்ந்து தேவர் தேவனும்
பூங்கொடி அடைத்த பொன்தாழ் நீங்கச்
சாங்குமுன் உரைத்த சக்கர பாணி
இக்கதை சொல்ல அக்கணி சடையனும்
மிக்கநல் விரதம் விருப்புடன் நோற்றபின்
மாதுமை அடைத்த வன்தாழ் நீக்கி
நாதனை நணுகிட நம்பனும் நகைத்தான்
நாணோ வந்து நகையா னதுஎனத்
தேன்நேர் மொழியாள் தெளியக் கூறென
நன்மதி நுதலாய் நானிலந் தன்னில்
உன்மகன் நோன்பின் உறுதி அறிந்து
சிந்தை மகிழ்ந்து சிரித்தேன் யானென
அந்தமில் அரனை ஆயிழை வணங்கிப்
பொருஞ்சூர் அறவேல் போக்கிய குமரன்
வரும்படி யானும் வருந்திநோற் பேனென
இறையவன் கதைசொல ஏந்திழை நோற்றபின்
குறமட மகளைக் குலமணம் புணர்ந்தோன்
சுடர்வடி வேலோன் தொல்வினை தீர்ந்து
தாதுமை வண்டுஉழுந் தாமத் தாமனை
மாதுமை யாளை வந்துகண் டனனே
கண்ணநீ கண்ணிலாக் கட்செவி யாகெனத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்நறுங் குழல்உமை சாபம்இட் டதுவும்
அக்குநீறு அணியும் அரன்முதல் அளித்த
விக்கின விநாயக விரதம்நோற்று அதன்பின்
சுடர்க்கதை ஏந்துந் துளவ மாலையன்
விடப்பணி உருவம் விட்டுநீங் கியதும்
பரிவுகொள் கூத்துடைப் பரமனும் நோற்றுக்
கவுரிஅன்று அடைத்த கபாடந் திறந்ததும்
வாசமென குழலுடை மாதுமை நோற்பத்
தேசம் போகிய செவ்வேள் வந்ததும்
வானவர் நோற்று வரங்கள் பெற்றதும்
நாரத முனிவன் நவின்றிடக் கேட்டே
இந்நிலந் தன்னில் இவ்விர தத்தை
மன்னவன் வச்சிர மாலிமுன் நோற்றுக்
காயத் தெழுந்த கடும்பிணி தீர்ந்து
மாயிரும் புவியின் மன்னனாய் வாழ்ந்து
தடமுலைத் திலோத்தமை தனைமணம் புணர்ந்து
மழவிடை போற்பல மைந்தரைப் பெற்றுக்
கடைமுறை வெள்ளியங் கயிலையில் உற்றான்
பரிவொடுஇவ் விரதம் பாரகந் தன்னில்
விரைகமழ் நறுந்தார் விக்கிரமா தித்தன்
மறிகடற் புவிபெற வருந்தி நோற்றிடுநாள்
மற்றவன் காதன் மடவரல் ஒருத்தி
இற்றிடும் இடையாள் இலக்கண சுந்தரி
மெத்தஅன் புடன்இவ் விரதம்நோற் பேனென
அந்தந் தன்னில் அணியிழை செறித்துச்
சித்தம் மகிழ்ந்து சிலநாள் நோற்றபின்
உற்ற நோன்பின் உறுதி மறந்து
கட்டிய இழையைக் காரிகை அவிழ்த்து
வற்றிய கொவ்வையின் மாடே போட
ஆங்குஅது தழைத்தே அலருந் தளிருமாய்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாங்குற ஓங்கிப் படர்வது கண்டு
வேப்பஞ் சேரியிற் போய்ச்சிறை இருந்த
பூப்பயில் குழல்சேர் பொற்றொடி ஒருத்தி
அவ்வியம் இல்லாள் அவ்விடந் தன்னிற்
கொவ்வை அடகு கொய்வாள் குறுகி
இழையது கிடப்பக் கண்டுஅவள் எடுத்துக்
குழைதவிழ் வரிவிழிக் கோதைகைக் கட்டி
அப்பமோடு அடைக்காய் அவைபல வைத்துச்
செப்பமுடனே திருந்திழை நோற்றிடக்
கரிமுகத்து அண்ணல் கருணை கூர்ந்து
பண்டையில் இரட்டி பதம்அவட்கு அருளக்
கொண்டுபோய் அரசனுங் கோயிலுள் வைத்தான்
விக்கிரமா தித்தன் விழிதுயில் கொள்ள
உக்கிர மானஉடை மணிகட்டித்
தண்டையுஞ் சிலம்புந் தாளினின்று ஒலிப்பக்
கொண்டல் போல்வருங் குஞ்சர முகத்தோன்
மனமிகக் கலங்கும் மன்னவன் தன்னிடங்
கனவினில் வந்து காரண மாக
இலக்கண சுந்தரி இம்மனை இருக்கிற்
கலக்கம் வந்திடுங் கழித்திடு புறத்தெனத்
துண்ணென எழுந்து துணைவியை நோக்கிக்
கண்ணுறக் கண்ட கனவின் காரணம்
அண்ணல் உரைத்திடும் அவ்வழி தன்னில்
ஆனை குதிரை அவைபல மடிவுற
மாநகர் கேடுறும் வகையது கண்டு
இமைப்பொழுது இவள்இங்கு இருக்கலா காதுஎன
அயற்கடை அவனும் அகற்றிய பின்னர்
வணிகன் தனது மனைபுகுந்து இருப்ப
மணியும் முத்தும் வலியகல் லாய்விட
அணியிழை தன்னை அவனும் அகற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழவர்தம் மனையில் உற்றுஅவள் இருப்ப
வளர்பயிர் அழிந்து வளம்பல குன்ற
அயன்மனை அவரும் அகற்றிய பின்னர்க்
குயவன் மனையிற் கோற்றொடி செல்லக்
குயக்கலம் உடைந்து கொள்ளை போக
அயற்கடை அவனும் அகற்றிய பின்னர்
தூசுதூய் தாக்குந் தொழிலோர் மனைபுகத்
தூசுகள் எல்லாந் துணிந்துவே றாகத்
தூசரும் அவளைத் தூரஞ் செய்ய
மாலைக் காரன் வளமனை புகலும்
மாலை பாம்பாம் வகையது கண்டு
ஞாலம் எல்லாம் நடுங்கவந்து உதித்தாய்
சாலவும் பாவிநீ தான்யார் என்ன
வெம்மனம் மிகவும் மேவி முனிவுறா
அம்மனை அவனும் அகற்றிய பின்னர்
அவ்வை தன்மனை அவள் புகுந்திருப்ப
அவ்வை செல்லும் அகங்கள் தோறும்
வைதனர் எறிந்தனர் மறியத் தள்ளினர்
கைகொடு குற்றினர் கண்டோர் பழித்தனர்
அவ்வை மீண்டுதன் அகமதிற் சென்று
இவ்வகைக் கன்னிநீ யாரென வினாவக்
காத்தாண்டு உலகு கருணையோடு ஆண்ட
மார்த்தாண்ட ராசன் மாமகள் ஒருத்தி
எல்லார்க்கும் மூத்தாள் இலக்கண சுந்தரி
சொல்லுவிக் கிரம சூரியன் மனையெனச்
சீர்கெட இருந்த தெரிவையை நோக்கி
நீரது கொண்டு நிலம்மெழு கிடுகெனச்
சாணி எடுக்கத் தையலுஞ் சென்றாள்
சாணியும் உழுத்துத் தண்ணீர் வற்றிப்
பேணிய புழுவாய்ப் பெரிது தோன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான்நேர் விழியாள் வருந்துதல் கண்டு
தானே சென்று சாணி எடுத்துத்
தண்ணீர் கொணர்ந்து தரைமெழுக் கிட்டு
மண்ணிய வீட்டில் மணிவிளக்கு ஏற்றிப்
புத்தகம் எடுத்து வாவெனப் புகலப்
புத்தகம் பாம்பாய்ப் பொருந்துநின்று ஆட
மெத்தஉள் நடுங்கி வீழ்ந்துஅவள் கிடப்பக்
கொவ்வையங் கனிவாய்க் கோதையை விலக்கி
அவ்வை தானே அகமதிற் சென்று
புத்தகம் எடுத்துப் பொருந்தப் பார்த்து
வித்தக நம்பி விநாயக மூர்த்தி
கற்பகப் பிள்ளைசெய் காரியம் இதுவென
உத்தமி அவ்வை உணர்ந்துமுன் அறிந்து
தவநெறி பிழைத்த தையலை நோக்கி
நுவலரும் விநாயக நோன்புநோற் றிடுகெனக்
கரத்து மூஏழுஇழைக் காப்புக் கட்டி
அப்பமும் அவலும் மாம்பல பண்டமுஞ்
செப்பம தாகத் திருமுன் வைத்தே
அவ்வை கதைசொல ஆயிழை கேட்டு
மத்தகக் களிற்றின் மகாவிர தத்தை
வித்தக மாக விளங்குஇழை நோற்றுக்
கற்பக நம்பி கருணைபெற்றதன் பின்
சக்கர வாள சைனியத் தோடு
விக்கிரமா தித்தன் வேட்டையிற் சென்று
தானுஞ் சேனையுந் தண்ணீர் விரும்பி
எவ்வகை செய்வோம் எனஉளம் மெலிந்தே
அவ்வை தன்மனை அங்குஅவர் அணுக
எய்துந் தாகமும் இளைப்புங் கண்டு
செவ்வே அவற்றைத் தீர்க்க எண்ணி
இலக்கண சுந்தரி என்பவள் தன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பமும் நீரும் அரசற்கு அருளெனச்
செப்பிய அன்னை திருமொழிப் படியே
உண்நீர்க் கரகமும் ஒருபணி காரமும்
பண்நேர் மொழியாள் பார்த்திபற்கு உதவ
ஒப்பறு படையும் உயர்படை வேந்தனும்
அப்பசி தீர அருந்திய பின்னர்
ஆனை குதிரை அவைகளும் உண்டுந்
தானது தொலையாத் தன்மையைக் கண்டே
இவ்வகை சமைத்தநீ யாரென வினவ
மவ்வல்அம் குழலாள் மௌனமாய் நிற்ப
அவ்வை தான்சென்று அரசற்கு உரைப்பாள்
கணபதி நோன்பின் காரணங் காண்இது
குணமுடை இவள்உன் குலமனை யாட்டி
இலக்கண சுந்தரி என்றுஅவ்வை கூற
மங்கையை நோக்கி மனமிக மகிழ்ந்து
திங்கள்நேர் வெள்ளிச் சிவிகையில் ஏற்றிக்
கொண்டுஊர் புகுந்தான் கொற்ற வேந்தனும்
ஒண்தொடி யாரில் உயர்பதம் உதவினன்
சிந்துர நுதலார் சென்றுஅடி பணியச்
சுந்தரி யிருந்தாள் சுகத்துடன் மகிழ்ந்தே

## காப்பு

கரும்பும் இளநீருங் காரெள்ளுந் தேனும்
விரும்பும் அவல்பலவும் மேன்மேல் – அருந்திக்
குணமுடைய னாய்வந்து குற்றங்கள் தீர்க்குங்
கணபதியே இக்கதைக்குக் காப்பு

திருவிளங்கு மான்மருகா சேவதனில் ஏறி
வரும் அரன்தாள் ஈன்றருளு மைந்தா– முருகனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பிறந்த யானை முகவா உனைத்தொழுவேன்
என்கதைக்கு நீயென்றுங் காப்பு

## நூற்பயன்

பொன்னுமிகும் கல்விமிகும் புத்திரரோடு எப்பொருளும்
மன்னும் நவமணியும் வந்துஅணுகும் – உன்னி
ஒருக்கொம்பின் யானைமுக உத்தமனார் நோன்பின்
திருக்கதையைக் கேட்கச் சிறந்து

பொற்பணைக்கை முக்கண் புகர்முகத்துப் பொன்மவுலிக்
கற்பகத்தின் நோன்பின் கதைதன்னைச் – சொற்பெருகக்
கற்றவரும் நோற்றவருங் காதலித்துக் கேட்டவரும்
பெற்றிடுவர் கற்பகத்தின் பேறு.

வெள்ளை எருதுஏறும் விரிசடையோன் பெற்றுஎடுத்த
பிள்ளையார் நோன்பின் பெருங்கதையை – உள்ளபடி
நோற்றார் மிகவாழ்வார் நோலாது அருகு இருந்து
கேட்டோர்க்கும் வாராது கேடு.

சூலிலார் நோற்கிற் சுதரை மிகப்பெறுவார்
சாலமிகும் வெங்கலியார் தாம்நோற்கில் –மேலைப்
பிறப்புஎல்லாம் நல்ல பெருஞ்செல்வம் எய்திச்
சிறப்பிலே வாழ்வார் சிறந்து.

பிள்ளையார் கதை முற்றுப்பெற்றது
திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்னமருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்

வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நிறைந்த கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூஷிக வாகன!

இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து

குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்

தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்கும் கருத்தினை யறிவித்(து)
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து

தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறா தாரத்(து) அங்குச நிலையும்

பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்

குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்

குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடல்சக் கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண் முகமாக இனிதெனக் கருளிப்

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக் கருளி
என்னை யறிவித்(து) எனக்கருள் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்(து)
இருள்வெளி யிரண்டுக்(கு) ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்(து) அழுத்தியென் செவியில்

எல்லை யில்லா ஆனந் தம்அளித்(து)
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்(கு) அணுவாய் அப்பாலுக்(கு) அப்பாலாய்க்

கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்

தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## ஸ்ரீ காசி துண்டிராஜகணபதி திருவருட்பா

காப்பு – வெண்பா

சீர்கொண்ட காசிநகர் சேர்துண்டி ராசனெனும்
பேர்கொண்ட ஐங்கரற்குப் பேசுபுகழ்த் - தார்கொண்ட
நற்றிருப்பாட் டீரைந்து ஞாலமிசைத் தொண்டரெலாங்
கற்றிருப்பார் மேலாம் கதி.

ஓங்கார வடிவான உன்பாத தாமரையும்
உபயபரி புரமறைகளும்
உதிக்கின்ற செங்கதிர்கள் ஒருகோடி நிகரொளியும்
உத்தூள நீற்றி னொளியும்
பாங்கார் கசானனமும் முககரமும் வளர்புயப்
பவளாச லங்கள் நான்கும்
பாசமுட னங்குசம் கொம்போ ரிலட்டுகம்
பட்சமொடு வைத்த கரமும்
நீங்காத அருள்மாரி பொழியும்த்ரி யம்பகமும்
நிறையுமும் மதமாரியும்
நீள்சடா டவியும்வெண் பிறையும்ஒரு தொந்தியும்
நெஞ்சில்ஒரு காலும் மறவேன்
காங்கேயன் மகிழ்தமைய னேகங்கைநதி பெருகு
காசிவாழ் துண்டிராச
கணபதி யெனும்பெரிய குணமேரு வேஅருட்
கருணா நிதிக்கடவுளே. 1

அருளால் உருக்கொண்ட ஆனந்த வெள்ளமே
அனந்தசூ ரியர் உதயமே
ஆயிரங் கோடிசந் திரர் உதய மேயின்பம்
ஆனமழை பொழிமேகமே
திருவே பெருஞ்செல்வ மேகாம தேனுவே
சிந்தா மணிக்குவியலே
தேனுவின் பாலுடன் கற்பகப் பூவில்எழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தேன் கலந்த கடலே
தருவான கற்பகச் சோலையே யெல்லாம்
தரும் பெரிய பதுமநிதியே
சங்கநிதியே உண்ண வுண்ணத் தெவிட்டாத
தண்ணமுதின் அதிமதுரமே
கருவூல மேயென் றுனைப்பாடி உருகஅருள்
காசிவாழ் துண்டிராச
கணபதி யெனும்பெரிய குணமேரு வேஅருட்
கருணா நிதிக்கடவுளே. 2

உன்ஒரு கையிற்கொம்பு வெள்ளியங் கயிலையாம்
ஒரு கனக கிம்புரிக்கொம்
புயர்மேரு கிரியாகு மேனிசெவ் வானமாம்
ஓங்கு கங்கணம் அனந்தன்
வன்னிரவி சந்திரன் திருநயனம் ஏழெனும்
மகாசலதிகள் மும்மதம்
வளர்சண்ட மாருதம் செவிமா ருதம் சக்ர
வாளகிரி நீள்துதிக்கை
பன்னுநான் மறைசிலம் போங்கு காலாக்கினி
பரந்தநற் கோபாக்கினி
பரிபா கரைக்கொண்டு குற்றேவல் கொள்கின்ற
பரப்பிர்ம மத்தகஜநீ
கன்னெஞ்சன் என்மலக் காட்டைமுரி யாததென்
காசிவாழ் துண்டிராச
கணபதி யெனும்பெரிய குணமேரு வேஅருட்
கருணா நிதிக்கடவுளே. 3

குஞ்சரக் கன்றுநீ ஒழியாமல் நிற்கின்ற
கூடம்என் இதயவெளியாம்
குழந்தைவடி வாம்இளைய பன்னிருகை மழகளிறு
கூடிவிளை யாடி நிற்க
அஞ்சுதொழில் உனது விளையாட்டாக மதசலம்
அருட்கிரியை ஞானம்இச்சை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக ஐந்தொழில்நடத் தகராதி நாதஒலி
ஆணைஉன் பெருமுழக்காம்
நெஞ்சில் நிறைவாந் திரோதான கோபத்தைநீ
நீக்கிஎன் தற்போதமாம்
நிறைகவளம் அருள்வாயினால் உண்டு கர்ச்சித்து
நீமகிழ்வ தென்றோ சொலாய்
கஞ்சன் முதலோர்தொழக் கங்கைநதி சூழ்பெரிய
காசிவாழ் துண்டிராச
கணபதி யெனும் பெரிய குணமேரு வேஅருட்
கருணா நிதிக்கடவுளே. 4

தேவர்கண பதிவித்தி யாதரர்கள் கணபதி
சிவயோக முனிகணபதி
சித்தர் கணபதி பூதர் கணபதி ஞானமே
திகழ் இராக்கதர் கணபதி
கேவலம்இல் அசுரர்கண பதிகருடர் கணபதி
கிளர்தயித் தியர்கணபதி
கின்னரர்கள் கணபதி கிம்புருடர் கணபதி
கெந்தருவ ராம்கணபதி
பாவமறு போக பூமியர்கள் கணபதி அம்
பரத்தில் வாசிகள் கணபதி
பசாசர் கணபதி உடுக்கணபதி இயக்கர் கண
பதிஉரகராம் கணபதி
காவல் என்றுரை செய்பதி னென்கண பதிப்பெரிய
காசிவாழ் துண்டிராச
கணபதி யெனும்பெரிய குணமேரு வேஅருட்
கருணா நிதிக்கடவுளே. 5

இருவருக் கரிதாகி எங்கும்நிறை தந்தையாம்
ஏகபரி பூரணர்க்கும்
இந்த்ராதி முப்பத்து முக்கோடி தேவர்க்கும்
எண்ணிலா முனிவர்க்கும்
தருமணிக ளொளிவிடும் கணபணா டவிஉரக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சயனத்து மாமனார்க்கும்
சதுரா னனர்க்கும் எண்டிசை நாயகர்க்கும் வளர்
சகல புவனங்களுக்கும்
ஒருபூரணப் பிரமமே என்றுனைத் துதித்
துவப்போடு தங்கள் சென்னி
உபய கரமேற்கொண்டு குட்டியே நற்றொழில்கள்
ஒன்று செயல் வேண்மென்றால்
கருதரியநின்புகழை எளியனேன் அறிவனோ
காசிவாழ் துண்டிராச
கணபதி யெனும்பெரிய குணமேரு வேஅருட்
கருணா நிதிக்கடவுளே. 6

அண்ணா உன் அவிமுத்தம் அகலா திருந்தும்அரு
ளாங்கங்கை நதிபடிந்தும்
ஐங்கரத் தெய்வம்உன் அடித்தாமரைப் பூவை
அர்ச்சித் திருந்தும் அடியேன்
மண்ணாதி நாதாந்த மான தேகாதிப்ர
பஞ்சமெல் லாம்மறந்தே
மகோதய மனோலயா னந்தவாழ் வடையாமல்
மாளுமெய்ப் பிணியில் உற்றும்
எண்ணாத எண்ணங்கள் எண்ணியும் பகலிலே
இருளின் மூழ்கிக் கிடந்தும்
யான் என்றும் எனதென்றும் உன்னிலையை நாடியும்
ஏங்கியிடர் படல்நீதியோ
கண்ணாளனே உனைக்கண்டு குறைதீர அருள்
காசிவாழ் துண்டிராச
கணபதி யெனும்பெரிய குணமேரு வேஅருட்
கருணா நிதிக்கடவுளே. 7

உன்னுருவை யும்உனக் கிளையவன துருவையும்
உன்றந்தை யருளுருவையும்
உன்னன்னை உருவையும் உன்னடியார் உருவையும்
ஒன்றென்பன் இந்தவுருவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னம்என் கண்கொண்டு கண்டிடவும் மெய்யடியர்
ஏவல் செய்தே திரியவும்
இணையடிகள் என்சென்னி வைத்திடவும் அருள்பெறவும்
இன்ப வாரிதி மூழ்கவும்
அன்னை பிள்ளையைஆ தரிப்பதெனவே என்னை
ஆதரித் தேவல் கொளவும்
ஆசைவைத் தேன்இந்த ஆக்கைவிழு முனம்இந்த
ஆசைதீரப் பெறுவனோ
கன்னெஞ்சன் என்முன்பு நீவருவ தெந்தநாள்
காசிவாழ் துண்டிராச
கணபதி யெனும்பெரிய குணமேரு வேஅருட்
கருணாநிதிக்கடவுளே. 8

இரவில்லை பகலிலை இலாபமிலை சேதமிலை
இன்பதுன் பங்களில்லை
யானில்லை எனதில்லை இதமில்லை அகிதமிலை
எண்ணிசைகள் காலமில்லை
வரவில்லை போக்கில்லை பாவபுண் ணியம்இல்லை
மரணம் பிறப்புமில்லை
மண்ணாதி ஆசையிலை மனமான பேயில்லை
மலமாயை யில்லை என்று
பரவுபட் டப்பக லெனும்பெரிய உன்வடிவு
பார்த்திருக் கின்ற அடியார்
பாததா மரைபரவி நானும் அவர்போல் உனைப்
பார்க்கவரம் என்றருளுவாய்
கரதலா மலகம்என முத்தியருள் கங்கைசூழ்
காசிவாழ் துண்டிராச
கணபதி யெனும்பெரிய குணமேரு வேஅருட்
கருணாநிதிக்கடவுளே. 9

தேகபா ரம்பொறுக் கப்படுகு தில்லையென்
செய்குவேன் தெய்வமேஉன்
திருவடித் தாமரையை நம்பினேன் நீ அலால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்குவே றில்லை உலகில்
ஆகம் ஆகாதுசீ றென்றரு வருத்தபேர்க்
கருள்வேன் எனுஞ்சொல் பொய்யோ
ஐயஉனை மறவாத ஆநந்த வாழ்வன்றி
அமரர் வாழ்வும் விரும்பேன்
பாகமே யில்லாத நான் வாரணாசியில்
பரவும்ஒரு மணிகன்னிகைப்
பாகீரதிக்குள்ள நாயாச மாகமெய்ப்
பாரம்விடல் அருளளிப்பாய்
காக மாதியசரா சரம்எலாம் கதிபெறும்
காசிவாழ் துண்டிராச
கணபதி யெனும்பெரிய குணமேரு வேஅருட்
கருணா நிதிக்கடவுளே. 10

ஸ்ரீ காசி துண்டிராஜ கணபதி திருவருட் பா
முற்றிற்று.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








சமாதித் தினம் 09.12.2018

**மூக்குப் பொடி சித்தர் சாமிகள்**

எங்கள் காலத்தில் வாழ்ந்த சித்தரை
நினைந்து வழிபடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org